





# கிராம நலம்

மே 1968



ஆளுநர்
மாளிகையிலே...





## The Planters Stores and Agency Agents,
## Estate Supplies and Hardware Merchants.

**54, Mount Road, Coonor-2.**

**(The Nilgiris)**

Telephone : 2492. Telegrams : 'PLASA'

DEALERS in 'SIMCO' Agricultural Tools, Digging Forks, Hand Forks Mamooties, Alavangoes, Pruning Knives, Jungle Knives, Shovels, Rakes, etc— Polythene Films, Polythene Nursery Bags and Tubes, Insecticides, Fungicides, Acaricides and Weedicides—Engineering and Mechanical Tools, V/Belts, Tigs, Steel Pipes and Steam Pipes and Fittings, Asbestos sheets, Pipes, etc ,—Electrical Goods, Motor Pumps, etc., etc., ANIMAL AND POULTRY FEEDS, etc :—



போன் : 284 தந்தி : "குமரி பாங்க்"

## கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், நாகர்கோவில்.

கிளைகள் : மார்த்தாண்டம், தக்கலை.

திரு எல். ராமச்சந்திர நாடார்,
தலைவர்.

திரு ஜி. டானியல், பி.ஏ.,பி.எல்.,
உப-தலைவர்.

அதிகாரம் பெற்ற மூலதனம் .. 30 லட்சம்.
செலுத்தப்பட்ட மூலதனம் .. 24 லட்சம்
நல நடை முதல் மூலதனம் .. 2 கோடிக்கு மேல்.

கீழ்க்கண்ட வட்டி வீதங்களில் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

கரண்ட் டிபாசிட் ½% .. சேவிங்ஸ் டிபாசிட் 4%
சீசன் டிப்பாசிட்டுகள் ரூ. 10,000-ம், அதற்கு மேலும்.
15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 1½%
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3%
நிரந்தர டிப்பாசிட்டுகள் ரூ. 100-ம், அதற்கு மேலும் 5% முதல் 7½% வரை.

மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு போடும் நிரந்தர டிபாசிட்டுகளுக்கு, தமிழ்நாடு சர்க்காரின் உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது.

கே. எஸ். நமச்சிவாயம், பி. ஏ.,
துணைப் பதிவாளர், காரியதரிசி.

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 — மே 1968 — நெல் 8

# தலைவாயிலின் திறவுகோல்

திரு. ஜெகஜீவன்ராம், மைய அரசு உணவு-வேளாண்மை, சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சர்,)

"இந்தியாவின் அமைப்புக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். எனவே தேசிய வளர்ச்சிக்கான எந்தத் திட்டத்திலும் கிராம மக்களின் ஈடுபாடு மிக முக்கிய மாகும்.

கிராமப் புறங்களின் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் நம் நாட்டு மக்களின் பங்கு இருக்க வேண்டும் என்ற அடிப்படையான எண்ணத்துடன், சமுதாய நலத் திட்டங்கள் உருவாகின.

கிராம மக்களின் ஈடுபாடு.

கிராம மக்களின் தொடர்பின்றியும் அவர் களுக்கு மனநிறைவு அளிக்காவண்ணமும் வளர்ச்சித் திட்டங்கள் அமைந்தால், அத்திட் டங்களால் கேடுதான் விளையும், ஆகவே, நமது குறிக்கோள், சமுதாய நலத் திட்டங் களில் கிராம மக்கள் உணர்ச்சிப் பூர்வமா கவும் ஆக்க உணர்வோடும் ஈடுபடவேண்டும் என்பதாகும்.

சமுதாய நலத் திட்டங்களிலும், பிற ஜன நாயக அடிப்படையானத் திட்டங்களிலும், கிராம மக்களின் ஆர்வமும் ஈடுபாடும் எந்த வகையிலும் குறைந்துவிடக்கூடாது—குறைத்து விடவும் கூடாது என்பதை 1952-ம் ஆண்டில் சமுதாய நலத் திட்டங்கள் தொடங்கிய பொழுதிலிருந்தே எல்லா சந்தர்ப்பங்களிலும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் கடமையுணர் வோடு கருதி வந்துள்ளனர். அந்த உணர் வுடன் செயலாற்றி வந்துள்ளனர்.

அண்மைகாலங்களில் கூட, சமுதாய நலத் திட்டம், பஞ்சாயத்து ராஜ்யம் முதலிய வைகளைப்பற்றி பல கேள்விகள் எழும்பின. நம்முடைய குறிக்கோள்கள் நல்ல முறையில் நிறைவேறுகின்றனவா என்பவை பற்றிய அந்தக் கேள்விகளுக்கு உடனடியாக விடை களும் கிடைத்தன. அதனால் அந்தக் கேள்விகள் தொடக்கத்திலேயே நின்றுவிட்டன.

அந்த வினாக்களுக்கு கிராம மக்கள் அளித்த விடை, கிராம ராஜ்யம் சமுதாய நலத் திட் டங்களில் காட்டிய ஈடுபாடுதான்.

நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்களை மனமகிழ்ச்சியோடு நமது மக்கள் ஏற்க முன் வந்துவிட்டனர். பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்.

கிராம மக்கள்தான் வளர்ச்சித் திட்டங் களின் உரிமையாளர்கள் என்ற உண்மை புலப்படத் தொடங்கியது. அது மட்டுமல்ல; கிராம மக்களின் வெற்றி, தேசிய முக்கியத்

துவம் வாய்ந்ததுடன், நாட்டின் எல்லாத் திட்டங்களுக்கும் நல்வாழ்வுக்கும் அடிப்படை பயன் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளது.

சமுதாய நலத் திட்டம்—பஞ்சாயத்து ராஜ்யம் முதலியன சில நிலைகளில் ஆரம்பநிலை அமைப்புகளாகத் தோன்றலாம். ஆனால், சமுதாய நலத் திட்டம் கிராம ராஜ்யம் ஆகிய வற்றில் ஏற்படும் சிக்கல்களும் தடங்கல்களும் நாட்டின் எல்லாத் திட்டங்களிலும் பிரச்னைகளிலும் எதிரொலிக்கும்.

ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் :

கடந்தகால அனுபவங்களை வைத்தும் நடைமுறைய நிகழ்ச்சிகளை வைத்தும் நான் முழு மனதுடன் நம்புகிறேன்.

சமுதாய நலத் திட்டங்கள், கிராம வளர்ச்சித் திட்டங்கள் முதலியனவற்றின் வெற்றியில் எள்ளளவும் ஐயம் தேவையில்லை. அதே நேரத்தில் இப்பொழுது நமக்கு ஏற்பட்டுள்ள பல பிரச்னைகளால் வெற்றியை ஈட்டிட நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதையும் நாம் மறைப்பதற்கில்லை.

நாட்டின் நல்வாழ்வுக்காக காலவேகத்தால் ஏற்படும் எந்த அறைகூவலையும் கிராம மக்கள் ஏற்க முன்வந்துவிட்டார்கள்.

ஜனநாயகம்—நல்வாழ்வு இவைகளின் தலைவாயிலின் திறவுகோல் கிடைத்துவிட்டது.

சமுதாய நலத் திட்டம்—கிராம ராஜ்யம் முதலியவற்றில் கிராம மக்கள் காட்டும் ஈடுபாடும், ஒத்துழைப்பும் சமுதாய நலத்துக்கும் ஜனநாயகத்துக்கும் செழுமையை—பொலிவை உருவாக்கி வருகிறது.

ஆமாம், நமக்குகிடைத்துள்ள தலைவாயிலின் திறவுகோல் காட்டும் காட்சி அதுதானே!''

(From " KURUSHETRA ")


விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் – இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை.
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

ஒற்றுமைச் சங்கநாதம் :

[1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி சென்னையில் சீக்கியர் கோயிலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் சாரத்தை, தமிழில், கீழே கொடுத்துள் ளோம். வீரர்களின் பாசறை—தியாகச் செம்மல்களின் கோட்டம், பஞ்சாப் மாநிலம். நாட்டின் வளர்ச்சிக்கு சீக்கிய சமுதாயம் ஆற்றியுள்ள பணிகள்—அச்சமுதாயம் போற்றி வளர்க்கின்ற வாழ்க்கை நெறிகள்—இவைபற்றி தன்னுடைய கருத்தாழம் நிறைந்த உரையில், அழகாகச் சொல்கிருர், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள். இந்தச் சொற்பொழிவில் கண்டுள்ள மையக்கருத்து—தமிழ் மக்களுக்கும் சாலப் பொருத்தமுடையது என்பது மட்டுமல்ல; அனைவரின் சிந்தனையில் தேக்கி வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்ருகும்—ஆசிரியர்.]

# மூன்று உண்மைகள்...

[சீக்கிய சமுதாயப் பண்பாடுகள்.]

"புனிதமும் முக்கியத்துவமும் பொருந்திய 'வைசாகி' தினமாகிய இப்பொன்னுளில், என்னுடைய தோழமை கலந்த நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்சா இயக்கம் உதயமான நன்னுள் இன்று. பெருமகிழ்ச்சி அளிக்கின்ற புனிதத் திருநாள் இது. சீக்கியப் பெருமக்களின் பெருமைமிகு பாரம்பர்யத்தை நினைவூட்டும் இத்திருநாள், சமுதாயத்திற்கும், நாட்டின் நல்வாழ்வுக்கும் நீங்கள் உங்களையே மறுபடியும் மறுபடியும் அர்ப்பணித்துக்கொள்கின்ற புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் உங்களிடையே ஊட்டுகின்ற நன்னுளாகும்.

அடிப்படை இலட்சியங்கள் :

இன்றைக்கு 269 ஆண்டுகளுக்கு முன்னுல், "கல்சாபந்த்" (Khalsa Panth) இயக்கத்திற்கே புனிதத்துவமும் புதுப்பொலிவும் அளிக்கின்ற வகையில், சீக்கியப் பெருமக்களின் 10-வது மத குருவான குருகோவிந்த சிங், ஓர் அற்புதமான பணியைப் புரிந்தார். கல்சாபந்த் எடுத்துக் கூறும் உண்மைகள்—எக்காலத்திற்கும் பொருத்தமானவை; காலத்தால் அழிக்க முடியாத அமரத்துவம் வாய்ந்த உண்மைகள்; கருத்துக் கருவூலங்களாகும் அவை. பல்வேறு வகுப்பினர்களிடையேயிருந்து, அதுமட்டுமல்ல, நாட்டின் பல்வேறு



பகுதிகளிலிருந்து, அவர், தன்னைப் பின்பற்றும் 5 தொண்டர்களைத் தேர்ந்தெடுத்தார். குறுகிய மனப்பான்மை—தனக்கென்று வகுத்துக் கொண்ட, கோடிட்டு வரையறுக்கப்பட்ட சுயநலம்—இவை அத்தனையையும் தகர்த்தெறிந்து விட்டு, 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற சீரிய தத்துவத்தின் விடிவெள்ளியாக, அச்செய்கை பரிணமித்தது. 'எல்லோரும் ஒரு குலம்' 'எல்லோரும் என் உடன் பிறந்தோர்' என்ற பரந்த நோக்கம்—அந்த நோக்கத்தின் அடிப்படையாகத் திகழ்கின்ற சேவை உள்ளம்—தொண்டுள்ளம்—கல்சா இயக்கத்தின் கருவூலங்களாகத் திகழும் இச்சீரிய அடிப்படை உண்மைகள்—இன்றைய உலக வாழ்க்கையோடு ஒட்டிப் போவதல்லாமல், பழங்காலப் பாரம்பரியத்தின் நிலைக்களன்களாகவும் நின்று ஒளி வீசுகின்றன. சமூக நீதி—சமுதாயத்தில் ஒருவருக்கு ஒரு நீதி, இன்னொருவருக்கு ஒரு நீதி என்றில்லாத நிலை—பொய்மைக்கு அஞ்சாமல்—உண்மைக்காக இறுதிவரை போராடுகின்ற உறுதி—ஏற்றுக்கொண்டுள்ள இலட்சியத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை—பிடிப்பு—சக்தி பொருந்திய நெஞ்சுரம்—பாசம், பரிவு காரணமாக தோன்றுகின்ற அனைவரும் ஒன்று என்ற ஒன்றுபட்ட உணர்வு—பொது வாழ்விலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி-அப்பழுக்கற்ற

தூய்மை நெறி—இந்த இலட்சியங்கள்—இந்த அடிப்படைத் தாரக மந்திரங்கள்—கல்சா இயக்கத்தின் புனிதப் பிதாமகன்—வீரத் திருமகன்—குருகோவிந்த் சிங்கின் வாழ்வின் இலட்சிய முரசங்களாகும்.

என்றுமில்லாத அளவில், இன்றைய நவீன உலகில்தான், இந்த உண்மைகள்—இந்த உணர்வுகள்—இந்த கருத்துக்கள்—நமக்கு மிக மிக தேவையாக இருக்கின்றன. 'தேசிய ஒருமைப்பாடு' என்பது வெறும் வாய்க்கூச்சலாக இல்லாமல், வெறும் கோஷமாக நின்று விடாமல், அது அடிப்படையில் உண்மையானது—செய்து முடிக்கக்கூடிய ஒன்று என்ற நிலை மலர வேண்டுமானால்—நீதியும் சமத்துவமும் வெறும் கோஷங்களாக சில பேர் கைகளில் மட்டும் அகப்பட்டுக்கொண்டு உருளும் பகடைக் காய்களாக இல்லாமல்—சமுதாயம் முழுமையும் நல்ல முறையில் ஊடுருவி, ஒவ்வொருவரின் இதயநாடியையும் தடவுகின்ற ஓர் அற்புத நிலை மலர வேண்டுமானால்—கல்சாபந்த இயக்கம் நம்முன் வைத்துள்ள அரும்பெரும் உண்மைகளான, சுதந்திர உணர்வு—வாழ்க்கையில் தூய்மை—'எல்லோருக்கும் எல்லாம்' என்ற பொது நோக்கு—என்றுள்ள இந்த மூன்று அடிப்படை இலட்சியங்கள், நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையையும்—பொது வாழ்க்கையையும் நடாத்திச் செல்கின்ற மூலாதாரக் கொள்கைகளாக அமைய வேண்டும். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் பெருமகன் ஒருவன் பாடினான், ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று. யாவரும் உடன் பிறந்தோர் என்ற இந்த உணர்வு—இந்த உயரிய பண்பாட்டுணர்ச்சி—கல்சா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையிலே எதிரொலிக்கிறது கண்டு நான் பெருமிதமும் பெருமகிழ்வும் கொள்கிறேன்.



உண்மையுடன் உழைக்கும் சமுதாயம் :

கல்சா இயக்கம் சீக்கிய மக்களிடையே தோற்றுவித்த கட்டுப்பாடு உணர்வு—நாட்டின் நல்வாழ்விற்காக, சீக்கிய சமுதாயம் பெரும் பணி ஆற்றுகின்ற நல்வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. நாட்டின் பாதுகாப்புப் பணிகளில் சீக்கிய சமுதாயத்தின் பங்கு மகத்தானது, எல்லையற்றது, போற்றிப் புகழத்தக்கது. பல நூற்றாண்டுகளாகவே சீக்கிய சமுதாயம், நாட்டின் பாதுகாப்புப் பணியில் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு, வரலாற்றுப் புகழ் பெற்றுள்ளது. போர் முனையில் மட்டும் சிறந்த போர் வீரர்களாக திகழ்வது என்பதல்லாமல்—அமைதி காக்கும் அறப்பணியிலும் அவர்கள் தலை நிமிர்ந்து உள்ளனர். சுறுசுறுப்பு, செயல் திறமை, செய்கின்ற பணியில் காட்டுகின்ற சலியாத ஆர்வம்—விவசாயத் துறையில் விஞ்ஞான ரீதியில் முற்போக்கு முறைகளைக் கையாளுதல்—ஆகிய வழிகளில், பஞ்சாப் மக்கள், தங்களுக்கென்று ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளனர். நவீன இயந்திரங்களின் மூலம் விவசாயம் செய்வதிலும்—விவசாயத் துறையில் நவீன முறைகளைக் கையாள்வதிலும்—அவர்களுடைய திறமையும் ஆர்வமும்—உற்சாகமும், அவர்களுக்கு அமோக பலன்களை அளித்திருக்கின்றன.


உணவு உற்பத்திப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில், விவசாயம் செய்கின்ற நிலங்களை ஒன்றுபடுத்தி—நல்ல முறையிலே அதிக விளைச்சல் காண்கின்ற பஞ்சாப் மாநிலத்தைக் கண்டு உண்மையில் பெருமிதமும், பூரிப்பும் கொள்கிறேன். உங்களுக்கே இயற்கையாக உள்ள தொழில் ஆர்வம், துணிந்து செயலாற்றுகின்ற மனத்திண்மை—இவைகளின் காரணமாக சிறு தொழில் வளர்ச்சியிலே நீங்கள் அடைந்துள்ள பெரும்வெற்றி—இவையெல்லாம்—உங்களுடைய சலியாத உழைப்பின்—ஆர்வத்தின்—பிரதிபலன்களே அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? அதனால்தான், நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்காக நீங்கள் நல்ல பல ஆக்கப் பணிகளை புரிய முடிகிறது.

கட்டுப்பாடு, கடமை, தியாகம்—மூன்று அடிப்படைகள்

தனிப்பட்ட மனிதன் என்ற முறையில் வாழ்வில் முன்னுக்கு வரவேண்டும் என்பதிலே உங்களுக்கு உள்ள துடிப்பு—சமூக ஒருமைப்பாட்டிலே உங்களுக்கு உள்ள அசைக்கமுடியாத உறுதி—நாட்டின் மீது நீங்கள் கொண்டுள்ள தூய்மையான பற்றும், பாசமும்—இந்த மூன்றும், மற்ற எல்லா மக்களும், உங்களிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டிய, கடைப்பிடிக்க வேண்டிய உண்மைகளாகும். அசைக்கமுடியாத நெஞ்சுறுதி—தன்னலமற்ற சேவை, உயிரைத் திரணமாக மதித்துப் போராடும் தியாக உணர்வு—இம் மூன்றையும் தன் அடிப்படைக் கருவூலங்களாகக் கொண்டுள்ள கல்சா இயக்கம், நாட்டிற்கும் மக்களுக்கும் அளிக்கும் செய்தி ஒன்றுள்ளது. மனிதனின் எதிர்கால நல்வாழ்வு—நாட்டின் முன்னேற்றம்—இவை இரண்டுக்கும் அடிப்படையாக வேண்டியது—கட்டுப்பாடு, கடமை உணர்வு—தன்னைத்தானே அதற்காக அர்ப்பணித்துக் கொள்கின்ற தியாக உணர்வு—ஆகிய மூன்றுமே என்பதைத்தான், கல்சா இயக்கம் நாட்டிற்கும் மக்களுக்கும் பறைசாற்றிக் கொண்டு வருகிறது''.

—o—

**தஞ்சைத் தரணியின் விவசாயப் பெருங்குடி மக்கள் கடந்த ஆண்டு ஆடுதுறை 27 நெல் ரகத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்கிய சாதனே, இந்திய விவசாய வரலாற்றிலேயே பெருமைக்குரிய நிகழ்ச்சி யாகும். அந்தப் புதிய சரித்திரத்தைப் படைத்த உழவர் பெருங்குடி மக்கள், இன்னுெரு சரித்திரம் படைக்க, சாதனேயை உருவாக்க, அன்புடன் அழைப்பு விடுக்கிருர், மாண்புமிகு தமிழக அரசு வேளாண்மைத் துறை அமைச்சர்.**



# பொன்னி வளநாட்டினரே புறப்படுவீர்!

**(மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி)**

" அன்புக்குரியோரே!

"வளங்கொஞ்சும் தஞ்சை உழவர் பெருங் குடி மக்களே,

"பொன்னிவள நாட்டில் செந்நெல் கொழித் திட உழுபடை வீரர்களே, உங்களே அன்புடன் அழைக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 441 முன்னணி விவ சாயிகள் 5000 ஏக்கர் நிருபணே பண்ணே களில் ஆடுதுறை 27 அற்புத நெல்லே வெற்றி கரமாக விளேத்து தமிழகத்தின் மற்ற மாவட் டங்களுக்கு மட்டுமல்லாமல், இந்திய துணைக் கண்டம் முழுவதிலும் இந்நெல்லின் அருமை பெருமைகளே உணர வழிகாட்டியுள்ள உங்களே அழைப்பதில் பெருமைப்படுகிறேன்.

**கடந்த கால சோகக் கதை**

1965-ம் ஆண்டு மே மாதத்தில் சிறந்த நெல் வித்தான ஆடுதுறை 27 வெளியிடப் பட்டதிலிருந்து, நிச்சயமற்ற காலநிலே பல கோணங்களிலும், நிலேகளிலும் இதன் சிறப் பியல்புகளே சோதனேக்கு உள்ளாக்கியதை அறிவீர்கள்.

1965-ம் ஆண்டில் மேட்டூர் அணே ஜுன் மாதம் 12-ம் தேதி திறக்கப்பட்டதால் ஆடுதுறை 27 நெல் சரியான பருவத்தில் நாற்று விடப்பட்டு 5000 ஏக்கரில் நடவு செய்யப்பட்டது. ஆனுல் பயிர் நல்ல வீரியத் துடனும், செழிப்புடனும் வளர்ந்த நேரத்தில் பருவமழை தவறியதால், வாய்க்கால்களில் நீரோட்டம் மிகவும் குறைந்து விட்டது. அதனுல் கொடுமையான வரட்சிக்கு பயிர் உள் ளாகியது.

நாகப்பட்டினம் பகுதியில் தவிர்க்க முடியாத நிலேயில் பல விவசாயிகளின் பயிர்கள் ஒரு மாத காலத்துக்கு மேல் வரட்சியால் பாதிக் கப்பட்டுவிட்டன. இந்த இடையூறையும் மீறி 5000 ஏக்கரில் ஆடுதுறை 27 நெல் ஏக்கர் ஒன்றுக்கு 3857 பவுண்டு சராசரி விளேச்சல் கொடுத்ததை நீங்கள் பார்த்தீர்கள். அதே நேரத்தில் மற்ற ரகங்களுக்குக் கிடைத்த கிடைத்த விளேச்சல் 2301 பவுண்டுதான்.

இந்த அனுபவம் கொடுத்த நல்ல நம்பிக்கை யினுல்தான் அடுத்து வந்த ஆண்டில் இந்த நெல்லே இரண்டு லட்சம் ஏக்கர் குறுவையில்

விஸ்தரிக்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசுடன் தஞ்சை விவசாயிகளாகிய நீங்கள் ஈடுபட்டீர்கள். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் செய்து முடிக்கப்பட்ட கட்டத்தில் இயற்கை நம்மை கைவிட்டு விட்டதை அறிவோம். அவ்வாண்டு 21-7-1966-ல் தான் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி சிறப்பாக நடைபெறக்கூடிய நாற்பது பொன்னான நாட்களை இழந்தோம். இருப்பினும் ஆடுதுறை 27 நெல்லின் வெற்றியில் நீங்கள் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையே குறுவைப் பட்டத்தை தள்ளிப்போய்விட்டாலும், சம்பா பட்டத்திலேயே குறுவை நிலங்களில் இந்நெல்லை சாகுபடி செய்யும், துணிவை உங்களுக்குக் கொடுத்தது. இந்த சோதனை போதாதென்று மீண்டும் அறுவடை நேரத்தில் சாதாரணமாக 8 அங்குல மழை பெய்யக்கூடிய அந்த மாதத்தில் எதிர்பாராத விதமாக 28 அங்குலத்திற்கு மேல் அடைமழை பெய்து பெருத்த வேதனையை விளைவித்தது. அந்த சூழ்நிலையில் ஆடுதுறை 27 நெல்லுக்குப் பதிலாக ஆடுதுறை 3 அல்லது ஆடுதுறை 20 நெல்லை சாகுபடி செய்திருப்பீர்களானால், இயற்கை செய்த கொடுமை உங்களுக்கு பேரிழப்பையல்லவா கொடுத்திருக்கும்.

அவ்வாண்டு ஒரு லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 20, ஆடுதுறை 3 போன்ற இதர ரகங்களை சாகுபடி செய்தவர்களை. ஏக்கருக்கு சராசரி 1200 பவுண்டே கண்டு முதல் செய்த தார்கள். ஆனால் 2 லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 27, ஏக்கருக்கு சராசரி 3300 பவுண்டு விளைந்து நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தது.

**வரலாறு படைத்திட்ட நிகழ்ச்சி**

இந்த அனுபவங்களினால் பின்னர் 1967-ல் அரசாங்கம் மேற்கொண்ட ஒரு போக சம்பா நிலங்களிலும் இருபோக சாகுபடி செய்யும் திட்டத்தை நீங்கள் வரவேற்பதற்கு நல்ல அடிப்படையாக அமைந்தது. அவ்வாறே வழக்கத்திலுள்ள இருபோக சாகுபடியை இரட்டிப்பாக்கி பெருமையைத் தேடிக்கொண்டீர்கள். இது உழவியல் சரித்திரத்திலேயே எங்கும், என்றும், கேட்டும், கண்டும் இராத பெரும் சாதனையாகும்.

சென்ற ஆண்டும் பருவ மழை காலந்தவறியதனால், ஜூலை மாதம் 3-ம் தேதிதான் மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது. குறுவை போகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கத்தைவிட மழையும் குறைவு. இருந்த போதிலும் மனந்தளராது இவ்வரிய சாதனையை செய்து முடித்தீர்கள். உங்களின் இவ் வரலாற்றுப் பெருமைவாய்ந்த பெருமுயற்சிக்கு சிறப்பளிக்கும் வகையில் எல்லா தேவைப் பொருட்களையும் கடன் வசதியுடன் தக்க நேரத்தில் போதுமான அளவிற்கு கொடுக்கும் பெரும் பணியை அரசாங்கம் செய்ததை நீங்கள் அறிவீர்கள்! மகிழ்ச்சியோடு நன்றியும் தெரிவித்துக் கொண்டீர்கள்.

நீங்கள் அசாதாரண சூழ்நிலையிலும் உற்பத்தியைத் தொடர்ந்து கூடுதலாக்கி வருகிறீர்கள். இப்பாராட்டுக்குரிய அந்தச் சாதனையை பெரும் சிரமத்துக்கிடையே நீங்கள் சென்ற பருவத்தில் செய்து முடித்திருக்கும்போது, இவ்வாண்டு இதனிலும் அரிய செயலை, சென்ற ஆண்டின் அனுபவத்தின் துணைகொண்டு சாதிக்கப் போகிறீர்கள் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

சாதாரணமாக காவிரி டெல்டாப் பகுதியில் கோடை மாதங்களில் 6—லிருந்து 7 அங்குல மழை பெய்வது உண்டு. சென்ற மூன்று ஆண்டுகளில் கோடை மழை மிகமிகக் குறைவு. இவ்வாண்டு கோடை மழை வழக்கமான அளவைவிட கூடுதலாகப் பெய்திருப்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆகவே இவ்வாண்டு நல்லதொரு சாகுபடி பருவம் தொடங்க இருக்கிறது என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். மேட்டூர் அணையில் தண்ணீர் மட்ட அளவு சென்ற பத்து நாட்களில் 12 அடியிலிருந்து 25 அடிக்கு இன்று உயர்ந்து இருப்பதைக் காணும்போது உவகையும், உற்சாகமும் ஏற்படுகிறது.

**நினைவில் கொள்ளுங்கள்**

பாசனத்திற்குத் தண்ணீர் உரிய காலத்தில் திறந்துவிடப்படும் என்ற ஆசை கலந்த நம்பிக்கையுடன் உங்களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்.

நீங்கள் நெடுங்காலமாக செய்து வரும் இருபோக நிலங்களில் குறுவை சாகுபடியையும் அடுத்து செய்யப்படும் தாளடிக்கான ஏற்பாடுகளையும் எக்காரணத்தை முன்னிட்டும் மாற்றத் தேவை இல்லை.

வருகிற ஜூன் 20—ம் தேதிக்குள்ளாக வழக்கமான குறுவை நாற்றங்காலை விதைத்து

[16-ம் பக்கம் பார்க்க]

# நகராட்சித் தலைவர்கள் —ஆணையாளர்கள் கூட்டுமாநாடு

நகராட்சி மன்றத் தலைவர்கள், ஆணையர்கள் கூட்டு மாநாடு சென்னை பாலர் அரங்கில் 1968 மே 11, 12 நாட்களில் நடைபெற்றது.

தமிழ்நாடு நகராட்சி மன்றத் தலைவர்கள் பேரவைத் தலைவர் திரு சிவகாமிநாத பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர். ஆணையர்கள் சங்கச் செயலாளர் திரு காளி நாடார் ஆணையர்கள் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினர்.

மாநாட்டில் நகராட்சி மன்றத் தலைவர்கள், ஆணையர்கள் ஒவ்வொருவரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

மாநாட்டினை தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணநிதி அவர்கள், மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு சாதிக் பாட்சா முதலியோர் சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

### உள்ளாட்சி மன்றங்கள்—செயற்களங்கள்

" நகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்கள் கொள்கை வகுக்கும் இடங்கள் அல்ல. சட்ட மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்தும் களங்கள் தாம் அவை " என்பதை மாநாட்டில் சிறப்புரை யாற்றிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி அவர்கள் அழகுற எடுத்துரைத்தார்.

"நகராட்சிகள் ஜனநாயகத்தின் தொட்டில்கள். இந்த ஜனநாயக முறையை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழக மக்கள் ஏற்படுத்தி அனுபவித்திருக்கிறர்கள்.

"ஜனநாயக முறையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பன போன்ற முறைகள் தமிழர்கட்குப் பயன்பட்டன" என்று தமிழிலக்கியங்கள் தரும் காட்சிகளை எல்லாம் எடுத்து அமைச்சர் தமக்கே உரிய முறையில் விளக்கினர்.

அமைச்சர் விளக்கிய ஓர் இலக்கிய காட்சி இது—

போர்க்களத்தில் வீரன் ஒருவன் மாண்டு கிடக்கிருன். அவனது பிணத்தைக் களத்திலே உள்ள கழுகு ஒன்று கொத்தித் தின்கிறது. கழுகு களத்தில் மாண்டு கிடக்கும் வீரனைக் கொத்தித் தின்பது எப்படியிருக்கிறது என்றால் குடவோலையில்போட்ட சீட்டுகளை எடுப்பதுபோல இருக்கிறது.

குடவோலையில் போடப்பட்ட சீட்டுகளை கையை விட்டு எடுக்கும்போது எப்படி ஒவ்வொரு ஓலையாக வருமோ அதைப்போல மாண்ட வீரனின் குடலைக் கழுகு குத்தி ஒவ்வொரு குடலாக உருவிக்கொண்டிருக்கிறது

குடவோலை முறை தமிழகத்தில் நன்கு பரவியிருந்தது."

ஜனநாயக முறைகளை தமிழர்கள் எப்படி எப்படியெல்லாம் வளர்த்திருக்கின்றனர் என்பவைகளுக்கு அமைச்சர் எடுத்துரைத்த இலக்கிய காட்சிகள் சான்று பகர்ந்தன.

மேலும் பொதுப்பணி அமைச்சர் அவர்கள் "நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் தலைவர்கள், ஆணையர்கள் எலியும் தவளையும் காலைக் கட்டிக் கொண்டது போல இருக்கக் கூடாது. ஜோடிப் புருக்களுக்குள்ள ஒற்றுமையுடன் அவர்கள் இயங்க வேண்டும்.

தலைவரும் ஆணையரும் இணையாக போனலும் சிலர் ஏதாவது பேசுவார்கள். நான்கு நாட்களுக்கு அவர்கள் கூடிப் போகாவிட்டாலும் ஏதாவது பேசுவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினர்கள்.

நகராட்சித் தலைவர்கள் — ஆணையர்கள் அகலாது அணுகாது பணியாற்ற வேண்டும். நெருப்பை நாம் நேரடியாகத் தொடுவதில்லை. ஆனல், அருகே இருந்து அதன் தன்மையை அனுபவிக்கிறோம். அதனைப் போல நகராட்சித் தலைவர்கள்—ஆணையர்கள் அகலாது அணுகாது மக்களின் வசதிகளை பெருக்கவும் செயல் திட்டங்களை நிறைவேற்றவும் பாடுபட வேண்டும். போட்டத் திட்டங்களை நிறைவேற்றும் செயற் களங்கள் உள்ளாட்சி மன்றங்கள். அதற்கு கட்சி சார்பு தேவையில்லை. உள்ளாட்சி மன்றங்களில் கட்சிக் கண்ணேட்டத்திற்கு இடமே இல்லை, அது கூடவே கூடாது" என்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் விளக்கினர்.

### நகரச் சீரமைப்பு தீவிரமாகட்டும்

மாநாட்டில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் சுகாதார முறைகளில் நகராட்சிகள் தீவிரமாக கவனம் செலுத்தவேண்டியது பற்றியும், கலப்படச் சட்டம், நகரமைப்பு சட்டங்களில் செலுத்தவேண்டிய கவனம் பற்றியும் எடுத்துரைத்தார்.

"கல்வி சுகாதாரம் குடிதண்ணீர் திட்டங்கள் நகராட்சிகளுக்கு உரியவைகளாகும். மிகவேகமாக திறமையாக

மக்களின் வாழ்க்கைக்கு ஏற்ற திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு நகராட்சிகளிடம் உள்ளது.

சில பணிகளில் நகராட்சிகள் இன்னும் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் நல்ல முறையில் நடக்க எல்லா நகராட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்" என்றும் சுகாதார அமைச்சர் வலியுறுத்தினர்.

**அரசியல் பண்ணைகள் போர்க்களங்கள் அல்ல**

"உள்ளாட்சி மன்றங்கள் அரசியல் வாதிகளைத் தயாரிக்கும் பண்ணைகளாக அமையலாம். ஆனால் அவை அரசியல் போர்க்களங்களாக அமைதல்கூடாது" என்பதை மாநாட்டை தொடங்கிவைத்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் வலியுறுத்தினர்.

"ஆட்சியில் எந்தக்கட்சி இருந்தாலும் அரசு தயாரித்துக் கொடுக்கும் திட்டங்களை நகராட்சிகளும் ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களும் திறமையுடன் செயல்படுத்த வேண்டும்"

"அரசியல் ஆசாபாச உணர்ச்சிகளுக்கு நகராட்சித் தலைவர்கள் இடம் கொடுக்கக்கூடாது. நகராட்சித் தலைவர்கள் ஆணையர்கள் ஒரு வருக்கொருவர் ஒன்றுபட்டு காரிய மாற்றவேண்டும்."

எங்கே குடிதண்ணீர்த் திட்டங்களை அமுல்படுத்தினேமோ அங்கெல்லாம் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் நோய் பரவ காரணமாகிவிடும் என்பதையும் உள்ளாட்சித்துறை அமைச்சர் எடுத்துரைத்தார்.

"கல்வியைப் பொறுத்தவரையில் மக்களிடம் ஒருமனக்குறை இருக்கிறது. நகராட்சி நடத்தும் பள்ளிகளில் கல்வியின்தரம் மற்ற பள்ளிகளின் கல்வித் தரத்திற்கு ஈடாகவில்லை. என்பதுதான் அந்தக்குறை. அதை கவனத்தில் வைத்து கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டும்" என்றர் அமைச்சர்.

நகராட்சிகளின் வருவாயைப் பெருக்க நகரப்பேருந்து போக்குவரத்தை நடத்துவது திரைப்பட அரங்கை நடத்துவது போன்றவற்றில் அவசரமுடிவு எடுக்க இயலாமையைப் பற்றியும் உள்ளாட்சித் துறை அமைச்சர் விளக்கினர்.

மாநில நகராட்சி ஆணையர்களின் சங்கச் செயலாளர் திரு. எஸ். காளி நாடார் தமது வரவேற்புரையில் நகராட்சியின் ஊழியர்களின் நியமனங்களுக்குத் தேர்வு செய்வது ஒரு மத்தியநிறுவனம் மூலமாகவும், பதவி உயர்வுகள் மாநில, மாவட்ட அடிப் படையிலும், ஓய்வுக்கால ஊதியமும் இருக்கவேண்டியதின் அவசியமும் சிந்திக்கத்தக்கது என்று கூறினர்.

1968–69 ஆண்டுக்கு நகராட்சி மன்றங்களின் தலைவர்கள் சங்கத்திற்கு, திரு சிவகாமிநாத பிள்ளை தலைவராகவும். திரு கே. தர்மராஜ பிள்ளை உப தலைவராகவும், திரு எம். எஸ். மகராஜ பிள்ளை செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

—நமது நிருபர்.


பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தின்
விவசாய, தொழிற் துறைகளின் வளர்ச்சித் திட்டங்கள்
வெற்றியடைய வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

**நடேசன் இண்டஸ்ட்ரீஸ்**

மோட்டார் கார் பாகங்கள் தயாரிப்பாளர்கள்.

தொழிற்சாலை :

**சோழிங்கநல்லூர்**

தலைமை அலுவலகம் : தேனாம்பேட்டை, சென்னை-18.

# எழுத்தாளர் கார்க்கி

—அகிலன்

"ஏதாவதொரு மாயா ஜாலத்தால் இந்த உலகம் முழுவதையுமே விடுதலை பெறச் செய்து என்னையும் விடுவித்துக் கொண்டு, அந்த விடுதலை களியாட்டத்தில் உலகத்தோடு ஒன்று சேர்ந்து ஆனந்தக் கூத்தாடவேண்டும் என்ற பேராசை என்னை உந்தித் தள்ளியது. இந்த மண்ணின் மீது வாழும் மக்களனைவரும் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பைக் கொடுத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு, துணிவோடும் அழகாகவும் இன்பமாகவும் வாழச் செய்ய வேண்டுமென்று நான் ஆசைப் பட்டேன்...."

இப்படி ஆசைப்பட்டவர் வேறுயாருமல்ல; உலகப் பெரும் எழுத்தாளர்களில் ஒருவரான ருஷ்ய நாட்டுப் பேராசிரியர் மாக்சிம் கார்க்கிதான். இந்த ஆசை அவருக்குள் கனலாக மூண்டெழுந்தபோது அவருக்கு இருபது வயதுகூட நிரம்பவில்லை. அவரது சுயசரிதையின் இரண்டாம் பாகமான 'இந்தஉலகத்தில்' என்ற நூலின் கடைசிப் பக்கத்தில் அவரது இந்த இலட்சியம் வெளிப்படுகிறது.

அவர் இவ்வாறு ஆசைப்படுவதற்குக் காரணமென்ன? இப்படி ஒரு நோக்கம், ஒரு குறிக்கோள், அந்த இளம் பிராயத்திலேயே அவருக்குள் எப்படிக் குடி புகுந்தது?.. இவ்வளவுக்கும், இன்று உலகம் புகழும் அந்த மாபெரும் எழுத்தாளர் மழைக்கு ஒதுங்கிய அளவுக்கே பள்ளிக் கூடத்தில் ஒதுங்கி வெளியில் வந்தவர். மேற்படிப்புப் படிக்க வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் அது நிறைவேறவில்லை.

**வாழ முயன்றபோது..**

என்றாலும் அவர் பெற்ற கல்வியின் ஆழமும் பரப்பும் இந்த உலகில் வெகு சிலருக்கே கிடைக்கக் கூடியவை. இளம்பிராயத்தில் வாழ்க்கையில் அவர் பெற்ற கொடுமை நிறைந்த அனுபவங்களை யாரும் எந்தக் கல்லூரியிலும், எந்தப் பல்கலைக் கழகத்திலும் பெற்றிருக்க முடியாது. 1868-ல் ஓர் ஏழைத் தச்சருக்கு மகனாய்ப் பிறந்து, முதலில் தகப்பனாரையும் அடுத்துத் தாயாரையும் பறிகொடுத்து விட்டு அநாதையானார். தாயாரைப் பெற்ற பாட்டனாரின் கொடுமைகளுக்கு எதிராக அவருக்குப் பாட்டியின் அன்பே இந்த உலகத்தில் பற்றுக் கோடாக இருந்தது. வறுமைப் பேயிடமிருந்து தப்புவதற்காக எத்தனை எத்தனையோ தொழில்களைச் செய்தவர் அவர். தெருக் குப்பையில் விழும் ஓட்டை உடைசல்களைப் பொறுக்கி விற்றார்; செருப்பு கடையில் எடுபிடி ஆளாகவும், கடைக்காரர் வீட்டில் வேலைக்காரப் பையனாகவும் உழைத்தார்; கப்பலின் சாப்பாடு அறையில் எச்சில் தட்டுக் கழுவும் பொடியனாக இருந்தார்; காட்டிற்குள் போய் சுள்ளி பொறுக்குவதும் பாடும் பறவைகளைப் பிடித்து விற்பதுமாகக் காலம் கழித்தார்; கட்டிடம் கட்டும் கொத்தனார்களின் மேலாளராகவும், பொம்மைக் கடைப் பையனாகவும், ரொட்டிக்கடைக் கூலியாகவும் பாடு பட்டார். இப்படியெல்லாம் அவர் பெற்ற அனுபவக் கல்விதான், அவருக்கு உலகத்தின் இருள் நிறைந்த பகுதியை வெளிச்சம் போட்டு காட்டியது.


'உள்ளத்தில் ஒளி யுண்டாயின் வாக்கினிலே ஒளி யுண்டாகும்; வெள்ளம் போல் கலைப் பெருக்கும் மேவும்; பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்று பதவி கொள்வர்' என்ற பாரதியின் வாக்குக்கு, ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் கார்க்கி.

சோவியத் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் மாக்சிம் கார்க்கி. ''ஏட்டுக்குள், நாட்டுக்குள், மக்கள் இதயக் கூட்டுக்குள் இடம் பெற்றுவிட்ட'' எழுத்தாளப் பெருமகன், பஞ்சைப் பராரிகளின் நல்வாழ்வையே இலட்சிய முரசாகக்கொண்டு நாட்டு மக்களின் நாடிநரம்பெல்லாம் உயிரேற்றித் துடிப்பேற்றிச் சென்று விட்டவர் கார்க்கி. எழுத்துக்கு எழுத்து எரிமலைக்கனலை உருவாக்கி வடித்த ஒப்பற்ற எழுத்தாளர். புரட்சிக்கு வித்திட்ட புதுமை வாதி. சிறுகதை இலக்கியத்தில் தனக்கென்று ஒரு தனி இடத்தை, தன் எழுத்தாற்றலால், சிந்தனை ஓட்டத்தால், பிடித்துக்கொண்ட அந்தப் பெருமகனின் நூறாவது ஆண்டு விழாவை உலகம் அண்மையில் கொண்டாடியது. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ''அகிலன்'' அவர்கள் கார்க்கியைப் பற்றி 'கிராமநலத்' திற்கென்றே எழுதிய கட்டுரையை, இச் சந்தர்ப்பத்தில் பிரசுரிப்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். —ஆசிரியர்.

### இரத்தத்தில் ஊறிப்போன போராட்ட உணர்ச்சி

இருள் நிறைந்த வாழ்க்கைதான் அவருடைய உள்ளத்துக்கு ஒளியையும், போராட்டச் சக்தியையும் கொடுத்தது. எத்தனையோ கோடிக் கணக்கான மக்கள், வறுமையும், அறியாமையும், அடிமைத்தனமும் நிறைந்த இருளால் விழுங்கப்பட்டு இந்த உலகில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போகிறார்கள். ஆனால் கார்க்கியோ தமது குழந்தை பருவம் முதற்கொண்டே தீமையையும் அநீதியையும் அது எந்த உருவில் வந்தாலும் எதிர்த்துப் போராடும் துணிவை இயல்பாகவே பெற்றிருந்தார். அவருடைய பாட்டனார் அவரைக் குப்புறக் கிடத்தி அடித்தபோது குழந்தையாக இருந்த கார்க்கி அதை எதிர்த்து, அளவுக் கதிகமான அடிகள் பெற்றார். அவருடைய பாட்டி அவர் பாட்டனாரால் கொடுமைப் படுத்தப் பட்டபோது, பாட்டிக்குப் பரிந்து கொண்டு தாத்தாவின்மீது பாய்ந்தார். இப்படி ஒவ்வொரு முறையும் அவர் தமக்கு நேர்ந்த கொடுமைகளையும், தம்மைச் சுற்றியிருந்தோருக்கு நேர்ந்த துன்பங்களையும் எதிர்க்கத் தயங்கவில்லை. தீமைக்கு எதிரான இந்தச் சத்திய ஆவேசமும் எதிர்ப்புச் சக்தியுமே, அவரை அவர் வாழ்ந்த காலத்து ருஷ்ய நாட்டுத் துன்ப இருள் விழுங்காமலும் தடுத்தது; அதை எதிர்த்துப் போராட மற்றவர்களுக்கு அவர் வழிகாட்டியாக விளங்கவும் வகை செய்தது.

அனுபவக் கல்வியால் இவ்வாறு அவருக்கு உண்மையில் இலட்சிய ஒளி புலப்பட்டுவிட்டது; அவருடைய தனித்தன்மையான போராட்ட உணர்ச்சி அவருக்குத்தேவையான துணிவையும் கொடுத்துவிட்டது. எழுத்தாற்றல் பொங்கிப் பீறிட்டு உலகம் முழுவதிலும் பள்ளத்தில் வீழ்ந்து தடுமாறும் குருடர்களை கரைசேர்க்க இவை மட்டிலும் போதுமா? எப்படி அவர் சிறுகதையாசிரியராக, நாவலாசிரியராக, நாடக ஆசிரியராக உருவம் பெற்றார்?



### எழுத்தாளர் ஆனது எப்படி ?

கல்வி அறிவில்லாத பாட்டி அவர் சிறுவராக இருந்த காலத்தில் அவருக்கு எத்தனையோ கதைகளைக் கூறினர். கப்பல் சமையற்காரன் தன் வாழ்க்கை அனுபவங்களை அவரிடம் வெளியிட்டதோடு, கண்ட புத்தகங்களையெல்லாம் அவரிடம் கொடுத்து ஓய்வு நேரத்தில் படித்துக்காட்டச் சொன்னான். அவற்றில் கோகல், புஷ்கின் போன்ற சிறந்த ஆசிரியர்களின் நூல்களும் இருந்தன. இப்படித் தொடங்கிய படிக்கும் பழக்கம் பிறகு அவரை விடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டது. பத்திரிகைகளில் சிறு கதைகளாக, தொடர்கதைகளாக, கட்டுரை—கவிதைகளாக வந்தவற்றையும், நூல்களாக வந்தவற்றையும் எப்படியெல்லாமோ படித்துத் தீர்த்தார். இரவல் வாங்கிப் படிப்பது, வீட்டுக்காரர்கள் உறங்கியபின் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுக்கு வந்தவற்றைப் படிப்பது இவ்வாறெல்லாம் படித்தார். புத்தகம் வாங்குவதற்காக அவர் தம் முதலாளியின் சட்டைப் பையிலிருந்து காசு திருடவும் திட்டம் போட்டார். ஆனால், அவரே அதைக் கடைசியாக முதலாளியிடம் சொல்லிவிட்டு, அவர் கொடுத்த காசுடன் புத்தகக் கடைக்கு ஓடினார்—அனுபவக் கல்வி ஒரு பாதியென்றால், மறு பாதி ருஷ்ய நாட்டுத் தலை சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களைப் படித்ததால் அவருக்கு கிடைத்ததாகும். அந்தக் காலதது வாழ்க்கை அவருக்கு நேரடியான அனுபவங்களாகவும் கிடைத்தது; மற்ற எழுத்தாளர்களின் படைப்புக்களின் வழியாகவும் கிடைத்தது. அத்தோடு எழுதுவதற்கு வேண்டிய தனித் திறனும் அவருக்குள் வேர்விட்டு மேலே தழைத்து வளர முற்பட்டது.

இளம் வயதில் அவர் எழுதிப் பார்த்த முதல் கவிதை அச்சைப் பார்க்காமலேயே போய்விட்டது. அடுத்து அவர் தமது 24-ம் வயதில் 1892-ல் முதல் சிறு கதையைப் பத்திரிகைக்கு அனுப்பினார். அது வெளி வந்தவுடன் தொடர்ந்து அவர் ஊக்கத்தோடு எழுத முனைந்து விட்டார். நகரங்களிலும் கிராமங்களிலும், ருஷ்யாவின் மூலை முடுக்குகளிலும் அவருடைய கதைகள் ஆர்வத்தோடு மக்களால் படிக்கப்பட்டன. மக்களுடைய மொழியிலேயே மிகவும் எளிய நடையில் வலிமையான கருத்துக்களை அவர் மக்களின் வாழ்வைப் படம் பிடித்தே கூறியதால், மிக விரைவில் அவருடைய பெயர் பிரபலமாகிவிட்டது.

அவருடைய இயற்பெயர் அல்யோஷா பெஷ்கோவ். அதை அவர் கார்க்கி என்று புனை பெயராக மாற்றிக்கொண்டதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. "கார்க்கி" என்றால் ருஷ்ய மொழியில் கசப்பு என்று பொருள். அவரது இளமைக் காலத்தில் பெரும்பான்மையினரான ருஷ்ய மக்கள் வாழ்ந்த துன்பம் நிறைந்த வாழ்க்கையில் கசப்பே மிகுந்திருந்தது. அதனிடையே ஊறி வளர்ந்து, அதையே தம் எழுத்துக்களில் அவர் வெளிக்கொண்டுவர விரும்பியதால், அந்தப் பெயரே ஏற்ற பெயர் என்று அவர் கருதினர் போலும்; அவருடைய எழுத்துக்கள் கசப்பான உண்மைகளைத் துணிவோடும் சுயநலத்தோடும் எடுத்துக் காட்டும் எழுத்துக்களே.

### எழுத்துக்கு மதிப்பளிக்கும் நாடு

கார்க்கி, செகாவ், டால்ஸ்டாய், கோகல் போன்ற எழுத்தாளர்களால் ருஷ்ய நாட்டு மக்களின் மனப் போக்கில் தீவிரமான மாறுதல்களை ஏற்படுத்த முடிந்ததென்றால், அதற்கொரு காரணமும் இருக்கிறது. ருஷ்ய நாட்டு மக்கள் படிக்கும் பழக்கம் கொண்டவர்கள். அதில் தீவிரமான ஆசை கொண்டவர்கள். படிக்கத் தெரியாதவர்கள் கூட மற்றவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பது அங்கு அந்தக் காலத்திலிருந்தே வழக்கமாக இருந்திருக்கிறது. இப்போதுகூட ரெயிலிலும், பஸ்ஸிலும் வீட்டிலும், வெளியிலும் அவர்கள் புத்தகங்கள்

படிப்பதையே பயன்மிகுந்த பொழுதுபோக்காகக் கொண் டிருக்கின்றனர். பொழுதுபோக்குமிடங்களிலும், பூங்காக் களின் அருகிலும் தெருக்களிலும் அங்கு புத்தகங்கள் விற்கப்படுகின்றனவாம். நம் நாட்டில் திரைப்பட நட்சத் திரங்களுக்கு உள்ள விளம்பரங்களைப்போலல்லாமல், அங்கு வாழும் கவிஞர்களுக்கும் கதாசிரியர்களுக்கும் நாடக ஆசிரியர்களுக்கும் மிகப்பெரும் மதிப்பு கொடுப்பார் களாம் ருஷ்ய நாட்டு மக்கள்.

இப்படியொரு பழக்கம் புரட்சிக்கு முன்பு கூட அங்கு இருந்ததால், கார்க்கி விரைவிலேயே நாடறிந்தவராகி விட்டார். ஆனால், எழுத்துக்கு அந்த நாட்டில் அவ்வளவு வலிமை இருந்ததாலேயே, எழுத்தாளர்களுக்கு அங்கு ஆபத்தும் இருந்தது. ஜார் மன்னரின் ஆட்சி கார்க்கியின் எழுத்துக்களைக் கண்டு அஞ்சியது. அவரை சிறைக்குள் தள்ள முயன்றது. டால்ஸ்யடாயின் குறுக்கீட்டால், கார்க்கி வெளிச்சிறைக்கு அனுப்பப்படாமல் வீட்டிலேயே காவல் வைக்கப்பட்டார். எழுத்துக்கள், கடிதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. உண்மையென்று தோன்றி யதை வெளியில் சொல்ல முடியாதபடி அரசாங்கத் தடைகள் மிகுந்தன. ஆகவே அவர் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றார். பிறகு இத்தாலியில் வந்து தங்கிக்கொண்டு எழுதினார். எதற்கும் அஞ்சி அவர் தம் கருத்தையோ எழுத்தையோ விட்டுவிடவில்லை. அவருக்கு ருஷ்யப் புரட்சியின் தந்தையான லெனினின் நட்பு கிடைத்தது. தம் வாழ்நாளிலேயே தாம் கண்ட கனவு நனவாக மாறுவதைப் பார்த்துவிட்டு, புரட்சிக்குப் பிறகு சுமார் இருபதாண்டுக் காலம் வாழ்ந்திருந்து 1936-ல் புகழுடம்பெய்தினார்.

### உரிமைக்குப் போராடிய வீரன்

எழுத்தாளனும் ஒரு தொழிலாளியே, உழைப்பாளியே, என்ற கருத்தை நிலைநாட்டியவர் அவர். ருஷ்ய நாட்டு இளம் எழுத்தாளர்களைக் கூட்டி வைத்து அவர்களுக்கு வழி காட்டியாகவும் ஊக்கமூட்டுபவராகவும் விளங்கினார். இலக்கியத் துறையில் 'சோஷலிஸ எதார்த்தவாதம்' என்ற புதியதோர் கோட்பாட்டை இவர்தாம் முதன் முதலில் தோற்றுவித்தவர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நம் நாட்டில் விடுதலை இயக்கம் தீவிரமாகப் பரவியிருந்தபோது, நம் நாட்டு எழுத்தாளர் பலருக்கும் அவர் எழுத்துக்கள் ஊக்கமூட்டியிருக்கின்றன. 'கார்க்கி' யின் நூல்கள் அப்போது இந்த நாட்டில் தடை செய்யப் பட்டிருந்தன. என்றாலும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு எப்படியோ விடுதலை வேட்கையாளர்களுக்குக் கிடைக்கத்தான் செய்தது. காந்தியடிகளே, "மாக்சிம் கார்க்கியைப்போல் மக்களின் உரிமைக்காகப் போராடிய வீர எழுத்தாளர் ஐரோப்பாவில் வேறு யாருமில்லை" என்று அவரைப் போற்றியிருக்கிறார்.

கார்க்கி தம் நாட்டு மக்களின் விடுதலைக்காக மட்டிலும் வாழ்ந்தவரல்லர். உலக மக்களின் ஆனந்தமயமான வாழ்வே அவர் நோக்கம். ருஷ்யாவில் இருந்து கொண்டே, வெள்ளையரின் காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இந்திய நாட்டின் விடுதலைக்காக அவர் குரல் எழுப்பியிருக்கிறார். நம் நாட்டு மகாகவி பாரதி எவ்வாறு ருஷ்ய விடுதலையைப் பாடினாரோ அவ்வாறே கார்க்கியும் இந்திய விடுதலையைப் பறைசாற்றினார்.

அவருடைய எழுத்துக்களைப்பற்றி எழுதுவதென்றால் அது மிகவும் விரிவடையும். சிறு கதைகள், நாவல்கள் நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள் என்று அவர் அதிகமாகவே எழுதியிருக்கிறார். எல்லாவற்றிலுமே அவருடைய வாழ்க்கையும் இலட்சியமும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. தாழ்த்தப்பட்டவர், ஒடுக்கப் பட்டவர், பாதாளத்தில் அமுத்தப்பட்டவர் போன்றோரைப் பற்றி அவரைப்போல் வேறு யாரும் அப்பட்டமாக எழுத வில்லை; உருக்கமாகவும் உயர்வாகவும் துணிவோடும் எழுதவில்லை. அவருடைய கதைத் தலைவர்—தலைவியர் அவர் காலத்துச் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டவர்களே. ஆனாலும் அவர்கள் எந்த வஞ்சனைக்கும் குனிந்து கொடுக்காதவர்கள். கார்க்கியைப் போலவே எதிர்த்துப் போராடத் துணிந்தவர்கள். கடுமையான உழைப்பும், மனித சமுதாயத்திடம் பரந்த அன்பும், கடமை உணர்ச்சி யும், உரிமை விழிப்பும் கொண்டவர்கள்.

### சிறுகதைகளின் தனிச் சிறப்பு

'கார்க்கி'யின் நாவல்களில் உலகப் புகழ் பெற்றது 'தாய்' ஆகும். தனிப்பட்ட கதைத் தலைவனோ, தலைவியோ கதையில் பெரும்பங்கு கொள்வது போன்ற நிலையிலிருந்து அது மாறுபட்டது. சமுதாயமே அதில் புதிய ஆர்வம் கொண்டு இயங்குகிறது. தாய் முதலில் தன் மகனை நேசிக்கிறாள். அந்த நேரம் அவள் மகன் கொண்டிருந்த சமுதாயப் பற்றுதலாக விரிவடைகிறது. பிள்ளைப் பாசம் மக்கள் குலத்தின் மீதுள்ள பாசமாக வளர்கிறது; அதன் விடுதலைக்காகவும் அவள் போராடுகிறாள்.

அவருடைய சிறு கதைகள் உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிப் படைப்புக்களாகும். கல் நெஞ்சத்தையும் கசிந்துருகச் செய்யக்கூடிய பல அற்புதமான சோகச் சித்திரங்களை அவர் சொல்லோவியங்களாகத் தீட்டியிருக் கிறார். அவர் காலத்து ஏழை எளியோரின் வாழ்க்கைப் போராட்டங்களையும் அவருடைய சொந்த வாழ்க்கையின் துயர் நிறைந்த பகுதிகளையும் நாம் அவருடைய சிறு கதைகளில் காணலாம்.

எடுத்துக்காட்டாக ஒரே ஒரு சிறு கதையைக் கவனிப் போம்:—

> **வேண்டுமென்றே குதிரை வண்டியின் குறுக்கே விழுந்து தன்னை மாய்த்துக்கொண்ட கோலூஷா என்ற ஏழைச் சிறுவனின் கதை இது. கோலூஷாவின் தகப்பன் பணத்தைக் கையாடிய குற்றத்துக்காக ஒன்றரை ஆண்டுகள் சிறையிலிருந்து விட்டுத் திரும்புகிறான். அவன் சிறைப்பட்டிருந்த காலத்தில் கோலூஷாவின் தாயார் எப்படியெல்லாமோ சிரமப்பட்டு கூலி வேலை செய்து குடும்பம் நடத்தினாள். கோலூஷா வும் சுள்ளி பொறுக்கி வந்து கொடுத்துத் தன்**

உங்களுக்குத் தேவையான செயற்கை உரங்களுக்கு, எங்களுடைய பசு மார்க் உரங்களை உபயோகியுங்கள். எங்களுடைய உரங்களை உபயோகித்து கூடுதல் விளைச்சல் பெறுங்கள்.

கிடைக்குமிடம் :

நீலகிரி பெர்டிலைசர் லிமிடெட்,

கிரௌன் பிரின்ஸ் ஹால்,
குன்னூர்-1.

உற்பத்தி சாலை :

நீலகிரி பெர்டிலைசர் லிமிடெட்,
சாயிபாபா மிஷன் போஸ்ட், கோயம்புத்தூர்--11.

தாயாருக்கு உதவினான். கோலுஷாவுக்குப் பனியின் கொடுமையிலிருந்து தப்ப நல்ல காலுறை கிடையாது. கிழிந்த பூட்சை அகற்றினால் கால் இரணமாகிச் சிவந்திருக்கும். அத்தோடு அவன் காட்டுக்குப் போய்ச் சுள்ளி பொறுக்கி வந்து தன் தாய்க்கு உதவி செய்யத் தவறுவதில்லை. இந்த நிலையில் தகப்பன் சிறையிலிருந்து விடுதலை பெற்றான். நல்ல தேகத்தோடு சிறையில் நுழைந்தவனை, பாரிச வாய்வு நோயோடு வீட்டிற்குள் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போனார்கள். காலமெல்லாம் குடும்பத்துக்குச் சுமையாய்த் திரும்பிவந்தான் குடும்பத் தலைவன்.

குடும்பத்தலைவி உள்ளங்காலில் உள்ளெலும்பு தேய உழைத்தும், அவள் பெற்ற கூலி ஒரு வேளை உணவுக்குக்கூட அந்த மூவருக்கும் கட்டி வரவில்லை. நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. ஒருநாள் ஆத்திரம் தாங்காமல் பையனின் தாய், "சே! என்ன வாழ்க்கை இது? யாராவது ஒருவர் செத்து ஒழிந்தாலாவது துன்பம் கொஞ்சம் குறையுமே" என்று கத்தி விட்டாள். நோயாளித் தகப்பன் இதைக் கேட்டு "நான் சீக்கிரம் போய்விடுவேன்; அதுவரையில் திட்டாதே!" என்று அவளைத் தடுக்கப் பார்த்தான்.

அன்றைக்கு மாலையிலேயே ஒருபணக்காரனின் குதிரை வண்டிக்குக் குறுக்கே விழுந்தான் சிறுவன் கோலுஷா. குற்றுயிரும் குலை உயிருமாய்க் கிடந்தவனுக்கு வண்டியின் சொந்தக்காரனும் காசு கொடுத்தான். தெருவில் கூடிய கூட்டமும் காசு கொடுத்தது. செய்தி கேட்டு அலறியடித்துக்கொண்டு மகனைக் காண ஓடி வந்தாள் தாய்.

காசை அவளிடம் நீட்டி "நான் இப்படிச் செத்துப்போனால், உனக்கு இந்த உதவிக்காசும் கிடைக்கும். குடும்பச் சுமையும் குறையும்" என்று கூறியவாறே கண்களை மூடினான் கோலுஷா.

இப்படி எத்தனையோ கதைகள். உலகத்துச் சிறந்த சிறு கதாசிரியர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள் கூட வாழ்க்கையின் இருள் நிறைந்த பகுதியைக் கார்க்கியைப்போல் இந்த அளவுக்கு ஊடுருவி நோக்கவில்லை—வெளிப்படுத்தவில்லை.

'பள்ளத்தில் விழுந்து புழுக்களென நெளியும் பஞ்சைகளின் கூட்டத்தை நாடிச்செல்லுங்கள்' அவர்களோடு பழகி அவர்களது துயர் மிகுந்த வாழ்க்கையை உலகத்துக்கு எடுத்துச் சொல்லுங்கள்' என்று உலகத்து எழுத்தாளர்களுக்கு இன்னும் கார்க்கி அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கிறாரென்றே எனக்குத் தோன்றுகிறது.

# கூட்டுறவு இயக்கம்—


## ஏட்டுச் சுரைக்காயா?

[ திரு வி. கே. சி. நடராஜன், I.A.S., கூட்டுறவுத் துறை பதிவாளர்.]

[சென்னையில் மார்ச் 4, 5, 6 தேதிகளில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில் விவாதிப்பதற்கென, கூட்டுறவுத் துறை பதிவாளர் விளக்கக் குறிப்பு ஒன்றினை அளித்திருந்தார். அக் குறிப்பிலிருந்து, ஒரு சில பகுதிகளை எடுத்து அப்படியே கீழே தந்துள்ளோம்.

பதிவாளர் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள், ஒளிவு மறைவு இல்லாமல், கூட்டுறவுத் துறையில் இன்றுள்ள பிரத்தியட்ச நிலைமையைத் தெளிவாக எடுத்து விளக்குகின்றன. மருந்து கசப்பாக இருந்தாலும், நோய் அதனால் தானே தீருகிறது? கூட்டுறவு இயக்கத்தில் இன்று கண்டுள்ள குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மலர வேண்டும். அந்த நல்ல சூழ்நிலையை உருவாக்க, அனைவரும் பாடுபட வேண்டும்—ஆசிரியர்]

தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் உள்ள பட்டி தொட்டிகள் பலவற்றிலும் கூட்டுறவு இயக்கம் பரவியிருந்தும், இன்றுள்ள புள்ளிவிவரங்களின்படி, மக்களில் 89·8 சதம் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருப்பதாகச் செப்புகின்றனர். இது கூட்டுறவில் உள்ள உறுப்பினர் தொகையை ஐந்தால் பெருக்கிக் கணக்கிட்டுக் கூறும் முறைப்படியாகும். ஆனால் உண்மையில் இந்த அளவு கூட்டுறவு விரிவடைந்திருக்கின்றது எனக் கூற இயலாது. பல குடும்பங்கள் இந்த இயக்கத்தில் இன்னும் பங்கு கொள்ளாமலும், பயன் பெருமலும் இருக்கின்றன.




### கூட்டுறவுக் கொள்கையே கலகலத்துப் போய்விட்டதா ?

உழவர்களின் பயிர்க் கடன் தேவையில் 20 சதத்திற்கும் குறைந்த அளவே கூட்டுறவுச் சங்கங்களால் பூர்த்தி செய்யப்படுகிறது. உள்ள உறுப்பினர்களிலும் 30 சத விகிதத்தினரே கடன் பெறுகின்றனர். கூட்டுறவு இயக்கம் தொடங்கி 63 ஆண்டுகளுக்கு பின்னரும் இந்த அவல நிலையென்றால், இது வெட்கித் தலை குனிய வேண்டிய ஒன்று. கூட்டுறவுக்கொள்கையே கலகலத்துப் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். எனவே கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகப் பரிணமிக்கவுமில்லை. பரிமளிக்கவுமில்லை.

ஓர் உழவன் கூட்டுறவில் கடன் பெறுவது என்பது இன்னும் எளிதாகவுமில்லை. எளிதாக்கப்படவுமில்லை. இயக்கத்தின் செயல் திறமையை வளர்க்க வியக்கத்தக்க மாறுதல்கள் பல செய்யப்பட்டிருந்தும், அதற்கேற்ற பலனில்லை.

கூட்டுறவு இயக்கத்தில் 89·8 சதம் மக்கள் அங்கத்தினராக உள்ளனர் என்று அறிவித்தபோதிலும், பெரும்பான்மையான உழவர்கள் இயக்கத்திற்கு வெளியிலேயே உள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது அங்கத்தினராக உள்ளனரா என்பது குறித்து புள்ளிவிவரம் சேகரித்து, இயக்கத்தில் சேராத குடும்பங்களை சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்க்கவேண்டும். இதை வாக்காளர் பட்டியல் அடிப்படையில் செய்ய வேண்டும். கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற, கூட்டுறவாளர்கள் பாடுபட வேண்டும். உறுப்பினராக சட்டப்படி தகுதியுள்ள அனைவரையும் உறுப்பினராக்க முயற்சிக்கவேண்டும். உழவர்கள் அல்லாதவர்களை 'பி' வகுப்பு அங்கத்தினர்களாகச் சேர்க்க வேண்டும். இது குறித்து, வாக்காளர் பட்டியல் அடிப்படையில் குடும்பப் பதிவேடு ஒன்று வைக்கப்பட வேண்டும்.

பயிர்க்கடன் தேவை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 160 கோடி எனக் கணக்கிடப்பட்டிருப்பினும் தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 31 கோடிதான் கடன் வழங்குகின்றன. அதாவது உழவர்களின் தேவையில் சுமார் 20 சதத்திற்கும் குறைவாகவே கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. மேலும், கடன் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 30 சதம்தான்.

### மக்கள் இயக்கமாக மலர வேண்டும்.

ஒருவேளை கூட்டுறவுகளில் இன்றுள்ள செயல் திறமையின்மையைக் கருதித்தானோ என்னவோ நாட்டரசு வர்த்தக வங்கிகள் பயிர்க்கடன் வழங்க முன்வர வேண்டும் எனப் பணித்திருக்கிறது. வர்த்தக வங்கிகளும் கூட்டுக்கள் அமைத்துக் கொண்டு கடன் வழங்க முன்வர முயற்சிக்கின்றன. அரசின் ஆணைப்படி இவர்கள் பயிர்க்கடன் வழங்க ஆரம்பித்தால், வசதிப் படைத்த பலரும் வர்த்தக வங்கிப் பக்கமே சாய்வார்கள். கூட்டுறவின் துணையை நாடமாட்டார்கள். எனவே வசதிக் குறைந்தவர்களும், மற்றவர்கள் மட்டுமே கூட்டுறவுத் துறையில் கடன் வாங்குவார்கள். இப்படியொருநிலை ஏற்படுமானால் ஏற்கனவே வலு குறைந்து விளங்கும் கூட்டுறவு வங்கிகள் பொலிவுகுன்றி செயலிழந்து சீர்கெட்டு மங்கி விடும். வர்த்தக வங்கிகளை புகவிட்டால், கூட்டுறவு வங்கிகள் நாளடைவில் நலிந்துவிடும். இதையும் இதுபோல வர இருக்கும் பல இன்னல்களையும் தவிர்த்து, கூட்டுறவை வளர்க்க வேண்டும்.

''கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர யார் விரும்பினாலும், ஒரு மனு அனுப்பினால் போதும். உடனே அனுமதிக்கப்படுவார்'' என்று சட்டம் கூறுகிறது. நாமும் கூறுகிறோம். ஆனால் நடைமுறையில் இது ஏட்டுச் சுரைக்காயாகத்தான் உள்ளது. உறுப்பினராக அனுமதி மறுக்கப் படுவதாகவும், பாராபட்சமாகவே கடன் வழங்கப்படுவதாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பலருடைய நன்மைக்கான முறையில் பாங்காக இயலாமல், ஒரு சிலருடைய கோட்டையாக விளங்குகிறது என்றும் விண்ணப்பங்கள் வந்தவண்ணமாகவே உள்ளன. இவை சங்கங்கள் முழுப் பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுவதில்லை என்பதையே காட்டுகின்றன. இந்த நிலை மாற வேண்டும்.

### உண்மையாக உதவ வேண்டும்.

உழவர்களுக்கு இன்னும் அதிக அளவில் பயிர்க்கடன் வழங்க வேண்டும். அது வேண்டிய அளவு வேண்டியபோது செய்யும் பயிருக்கு ஏற்றபடி வழங்க வேண்டும்.

தீவிர பயிர் பெருக்கத்திட்டம், அமோக விளைச்சல் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களுக்குக் கடன் வழங்கும் பொறுப்பு கூட்டுறவுகளுக்கு இருந்தும், ரிசர்வ் வங்கி வழங்கும் கடனை பயன்படுத்தும் மத்திய வங்கிகளின் திறமை ஆண்டுக்கு ஆண்டு குறைகிறது என்றால், அது ஏன் எனச் சிந்திக்க வேண்டும். வங்கிகளின் சொந்த



மூலதன வலிவின்மையோ, தவணை கடந்த கடன் பெருக்கமோ, ரிசர்வ் வங்கி நிர்ணயித்தபடி கடன் வழங்குவதில் சொந்த முதலீடு (Minimum Involvement) செய்ய இயலாமையோ அல்லது தவணை கடவாத நிலுவையைக் காவாமையோ காரணமாக இருக்கலாம். இல்லை வேறு காரணங்களும் இருக்கலாம். எது எப்படி இருந்த போதிலும் உள்ள இடைஞ்சல்களை ஆய்ந்து அவற்றை நீக்க வழி செய்வதுடன், வரும் ஆண்டுகளில் ரிசர்வ் வங்கி வழங்கும் கடன் அளவு முழுமையும் பெற்று உழவர்களுக்கு வழங்கி உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுவது எப்படி என ஆய்வது நல்லது.


**வலு குன்றி, செயலிழந்த நிலை ஏன்?**

கடன் நிலுவை அதிகரிப்பது ஒரு சிலருக்கு அளவுக்கு மீறி கடன் வழங்குவதாலும், ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் கடன் வழங்குவதாலும், பலர் பெயரைப் பயன் படுத்தி ஒரு சிலர் பெருந்தொகையை ஒரு சில இடங்களில் எடுத்துக் கொள்வதாலும், செய்யும் பயிருக்குக் கடன் வழங்காது ஆளைப் பார்த்துக் கடன் வழங்குவதாலும், வழங்கிய கடனை வாங்க முயற்சித்தால் தமக்குள்ள 'நற்பெயர்' கெட்டுவிடுமோ என அஞ்சுவதாலும் இருக்கலாம். இவற்றில் கடைசியாகக் கூறப்பட்ட காரணமே பரவலாக உள்ள ஒன்று. இக் குறைபாடுகளை நீக்கி வங்கிகளின் செயலாற்றலைச் செம்மைப்படுத்தி, நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி நல்ல பணியாற்றச் செய்ய என்ன செய்ய வேண்டும் என ஆராயலாம். ஏறக்குறைய மூன்றாண்டுகளுக்குள் இருமடங்காக வளர்ந்திருக்கும் தவணை கடந்த பாக்கியில் வராக் கடன் எவ்வளவு என நிர்ணயித்துப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மிகமிக இன்றியமையாதது. வசூலாகக் கூடிய பாக்கியை வரப் பற்றுவதும் அவசியம் நடப்பு ஆண்டில் இது வரையில் கொடுத்துள்ள கடன் அளவு 22·75 கோடி மட்டுமே. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் மிகமிகக் குறைவு. கூட்டுறவு வங்கிகளும் சங்கங்களும் நாளுக்கு நாள் வலிக்குன்றி செயலிழந்து வருவது ஏன்? இந்நிலையைத் தவிர்ப்பது எப்படி என ஆய்ந்து முடிவு செய்வது நல்லது.

[1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை சென்னையில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு வி. கே. சி. நடராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் முன் வைத்த விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]


## விவசாயிகளுக்கு ஓர் அரிய சாதனம்!

பறவைகளாலும், மிருகங்களாலும் அழிக்கப்படும் பயிர்களை பாதுகாத்து நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகளுக்கு ஓர் அரிய சாதனம் இதோ காணப்படும்,



**“ ப்யூரிவாக்ஸ் ”**

இது துப்பாக்கி போல் பயங்கர வெடி சத்தத்தை உண்டாக்கி பறவைகளையும், மிருகங்களையும், பயிர்களை அணுகாதபடி தடுத்துவிடுகிறது. இந்த இயந்திரம் மிகக் குறைந்த செலவில் கால்சியம் கார்பைடில் இயங்குகிறது. இந்த இயந்திரத்தை ஒரு மரத்தில் தொங்கவிட்டு, ஒரு முறை இயக்கிவிட்டால் நாம் அதை நிறுத்தும் வரை தொடர்ச்சியாக 1 முதல் 5 நிமிடங்கள் இடைவெளியில் தானாகவே வெடித்துக்கொண்டிருக்கும். இயக்கும் முறை மிகவும் சுலபமானது. நீண்ட நாள் உழைக்கும். இயந்திரத்தின் விலையும் குறைவு.

**“ ப்யூரிவாக்ஸ் ”**

தமிழக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதை பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக விவசாயிகளுக்கு பாதி விலைக்கு விநியோகம் செய்ய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. உடனே உங்கள் தேவைகளுக்கு எழுதவும்.

கிடைக்குமிடம் :

**ஸி. ஸி. பாலு அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,**

நெ. 17, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

SEMBI/CCB/2

# கவனிக்கவும் -
# யானை டிரேட் மார்க்

## யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

*பாக்ட் கம்பெனியாரின் உரத் தயாரிப்புகள்*

**பாக்டம்பாஸ்**
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

**அல்ட்ராபாஸ்**
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

**அமோனியம் ஸல்பேட்**
**சுபர்பாஸ்பேட்**
**N.P.K. கலப்பு உரங்கள்**

**பாக்ட்** ...யானை மார்க் உரங்கள்

**பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்**
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004 A


பொன்னி வள நாட்டினரே புறப்படுவீர்! [6-ம் பக்கத் தொடர்ச்சி.]

முடித்துவிடுங்கள். இந்த கால வரம்புவரை சம்பா நிலங்களுக்கு ஆடுதுறை 27 நெல்லை விதைக்க வேண்டாம்.

சம்பாவிற்கு ஜூன் 20-ம் தேதி அளவில் ஆரம்பித்து ஆடிப்பட்டத்தில் பெரும் பகுதி விதைப்பது தான் வழக்கம். ஆகவே ஜூன் 20—ம் தேதியிலிருந்து ஆகஸ்டு 7-ம் தேதிவரை நீண்ட கால வயதுள்ள சம்பா நெல் ரகங்களுக்குப் பதிலாக ஆடுதுறை 27 ரக நெல்லை சம்பா நிலத்தில் முதல் பயிராக விதையுங்கள்.

ஒருவேளை பருவமழை தவறி மேட்டூர் அணை ஜூன் மாத இறுதிக்குள் திறக்கப்பட முடியாமல் போய்விட்டால் வழக்கமான குறுவை நிலத்திற்கும் புதிதாக இரு போக மாக மாற்றப்படும் சம்பா நிலத்திற்கும் ஆடுதுறை 27 நெல்லை விதைக்கும் பட்டத் தில் அதிக வேறுபாடு இருக்காது.

அந்தச் சூழ்நிலை உருவானல் அதிகபட்சம் எந்த அளவிற்கு நீங்கள் ஒரு போக நிலங் களை இரு போகமாக மாற்றமுடியுமோ, அந்த அளவிற்கு மாற்றி, குறுவை நிலத் திற்கும் சம்பா நிலத்திற்கும் ஆடுதுறை 27 நெல்லை விதையுங்கள், இதனை எவ்வாறு செய்வதென்பதை உங்களால்தான் சரிவர தீர்மானிக்க முடியும் என்பதோடு சென்ற ஆண்டு சாதித்ததைப் போலவே இவ்வாண் டும் நீங்கள் வெற்றிகரமாக செயலாக்கிக் காட்டுவீர்கள் என்பதில் நான் திட நம் பிக்கை கொண்டுள்ளேன்.

உங்கள் இரண்டாம் பயிருக்குத் தேவையான குறுகிய, நடுத்தர வயதுள்ள நெல் ரகங்களை சேமித்து வைக்க தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உங்களை உழைப்பின் சாதனை மாபெரும் வெற்றியாக மாற மாநிலமே விரும்புகிறது.


'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'. எனவே உழவர் பெருங்குடி மக்களே,


தஞ்சைத் தரணிச் சரிதத்தில் உழவரணி படைக்கும் புதுப் பரணியை—புகழ்ப் பர ணியை—வெற்றிப் பரணியைக் கண்டிட— வேளாண்மைத்துறை சரித்திரத்தில் இன்னொரு சாதனையை விளைத்திட புறப்படுவீர்.''

# குறைந்த செலவில் தட்டுப்பாடின்றி


# சக்தி அளிப்பது

## Kirloskar கிர்லோஸ்கர் AV-1, 5 B.H.P. டீஸல் இன்ஜின்






நீர்ப்பாசன பம்புகளை இயக்க



சிறிய அளவு மாவு, அரிசி மில்களை இயக்க



கரும்புச்சாறு பிழியும் மிஷின்களை இயக்க

கிர்லோஸ்கர் டீஸல் இன்ஜின் குறைந்த செலவில் தொந்திரவின்றி வேலை செய்வதற் கென்றே நிர்மாணிக்கப்பட்டது. வேலை நேரத்தையும் அதனால் செலவையும் மிச்சப்படுத்துகிறது. விவசாயத்தில் உற்பத்தியைப் பெருக்குகிறது.

குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப (60 H.P. வரை) நீராலோ அல்லது காற்றாலோ குளுமையடையும் இரு வகைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்போர்:

**கிர்லோஸ்கர் ஆயில் இன்ஜின்ஸ் லிட்., பூனா**


மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்தை அணுகவும்:

## பாரி & கம்பெனி லிட்.,

மதராஸ் • பம்பாய் • கல்கத்தா • புது டில்லி

PKZ-1678/TAM

# திரைப்படத்தில் தமிழக அரசின் செய்தித்தொகுப்பு



தமிழக அரசின் செய்தித் துறையினரால் தயாரிக்கப் பட்ட முதல் 'செய்தித் தொகுப்பு' திரைப்பட வெளியீட்டு விழா, அண்மையில் நடைபெற்றது. தமிழகத்தின் மூன்று அமைச்சர்கள் இவ் விழாவில் பங்கு கொண்டு விழா சிறப்புற வாழ்த்தினர். இது கன்னி முயற்சி. ஆனால் தமிழக அரசின் செய்தித் துறையின் வரலாற்றில், இது ஒரு மைல்கல். இச் சீரிய பணி மேன்மேலும் சிறக்க, நல்லிதயம் படைத்த அனைவருடனும் சேர்ந்து, 'கிராம நலமு'ம் வாழ்த்துகிறது.

தமிழக அரசு செய்தித் துறையின் செய்திப் படத் தயாரிப்பான "செய்தித் தொகுப்பு" வெளியீட்டு விழா, 4—5—1968 அன்று சென்னை பாலர் அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் செய்தித் தொகுப்பின் முதலாவது செய்திக் கதிர் திரையிடப்பட்டது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. சி. எஸ். அவர்கள் வரவேற்றார்....

தலைமைச் செயலாளர் தமது வரவேற்புரையில்

"இந்திய அரசு செய்திப் படங்களை வெளியிட்டு வருகிறது. ஆனால் இந்திய அரசின் செய்திப் படங்களில் தமிழ்நாட்டில் நடைபெறும் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளையும் காட்ட முடியாத நிலை இருந்தது. அதை மாற்றி மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிய 'செய்தித் தொகுப்பு' வெளியிடப் படுகின்றது"

என்றார்.

### நாட்டின் வளர்ச்சிக்கு நல்லதொரு முயற்சி

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்டமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது :—

"அகில இந்திய ரீதியில் செய்திகளைத் தொகுத்து காட்டப்படும் செய்திப் படங்கள் பெரும்பாலும் மாநில சூழ்நிலைகளுக்கு ஏற்றனவாக அமைவதில்லை. குறிப்பாக, தமிழகத்தின் சாதனைகளும், வளர்ச்சித் திட்டங்களும் அப்படங்களில் பூரணத்துவத்துடன் இருந்ததில்லை என்ற குறைகள் இருந்தன. அக்குறைகளை நீக்கும் முயற்சி தான் 'செய்தித் தொகுப்பு' வெளியீட்டு விழா."

"மாநில அரசு செய்திகளுக்கும், பயனுள்ள காரியங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் புதிய ஆக்கங்களைத் தேடித் தருவதும் நமது கடமையாகும்.

"அந்த முறையில் தமிழக அரசின் செய்தித் துறை இந்த நல்ல முயற்சியில் ஈடுபட்டுள்ளது."

### தமிழக மக்களுக்கு பயன்தரும் அமைப்பு

"செய்தித் தொகுப்பு" வெளியீட்டைத் தொடக்கி வைத்த மாண்டமிகு கல்வியமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழக அரசின் செய்தித் துறை தனியான அமைப்பை ஏற்படுத்தி 'செய்தித் தொகுப்பை' வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. உரிய முறையில் இந்த அமைப்பு செய்யும் காரியங்களால் மக்களுக்கு நன்மை ஏற்படும்.

மத்திய அரசு செய்திக் கதிரில் தமிழகத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள் செய்திகள் இரண்டு நிமிடம் கூட இடம் பெறுவதில்லை. பரந்த நிலப்பரப்பான இந்த நாட்டில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் காட்டுவது எளிதல்ல. எனவே, தமிழக அரசின் சார்பில் தமிழக மக்கள் நன்மையடை

யும் விதத்தில் செய்தித் தொகுப்பு அமையும். கருத்தையும், காதையும், கண்ணையும் ஈர்க்கும் செய்தித் தொகுப்பால் எல்லாவகையினும், எல்லாத் தரப்பினரும், நிலையினரும் காட்சிக ளோடு கருத்துக்களை பெறும் நிலைஏற்படும்.

தமிழக அரசின் சாதனைகளையும், புள்ளி விவரங்களையும், தீட்டியுள்ள திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள பணிகளையும் நிகழ்ச்சிகளை யும் மக்களுக்கு அறிவிக்க செய்தித் துறையும் செய்தித் தொகுப்பு முறையும் நன்கு பயன் படும்.

பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னணி யில் நிற்பதுபோல, செய்தித் தொகுப்பிலும் முன்னணியில் நிற்க வேண்டும்."

நல்ல பணிகளை நாடறியச் செய்வோம்

செய்தித் தொகுப்பின் முதலாவது செய்திக் கதிர் திரையிடுவதை தொடக்கிவைத்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தமது உரையில் கூறியதாவது :—

"பல்வேறு செய்திகளைத் தொகுத்தளிக்கின்ற காரணத்தால்—நாம் பெரிதென்று நினைக்கின்ற—நாம் சிறப்பான தென்று கருதுகின்ற நம் மாநிலத்திற்குத் தேவையானது என எண்ணு கின்றவற்றை இந்திய அரசு செய்திப்படப் பிரி வால் நிறைவேற்ற முடியவில்லை. அப்படிப்பட்ட குறைகள் நீக்க செய்தித் துறை செய்தித் தொகுப்பை வெளியிட முன் வந்துள்ளது.

தொடர்ந்து பல்வேறு படங்களைச் செய்தித் துறை தொகுக்கவிருக்கிறது. ஒவ்வொரு பட நிலையத்திலும் செய்தித் தொகுப்பை தமிழக மக்களுக்கு காட்டுவதற்காக வகை செய்யப் பட்டுள்ளது.

நிகழ்ச்சிகளை படமாக்கி காட்டுவதோடு மட்டு மல்லாமல், தமிழக மக்கள் அரசின் சார்பில் ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமைகள் பற்றிய கருத்துக்களையும் அறிவுரைகளையும் கூறும் விதத்திலும் செய்தித் தொகுப்பு அமையும்.

கட்சி சார்பற்ற முறையில் நாட்டு நன்மைக் காக செய்யப்படும் பணிகளை நாடறியச் செய்வதே செய்தித் தொகுப்பின் முக்கிய நோக்கமாகும்.

செய்யப்படும் நல்ல காரியங்களை விரை வாக மக்கள் அறிந்து கொள்ளவும், அப்படிப் பட்ட நல்ல பணிகளைச் செயவோருக்கு மக்கள் ஒத்துழைப்பு தரவும் செய்தித் தொகுப்பு மெத்தவும் பயன்படும்.

இது சிறிய படம்தான். ஆனால் சீரிய படம்."

"செய்தி"—புதிய விளக்கம்

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையின் இடையில செய்தி பரவுதலே வலியுறுத்த, 'செய்தி' என்ற சொல்லுக்கு ஒரு புதிய விளக்கத்தை அளித்தார்.

"குறும்புத்தனமாக யோசித்துப் பார்த்தால்—செய்தி என்ற சொல் இப்படி உண்டாகியிருக்க லாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

செய்யப்படும் செயல்கள் அனைத்தும் தீ போல பரவுவதால் தான் 'செய்தி' என்ற சொல் உண்டாகியிருக்கும்."

அமைச்சரின் கலைநயத்துடன் கூடிய புதிய விளக்கம் நல்ல செய்திகள், உண்மையான செய்திகள் வேகமான மக்களிடம் பரவ வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

செய்தித் துறையின் துணை இயக்குநர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி நன்றி கூறுகையில், தமிழக அரசின் செய்திப் பணி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு. டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்., குழுவின் செயலாளர் மக்கள் தொடர்பு அதிகாரி திரு. எஸ். வேங்கட சாமி, தொழில் கல்வி இயக்குநர் திரு. டி. முத்தையன், திரைப்படத் தொழில் நுணுக்கக் கல்லூரித் தலைவர் திரு. ப. சிவதாணு பிள்ளை ஆகியோர் இம்முயற்சியில் காட்டிய ஆர்வத்தையும், ஒத்துழைப்பையும் குறிப்பிட்டார்.

விழாவுக்கு, சென்னை நகர மேயர் டாக்டர் ஹபிபுல்லா பேக், பட அதிபர் திரு. ஏ. எல். சீனிவாசன் முதலியோர் வந்திருந்தனர்.

மக்கள் திலகம் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர் கள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். இறுதியில் செய்தித் தொகுப்பின் முதலாவது, செய்திக் கதிர் திரையிடப்பட்டது.

இந்தியாவில் மாநில அளவில் செய்திப் படங்கள் தயாரிப்பதற்கு தமிழகச் செய்தித் தொகுப்பு முன்னோடி யாக விளங்கும் என்பதைக் காட்டுகிறது செய்தித் தொகுப்பின் முதற்படைப்பு

## முதலாவது செய்திக் கதிரில். . .

சென்னையிலுள்ள திரைப்பட தொழில் நுட்பக் கல்லூரி யின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள செய்தித் தொகுப்பின் முதலாவது செய்திக் கதிரில்—

நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு நில அடமான வங்கியின் புதுமனை புகுவிழா.

தமிழக முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம்.

குடும்ப நலத் திட்டம் பற்றிய சிறு துணுக்கு முதலியன இடம் பெற்றுள்ளன.

அடிநாள் தொட்டு அண்ணல் காந்தியடிகள் அறநெறி வழிநின்று இந்தியா முழுவதற்கும் வழிகாட்டும் மாநில மாகத் திகழும் தமிழகத்தின் செய்தித் தொகுப்பின் தொடக்கமே உத்தமர் காந்தியடிகள் திரு உருவச் சிலையைக் காட்டுவதிலிருந்து தொடங்குகிறது—

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்—என்ற

வள்ளுவரின் வாய்மொழியை நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டில் பங்கேற்ற சான்றோர்கள் எடுத் துரைக்கும் காட்சியும் பிறவும் காட்டப்படுகின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழகத்தில தொடங்கப்பெற்று சீரோடு வளர்ந்துருக்கும் நிலஅடமான வங்கியின் புதுமனை புகுவிழா காட்சி. இவ்வங்கியின் மிகப் பழைய உறுப்பினரான திரு. கே. எஸ். ரங்கையா கவுண்டர் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

'திறமான புலமையெனில் அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற அமரகவி பாரதியின் கனவை நனவாக்கிய முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் பற்றியது.

பொதுப் பணித் துறை அமைச்சர் இல்லத்தில் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் தமது வெளிநாட்டுப் பயணம் பற்றி முதலமைச்சர் கலந்துரையாடினர். தமிழக அமைச்சர் களும் பெருமக்கள் பலரும் முதலமைச்சரை அவர் இல்லத்தில் கண்டு மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழகத்தின் அன்புப் பரிசாக தொல்காப்பியம், திருக் குறள், சிலப்பதிகாரம், உலகத் தமிழ் மாநாட்டு மலர், காஞ்சிபுரம் பட்டுத் துணிகளையும் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்றார்.

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பார்"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை கண்முன்னே காட்சியாக்கித் தருகிறது. முதலமைச்சரை வழியனுப்ப கூடியுள்ள மக்கள் திரள்.

நல்வாழ்த்துக்கள்

# தி பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிமிடெட்

பம்பாய்—கல்கத்தா—டெல்லி—சென்னை

## R. மனோகரன் & கம்பெனி

விற்பனையாளர்கள் :

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்கள், எலக்ட்ரிக் மோட்டார்கள், பாரி உரங்கள்,
பூச்சி மருந்துகள், பவர் ஸ்ப்ரேயர்கள், வீரிய ஒட்டு விதைகள்.

2. வடக்கு ரத வீதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்,
ராமனாதபுரம் மாவட்டம்.

# "திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்"



உங்கள் குடும்பம் ஆயிரம் காலத்துப்பயிர் ஒவ்வொரு தலைமுறையும் நூறாண்டு வாழ இன்பம் தேவை, இனிய வாழ்வுக்கு ஓர் இரு குழந்தைகள் இருந்தாலே போதும்.

*வெளியீடு:* மாநில குடும்ப நலதிட்ட அமைப்பு
சுகாதார, குடும்ப நலதிட்ட இயக்குநர் அலுவலகம்
சென்னை-6.

**குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்**

# சித்த வைத்தியம்

[“உடம்பை வளர்த்தேனே உயிர் வளர்த்தேனே” என்பது திருமூலர் வாக்கு. “மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்” என்கிறது குறள். பழம்பெருமை வாய்ந்த தமிழகத்தில் எல்லாக் கலைகளும் ஓங்கி வளர்ந்து வந்துள்ளன. அக் கலைகளில், தமிழரின் மருத்துவக் கலை ஒன்றாகும். நிமிர்ந்த நெஞ்சும், நேர்கொண்ட பார்வையும் கொண்ட—மக்களை உள்ளடக்கிய வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த பண்டைத் தமிழகத்தின் தொன்மைப் புகழ் வாய்ந்தது, சித்த மருத்துவக் கலை. அப்படிப் பட்ட விலை மதிக்க முடியாத கருவூலங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர், நமது மூதாதையர்கள்.

இடைக் காலத்தே சித்த மருத்துவம் ஒளி குன்றியிருந்தது. புதிய தமிழ அரசு அமைந்ததுமே, சித்த மருத்துவம் மறுபடியும் ஒளிவீசிப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது. போற்றிப் பாதுகாக்க வேண்டிய சித்த மருத்துவக்கலை பற்றி, தன்னுடைய வானொலிப் பேச்சில், கருத்தாழத்துடனும், பரந்த ஆய்வுத் திறனுடனும், அழகாக எடுத்துக் கூறியுள்ளார், தமிழக அரசின் சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடுத் துறையின் துணைச் செயலாளர். அவர் கூறும் கருத்துக்கள் அனைவருக்கும் பயன்பட, அப்பேச்சின் முழு வடிவத்தைக் “கிராம நலம்” இங்கே அளித்துள்ளது.

—ஆசிரியர். ]

நம் தமிழ் மொழியில் 64 கலைகள் உள்ளன. அவற்றுள் தலையாயது, சித்த மருத்துவம். ஏனைய கலைகள் அறிவை வளர்க்கவும் மனத்திற்கு உற்சாகத்தை தரவும் உதவுகின்றன. ஆனால், சித்த மருத்துவமோ, உடலை ஓம்பி உயிரை ஓம்புகிறது.

### வரலாற்று காலத்திற்கும் முந்தியது

இம் மருத்துவம் மிகத் தொன்மை வாய்ந்தது. இக் கலையை பண்டைத் தமிழர்கள் குமரிக் கண்டத்திலே தோற்றுவித்தார்கள் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் உணர்த்தப்பட்டுள்ளது. அப்பழைய குமரிக் கண்டம் பல கடற்கோள்களால் மறையவே அங்கு வசித்த பண்டைய தமிழர்கள் சிந்து கங்கை இடை வெளியை நோக்கிச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் ஆகமத்தையும் அதைச் சார்ந்த பல கலைகளையும் தோற்றுவித்தனர். மோகன்ஜாதாரோ, ஹாரப்பா என்னும் புவியியல் ஆராய்ச்சியில் திராவிட நாகரிகம் சிந்து கங்கைவெளியில் பரவியிருந்தது என்பதை வலியுறுத்துகிறது. அக்காலத்தே சிலாசத்து இரசம் போன்றவைகளைக் கொண்டு மருந்துகள் செய்ய உபயோகித்துள்ளனர் என்பது தெரியவருகின்றது.

வடக்கில் “சப்தசிந்து” என்னும் நாடு வழங்குவதற்கு முன்பு “போச பூமி” என்று வழங்கிய நாட்டில் ஆதி தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் உயர்ந்திருந்தார்கள். அவ்வறிஞர்கள் ஆன்ம விசாரம்செய்து மறைமொழி, நிறைமொழி மாந்தர்களாக விளங்கினர். அம்மாபெரும் அநுபூதிமான்கள் இயற்றிய மறை மொழிகள் இங்கு ஆகமங்களாகப் பரிணமிக்கின்றன. ஆகமங்களில் அறிஞர்களையும், அநுபூதிமான்களையும் பல தொகுதிகளாகவும் கணங்களாகவும் பாகுபாடு படுத்தியுள்ளனர். அவ்வகையில் பொதுத் தொகுதியினரே சித்தர்கள் ஆவர். இவர்கள் வேத காலத்திற்கு முன்பே அதாவது ஆரியர்கள் நுழைவிற்கு முன்பே தோன்றி “அறம், பொருள், இன்பம், வீடு” என்னும் நாற்பொருட்களை முறையாகவும் தெளிவாகவும் எடுத்துப் பகர்ந்தனர். ஆரியர்களின் வருகையால் இவர்கள் தென்னகம் புகுந்தனர். அப்படி புகுந்தவர்கள் பெரும்பாலும் ‘வியன்தரர்கள்’ ஆவர். அவர்களுள் சிறப்பானவர்கள் அகத்தியர், தொல்காப்பியர், திருமூலர் போன்றவர்கள் ஆவர். பெரும்பான்மையோர் முக்கூடல், காஞ்சி, திருப்பாதிரிப்புலியூர் போன்ற இடங்களில் மடங்களையும் குடில்களையும் ஏற்படுத்தி தமிழ் மொழியை வளர்த்ததோடு அன்றி மக்களுக்கு நற்சேவை செய்தார்கள். சித்தர்கள், வியன்தரர்கள், அறிவர்கள் ஆகியவர்கள் அநேக சில விரதங்களைக் கொண்டவர்கள். ஒரு சிறிதும் பிறழாமல் விரதங்களைக் கடைப்பிடித்து வந்தார்கள். அவைகளில் மருந்துதானம் ஒன்று. தங்கள் மடங்களில் மருந்துதானம் செய்வதற்காக மருத்துவ சாலைகள்

திரு கே. சிதம்பரம்
துணைச் செயலாளர், சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடுத் துறை—
தமிழக அரசு.

ஏற்படுத்தி, மக்களுக்கு பிணி நீக்கத் தொண்டாற்றினர். சித்தர்கள் ஆகமவாதிகளானபடியால் கொல்லாமை கொள்கையைப் பூண்டிருந்தனர். அதனால் அவர்கள் முக்கியமாக உலோக பாடானங்கள் போன்றவைகளையே பஸ்ப, செந்தூரங்களாகச் செய்து பிணி நீக்கம் செய்தனர். ஏனென்றால், மூலிகைகளுக்கும் உயிருண்டு என்ற தத்துவம் கண்டிருந்தனர். எனினும் மக்களின் பிணி நீக்கத்தைக் கருதி மூலிகை உபயோகிக்க நேர்ந்தால் அவைகளுக்கு பூசைகள் செய்து உபயோகித்து வந்தனர். அவர்கள் கூடியவரையில் சீவன்களுக்கு இன்னல் இழைக்காதிருந்தனர். அதனாலன்றோ சித்தர்கள் பரப்பிய மருத்துவதத்தில் பெரும்பாலும் பற்ப, செந்தூரங்களே முதலிடம் பெற்றுள்ளன. இதுவே சித்த மருத்துவத்திற்கு அடிப்படையாகும். இன்றைய நாளில் தம் தம் முறைகள் மற்றவைகளைவிட முன்தோன்றிய தென்ற பிரச்சினைகள் நம் நாட்டில் எழக் காண்கிறோம். ஆராயுமிடத்து எங்கு மனித இனம் முதன் முதல் தோன்றியதோ, அங்கு மருத்துவமும் தோன்றியிருக்கவேண்டும் என்ற நியதி உள்ளது.



உலகின் தென்பாதி முகத்தில்தான் முதல் முதல் உயிரினங்கள் தோன்றின என்ற உயிரியல் ஆய்வாளர்கள் புவியியல் ஆராய்ச்சியாளர்களும் தெற்றெனக் கூறியுள்ளனர். ஆதியில் மனித இனம் தோன்றியது பண்டைய தமிழகமாகிய குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னகம் ஆகும். இதனால் பெறப்படுவது யாதெனில் முதன் முதலில் குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழர் மருத்துவமே—சித்த மருத்துவமாக இன்று நிற்கின்றது.

இம்மருத்துவம் நவக்கோடி சித்தர்களால் உண்டாக்கப்பட்டது என்றும் பதினெண் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்றும் கேள்வி. அவர்களுடைய வரலாறுகளை நோக்குங்கால் சிலர் தென்னாட்டிலும், சிலர் வடநாட்டிலும் வாழ்ந்திருந்தார்கள் என்பதை அறியலாம். பெரும்பாலும் தென்னாட்டில் வாழ்ந்த சித்தர்கள் முதல் தமிழ்ச் சங்கம் முதற்கொண்டு வாழ்ந்துள்ளதை சங்க நூல்களால் அறியலாம். ஆகவே சித்த மருத்துவத்தில் சிறந்து விளங்கும் மெய்ஞானம், விஞ்ஞானம், உடல் தத்துவம், சமயம், மருத்துவம், பரிகாரம் போன்ற நூற்களை ஐயம் திரிபற ஓலைச் சுவடிகளில் எழுதிப் போயினர். இவைகளெல்லாம் சித்த மருத்துவத்திற்கு அடிப்படையானவை ஆகும். சில நூற்களே அச்சுக்கு வந்துள்ளன. எண்ணற்றவை அச்சுக்கே வரவில்லை. தென்னாட்டில் சித்த மருத்துவம் பெரும்பாலும் ஒவ்வொரு வீடுதோறும் பரம்பரையாக வளர்ந்து வந்திருக்கிறது. வீட்டிலுள்ள பெரியோர்கள், அறிஞர்கள், ஆண்களும் சரி பெண்களும் சரி சிக்கன முறையில் தங்கள் குடும்பங்களில் எழும் நோய்களை நீக்கி வந்துள்ளனர். மக்களுக்கு குரு-மாணவ ரீதியில் பிணி நீக்கம் செய்து சேவை புரிந்து வந்துள்ளனர்.

## தனியான சிறப்பியல்புகள்

சித்த மருத்துவத்திற்கே உரித்தான சில சிறப்பான குணங்களையும் தன்மைகளையும் கூற விரும்புகிறேன். சித்த முறையில் கட்டு, கயங்கு, சுண்ணம், பற்பம், செந்தூரம் போன்ற மருந்து வகைகள் மிகவும் சிறப்பானவை. மேலும் குளிகை மணி போன்ற காயகல்ப முறைகள் மற்ற எம்மருத்துவங்களிலும் காண்பதரிது. மூலிகைகளை உபயோகித்து பற்ப செந்தூரங்களை ஆக்குவதைவிட இலகுகளிலும் விரைவிலும் பற்ப செந்தூரங்கள் ஆக்குவதற்கு சித்தர்கள் பகை. நட்புப் பொருட்களை அறிந்து பஞ்சபூத இலக்கணங்களைக் கொண்டு உலோகங்களை மடிய வைத்தார்கள். பற்பங்கள் அணுப்பிரமாணமாக்க ஜெயநீர் திராவகங்கள் செய்துள்ளனர். மற்றும் ஒரே பற்பம் அல்லது செந்தூரத்தைக் கொண்டு வெவ்வேறு அநுபானத்தினால் பல்வேறு நோய்களைப் போக்க முடியும். சித்தர்கள் தாழ்ந்த உலோகங்களை, உயர்ந்த உலோகங்களாக்கவும் முயன்று சாதித்துள்ளனர். அம்முறைகளை மக்களுக்கு எளிதாகப் புரிந்து கொள்ளுமாறு ஏட்டில் எழுதாமல் மறைமுகமாகக் கூறியுள்ளனர். இம்முறை எல்லோராலும் கைவரப்பெற்றால் உலகில் அனர்த்தம் உண்டாகும் எனக் கருதியே பரமரகசியமான தக்க மாணவர்களுக்கு கூறிப் போந்தனர். எவ்வாறு உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக மாற்ற முடியுமோ, அவ்வாறே உடலையும் கற்பமாக்குவதற்கு வேண்டிய சாதனங்களைச் சொல்லிச் சென்றனர். சித்த மருத்துவத்திற்கே உரியதான மற்றொரு சிறப்பு நாடித் தேர்தல் முறையாகும். சித்தர்கள் நாடியின் இலக்கணம் கூறுகையில் "ஆண்மாவின் சலனத்தை உணர்த்துவது நாடி என்பதாகும்" எனக் கூறினர். நாடியைப் பற்றி எண்ணற்ற நூற்கள் உள்ளன. நாடியைக் கொண்டே நோயைக் கணிப்பது சித்த மருத்துவத்தில் முக்கியமானது. சித்த மருத்துவத்திற்கே உரியது.

முப்பு என்ற பொருள்பற்றி சித்தர்களாலும், சித்த மருத்துவர்களாலும், சித்த நூற்களிலும் கூறப்பட்டுள்ளது. மற்ற மருத்துவ முறையில் இல்லாதது முப்பு ஆகும். சித்தர்கள் கூற்றில் "முப்பு" மூன்று வகைப்படும். அவை :—

1. யோகமுப்பு
2. வாத முப்பு
3. மருத்துவமுப்பு—ஆகும்.



G.N.—6A

யோக முப்பும், வாத முப்பும் செய்வது கடினம்; மருத்துவமுப்புவை எளிதில் செய்து சித்த மருத்துவர்கள் கையாளுகின்றனர். இம்முப்பின் சிறப்பு என்னவென்றால் இதைக் கொண்டு செய்வித்த பற்ப செந்தூரங்கள், செய்கையிலும் வீரியத்திலும் தீவிரமடைகிறது.

தொகுத்து கூறுமிடத்து :—

1. காலத்தால் தொன்மை வாய்ந்தது, சித்த மருத்துவம்

2. சித்த மருத்துவம்தான் நம் நாட்டு வைத்திய மாகும். ஏனையவைகள் அந்நியர்களுடன் நம் நாட்டுக்கு வந்தவைகள் ஆகும்.

3. நவலோகம், நவமணி, நவபாஷணங்களைப் பற்ப செந்தூரங்களாக்கும் முறை சித்த மருத்துவத்திற்கே உரியது.

4. கையாளுவதில் எளிதானது ; விலையில் குறைந்தது ; நூற்றுக்கு நூறு பலனளிக்கக் கூடியது.

### தமிழக அரசின் அக்கறை

இம் மருத்துவம், மற்ற மருத்துவங்களைவிட நன்கு வளம் பெறுததற்கு, சித்த மருத்துவத்திற்கு மாநில மத்திய அரசின் ஏனைய மருத்துவங்களுக்கு ஒப்ப ஆதரவு போதிய அளவு இல்லை என்பதும், சித்த மருத்துவ நூல்கள் கடினமான தமிழில் இருப்பதும், பல பரம்பரைச் சித்த வைத்தியர்கூட, தம் பரம்பரையினரை நவீன மருத்துவக் கல்விக்கு அனுப்பி, சித்த வைத்தியத்தை புறக்கணித்ததும் காரணங்களாகும்.

புதிய தமிழக அரசின் அரவணைப்பினாலும் ஆதரவினாலும் சித்த மருத்துவம் தலைநிமிர்ந்து நடைபோட துவங்கிவிட்டது. அதன் எடுத்துக் காட்டுகள்தான்—பாளையங்கோட்டையில் உள்ள தனி சித்த மருத்துவக் கல்லூரி (பட்ட படிப் புண்டு) தலைமைச் செயலகத்திலுள்ள சித்த மருந்தகம்—அரும்பாக்கத்தில் கட்டவிருக்கும் சித்தவைத்திய மருத்துவமனை—திருச்சி மாவட்ட மருத்துவமனையில் சித்தவைத்திய பகுதி—ஆக புதிய அரசின் ஆதரவோடு, மத்திய அரசின் துணையோடு சித்த மருத்துவம் சீர்படுத்தப்பட்ட புதிய பாதையில் தமிழகத்திற்கு ஒளி தந்து தமிழர்களுக்கு உடல், உள்ள வன்மையை அளிக்கப்போவது உறுதி."

(வானொலிப் பேச்சு 10-4-68)

---


## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)** | | |
| முழுப் பக்கம் .. | 420 | 315 |
| அரைப் பக்கம் .. | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)** | | |
| முழுப் பக்கம் .. | 450 | 325 |
| அரைப் பக்கம் .. | 280 | 170 |
| **உள்பக்கம்—** | | |
| முழுப் பக்கம் .. | 400 | 300 |
| அரைப் பக்கம் .. | 210 | 160 |






2



3

25

அமெரிக்காவில் தமிழக முதல்வர்

படம் 1. தமிழக முதலமைச்சர் திரு சி.என் அண்ணுதுரை அவர்கள், வாஷிங்ட லுள்ள 'லிங்கன்' நினைவுக் கண்காட் யைப் பார்வையிட்டார். வெ யுறவு அலுவலர் எச். ஈ. கிர் (H. E. Kirby) கண்காட்சியிலுள் வைகளை முதலமைச்சருக்கு விளக் னர். படத்தில் முதலமைச்சரி அந்தரங்கச் செயலாளர் திரு சே சொக்கலிங்கம் அவர்களையும், கா லாம்.

லிங்கனின் முகத்தோற்றம் வைக்க பட்டுள்ள பகுதியை முதலமைச்ச பார்வையிட்டார்.

படம் 2. நியூயார்க் நகரத்தில் ஐ. நா சார்பில் முதலமைச்சர் அவர்களுக் அளிக்கப்பட்டவரவேற்பின்பொழு முதலமைச்சர் இந்திய மாணவர்கள் அலுவலர்கள், ஆகியோருடன் உ யாடும் காட்சி.

படம் 3. முதல்வர் அவர்கள், 'யேல்'பல்கலைக் கழக "சப் ஃபெல்லோஷிப்" (CHUBB FELLOWSHIP). பட்டம் பெற, டிமோதி டுவைத் (Timothy Dwight College) கல்லூரியில் தங்கியிருந்த பொழுது, திருக்குறள் வகுப்பு நடத்தினர்.


படம் 4. ஐ. நா-விலுள்ள இந்திய தூதுவர், திரு ஜி. பார்த்தசாரதி முதலமைச் சர் அவர்களுக்கு ஐ. நா-விலுள்ள அமெரிக்க மற்றும் வெளிநாட்டு அதிகாரிகளை அறிமுகப்படுத்தினர்,



# செய்தித் தொகுப்பு வெளியீட்டு விழா







படம் 1. தமிழக அரசு-செய்தித் துறையின் செய்திப் படத் தயாரிப்பான "செய்தித் தொகுப்பு" வெளியீட்டு விழா 4-5-1968 அன்று, சென்னை பாலர் அரங்கில் நடைபெற்றபொழுது, முதலமைச்சர் மனைவி திருமதி ராணி அம்மையார், மற்றும் அமைச்சர்களின் குடும்பத்தினர், செய்தித் தொகுப்பைக் காண வந்திருந்தனர். விழாவைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு கல்வியமைச்சர் உரை நிகழ்த்தினார்.

படம் 2. செய்தித் தொகுப்பு விழாவில், தமிழக அரசு சார்பில், தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ. சி. எஸ்., அனைவரையும் வரவேற்றார்.


படம் 3. மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களை, ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல பாதுகாப்பு நிறுவனத்தின் தென் மத்திய ஆசியப் பகுதி இயக்குநர் திரு கார்டன் கார்டர் (Gordan Cartor) ஏப்ரல் 30-ம் தேதியன்று, சந்தித்துப் பேசினார்.

படம் 4. (ஜூன் மாதத்தில் சென்னையில் சமுதாய வளர்ச்சித் துறை கூட்டுறவுப் பணிகளின் எதிர்காலம் பற்றி ஆராயக் கூடும் மாநாட்டில், மத்திய உணவு அமைச்சர் கலந்து கொள்கிறார்.)

மத்திய உணவு அமைச்சர் சென்ற முறை சென்னை வந்த போது மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் அவரை வரவேற்றார். அருகில் நிற்பது, நாடாளுமன்ற உறுப்பினர், நாஞ்சில் கி மனோகரன்.









படம் 1. வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு, 12-5-68-ல், தாயகம் திரும்பிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, சென்னை விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு.

படம் 2. விமான நிலையத்திலிருந்து முதலமைச்சர் அவர்கள் ஊர்வலம்.

படம் 3. தமிழக நகராட்சித் தலைவர்கள், ஆணையாளர்கள், கூட்டு மாநாடு, சென்னை பாலர் அரங்கில், மே 11, 12 நாட்களில் நடைபெற்றபொழுது, தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள்.

படம் 4. ஆண்டு தோறும் நடைபெறும் சிறந்த கிராம சேவக் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, புதுடெல்லியில் ஏப்ரல் 3-ம் நாளன்று மத்திய அரசு உணவு-வேளாண்மை சமுதாய நலத் திட்டம் கூட்டுறவுத் துறை ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாத சுவாமி பரிசுகள் வழங்கினார்.
















ஆளுநர் மாளிகையிலே....

படம் 1. தமிழக முன்னாள் முதலமைச்சர்கள் உருவப் படங்கள். மேதகு ஆளுநர் திரு உஜ்ஜல்சிங், தமது அலுவலக அறையில் திருக்குறள் படிக்கிறார்.

படம் 2. நூல்களைப் படிப்பதில் ஆர்வம் கொண்ட திருமதி சாந்த்சேவ் உஜ்ஜல்சிங்.

படம் 3. ஆளுநரின் மெய்க் காவலர் திரு கே. கே. வி. சிங்.

படம் 4. கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கும் திருமதி சர்தாரிணி.

படம் 5. ஆளுநரின் அந்தரங்கச் செயலாளர் திரு கே.வி.சுப்பிரமணியம். மெய்க் காவலர் திரு பெருமாள்சாமி.

படம் 6. ஆளுநரின் செயலக அலுவலர்கள்.

படம் 7. ஆளுநரின் அலுவலகம், மாளிகை பொறுப்பாளர்கள்.

# ஆளுநர் மாளிகையிலே....

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்''
—திருக்குறள்

"அரசியல் அமைப்பு முறைப்படி குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சித்தலைவன் மக்களின் பாதுகாவலன் எனப் பெரிதும் கருதி மதிக்கப்படுவான்" என்று இறைமாட்சியின் பெருமையை எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே.

குடியாட்சிமுறை குவலயம் முழுவதும் கோலோச்சி வருவதையே அறிஞர் உலகு விரும்புகிறது. மக்களாட்சி முறையே மன்பதைக்கு நலம் பயக்கும் என்பதை நாமறிவோம்,

### நயத்தக்க நாகரிகம்

'அறனிழுக்கா தல்லவை நீக்கி' குடியோம்பும் ஆட்சியமைப்பு நம்நாட்டில் நம்மாலே உருவாக்கப்பட்டது 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற உரிமையையும், பெருமையையும் நாம் பெற்றுள்ளோம். நம்மை ஆளும் தலைமையும், வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, அமைந்துள்ளது.

மக்களாட்சி வேரூன்றி தழைத்திருப்பது, நயத்தக்க நாகரிகமாகும்,

நாகரிகம் என்பதற்கு இலக்கணம் வகுக்கும் வகையில் சர்ச்சில் அவர்கள் சொன்ன கருத்துக்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். அவர் சொன்னார்:

''நாகரிகம் என்பது, ஆட்சி அலுவலர் கருத்துப்படி உருவாகும் சமுதாயமே ஆகும். அதாவது யுத்த வெறிகொண்ட ராணுவத் தலைவர்களின் பாசறைகளும் போர்முறைகளும் நீங்கி, கலகமும் தனியார் ஆட்சிக் கொடுமையும் ஒழிந்து, பாராளுமன்ற ஆட்சி ஏற்பட்டு, மக்களின் நல்வாழ்வுக்கான சட்டங்கள் உருவாகி, அவற்றை நிறைவேற்றும் பொறுப்பும் உரிமையும் பெற்ற நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு, பல்லாண்டுகளாக இந்த ஆட்சிமுறை தொடர்ந்து நடைபெற வழி காணப்பட்டுள்ளது,"

ஆம், உலக வரலாற்றிலேயே இந்த அடிப்படையான கருத்தை மையமாகக் கொண்ட பல்வேறு புரட்சிகளும் ஆக்கத் திட்டங்களும் உருவாகி செயல்பட்டு வருதை ஆழ்ந்து சிந்திக்கும் அனைவரும் நன்கு உணரலாம்.

இப்படித்தான் சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் மக்களாட்சி முறைக்கு வழிவகுத்துள்ளது. நம் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒவ்

மக்களாட்சி என்ற மாளிகையின் பெருந் தூண்களாக அணி செய்பவை, ஆட்சி அமைப்பு, சட்டப் பேரவை, நீதி மன்றம், பத்திரிகைகள் ஆகியவை என்பர். ''இந்நான்கின் மாட்சி, உயர்வு, உரிமை, செயல் திறமை ஆகிய தனிப் பண்புகளை யொட்டியே, மக்களாட்சியின் வெற்றி உருப்பெறும்" என்பது, உலகப் பேரறிஞர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ள கருத்து.

எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இவற்றைப்பற்றிய கருத்தோவியங்களை, தொடர்ச்சியாக வடித்துக் கொடுக்க எண்ணியுள்ளோம். இவற்றுள், நிர்வாக அமைப்பின் தலைமையில் விளங்கும் மேதகு ஆளுநரைப் பற்றிய "பேட்டி" ஒன்றை, இங்கே வெளியிடுகிறோம்.

'கவர்னர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ''ஆளுநர்'' என்ற அழகியச் சொல்லை உருவாக்கி, உலவ விட்ட பெருமை மாண்புமிகு நம் முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

—ஆசிரியர்.

வோரு மாநிலமும் ஆளுநர் ஒருவரின் பொறுப்பில் இயங்க வகை செய்யப்பட்டுள்ளது.

நம் நாட்டில் மக்களாட்சி முறையானது திருவள்ளுவர் சொன்ன 'முறை செய்து காப்பாற்றும் இறைமாட்சி' புத்துருவம் பெற்று புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதாக உள்ளது.

பாரதத்தின் மாநிலம் ஒவ்வொன்றும் ஆளுநர் ஒருவர் தலைமையில் ஆட்சி நடைபெற வழிவகுக்கப்பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் ஆளுநர்கள் மாநிலங்களின் பொறுப்புகளை ஏற்று ஆட்சி செலுத்துகின்றனர்.

மக்கள் கருத்தை உணருவதற்கேற்ற வகையில் குறித்த காலத்திற்கு ஒருமுறை பொதுத்தேர்தல்கள் நடைபெறுகின்றன. தேர்தல்களில் வெற்றிப் பெற்றவர்கள், சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் பொறுப்பேற்கின்றனர். அங்கே பெரும்பான்மையாக உள்ள உறுப்பினர்கள் சார்பில் அமைச்சரவை அமைகிறது.

இந்த அடிப்படையான கருத்துக்கிணங்க, தமிழக அரசின் அமைச்சரவையும், தலைமைச் செயலகமும் அதன் ஆட்சிக்கும் உட்பட்ட எல்லா அலுவலகங்களும் இயங்கி வருவதை அனைவரும் அறிவர்.

நிலையான மக்களாட்சியின் இலக்கணம்

நிலையான ஆட்சி முறையின் அறிகுறியாக மாநில ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளவர் தான் மேதகு ஆளுநர் (His Excellency the Governor) என அழைக்கப்படுகிறார், பாரத குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆளுநரை நியமிக்கிறார். ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். இவை பற்றிய விவரங்களை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 153-லிருந்து164-வரை, மற்றும் 166, 167 ஆகியவற்றிலும் விரிவாகக் காணலாம்.

அரசாங்க ஆணைகள் அனைத்தும் ஆளுநர் பெயராலேயே வெளியாவது வழக்கம். ஆனலும் அரசாங்க ஆணைகளை உருவாக்கும் பொறுப்பு முழுதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டப்பேரவை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள அமைச்சரவையே சாரும்.

தமிழகத்தின் இன்றைய ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள், சென்னை மாநகரத்தைச் சார்ந்துள்ள, கிண்டியில் எழிலுற அமைந்துள்ள சீரும் சிறப்பும் மிகுந்த மாளிகையில், இருந்து வருகிறார். (கோடைக் காலத்தில் மட்டும் உதகையிலுள்ள மாளிகைக்குச் செல்வதுண்டு.)

ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புள்ள அழகிய முல்லை நிலத்தில், ஆளுநர் மாளிகை எழில் தோற்றமளிக்கிறது. "ராஜ்பவன்" என்றழைக்கப்படும் ஆளுநர் மாளிகையின் கட்டிடங்கள் 1830 முதல் 1840 முடிய கட்டப்பட்டு அவ்வப்போது மாறுதல் செய்யப்பட்டும் விரிவாக்கப்பட்டவையுமாகும்.

## மேதகு தமிழக ஆளுநர்—

நமது மாநில ஆளுநர் மேதகு உஜ்ஜல் சிங் அவர்களை பற்றிய சில குறிப்புகள்:

மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் பஞ்சாப் மாநிலத்தில் 1895-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாள் பிறந்தார். எம். ஏ. பட்டம் பெற்றுள்ள இவர் படித்தது லாகூர் அரசினர் கல்லூரியில்.

கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் வேளாண்மையில் விருப்பத்துடன் ஈடுபட்டவர் உஜ்ஜல் சிங். இவர் பஞ்சாப் மாநிலத்தில் சட்டப்பேரவை உறுப்பினராக, 1926 முதல் 1956 முடிய தொடர்ந்து இருந்திருக்கிறார். பாராளுமன்ற உள்துறைச் செயலாளராக 1937 முதல் 1942 வரை பணியாற்றியிருக்கிறார். 1942-ல் நடைபெற்ற பாரதநாட்டு விடுதலைப் போராட்டத்தின் போது இவர் தம் பதவியை ராஜினமா செய்தார்.

லண்டனில் நடைபெற்ற முதல், இரண்டாவது, வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறார். 1930–31 ஆண்டுகளில் தம் துணைவியாருடன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். ஐ.நா. அமைப்புச் சார்பில் 1945-ல் கனடாவிலுள்ள கியூபெக்கில் நடைபெற்ற உணவு வேளாண்மை மாநாட்டில் பிரதிநிதியாக பங்கேற்றார். அவ்வாண்டில் அமெரிக்க நாட்டில் சுற்றுப்பயணம் செய்தார்.

இந்திய மத்திய கல்வி ஆலோசனைக் கழகத்திலும், அனைத்திந்திய தொழில்

ஆளுநர் மாளிகையைச் சுற்றியுள்ள செடிகொடிகள் அடர்ந்த சிறுவனம், தேசியப் பூங்காவாக விளங்குகிறது. இதன் கிழக்குப் புறத்தில்தான் நாட்டின் தந்தை அண்ணல் காந்தியடிகளின் நினைவு மண்டபம் அமைந்துள்ளது.

துள்ளித்திரியும் புள்ளிமான்கள், கலைமான்கள், புள்ளினங்கள், நானாவிதமான பறவைகள் முதலியன ஆளுநர் மாளிகை வனத்தில் காணப்படுகின்றன. இயற்கை எழிலும் செயற்கைத் தோற்ற

## வாழ்க்கைக் குறிப்புகள்

நுட்ப கல்விக் குழுவிலும் உறுப்பின ராக 1945 முதல் 1949 முடிய இருந்திருக்கிருர்.

1946-ல் அமைக்கப்பட்ட இந்தியச் சட்ட மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் கிழக்கு பஞ்சாப் அரசாங்கத்தில் தொழில் உணவுப் பொருள்கள் வழங்கும் துறையின் அமைச்சராக, 1949-ல் இருந்தார். 1952 முதல் 1956 வரை தொழில், நிதியமைச்சராக இருந்துள்ளார்.

இரண்டாவது நிதிக்குழுவில் உறுப் பினராக இருந்த இவர், அமிர்தசரஸ் கல்ஸா கல்லூரியின் (Amritsar Khalsa College) நிர்வாகக் குழுவில் 30 ஆண்டுகளாக இருந்து வருகிருர். இப்பொழுது கல்லூரியின் தலைவரும் இவர்தான்.

1965 செப்டம்பர் முதல் நாளி லிருந்து 1966 ஜூன் 27 வரை. பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநராக இருந்துள்ளார்.

இப்படி எத்தனை எத்தனையோ பொறுப்புகளை நம் ஆளுநர் ஏற் றுள்ளார். சுருக்கமாகச் சொன்னுல், நமது தலைமுறையின் தேசியத் தலைவர்களில் ஒருவர், மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள்.

தமிழகத்தின் தற்காலிக ஆளுநராக 1966 ஜூன் 28-ம் நாளன்று பொறுப் பேற்றுக் கொண்டார்.

1967 ஜூன் 16-ம் நாள், நிரந்தர ஆளுநராகப் பதவியேற்ருர்.

மும் பொலிவுற அமைந்த இம் மாளிகையில்தான், நமது ஆளுநர் அவர்களும் அவரது துணைவியா ரும் வாழ்ந்து வருகினறனர்,

தமிழகப் பண்பாட்டின் நிலைக்களனுய் மாநிலத் தலைமையின் உறைவிடமாய் விளங்கும் இம்மாளிகை யில், தமிழக அரசின் சார்பில் நடைபெறும் பல் வேறு முக்கிய விழாக்களும் நிகழ்ச்சிகளும் நடை பெறுகின்றன. தமிழகத்துக்கு வருகைதரும் முக்கிய விருந்தினர்கள் இங்கே தங்க அரசாங்கத்தின் சார்பில் ஏற்பாடாகும்.

*　　*　　*　　*

ஆளுநர் மாளிகையிலே ஆளுநரைச் சந்திக்க நாம் இப்பொழுது கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை செயலாளர் திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். தலைமையில் செல்கிருேம்.

நாம் பார்க்கப் போகும் நாளான இன்று (26—4—1968) நம் வாழ்வில் மகிழ்ச்சியான நாள்.

'ராஜ்பவன்' எனப்படும் ஆளுநர் மாளிகைக்குச் செல்கிருேம்

ஆளுநர் மாளிகை வாயிலிலே கம்பீரத் தோற்றத் துடன் தோற்றமளிக்கும் காவலரைக் காணலாம்.

முன் அனுமதிப் பெற்று அங்குப் போவோருக்கு தடையேதுமில்லை. ஆகவே, நமக்கு அன்பான வரவேற்பு கிடைக்கிறது. ஆளுநரின் மெய்க்காவலர் அறை, அங்கு வருவோரை வரவேற்கும் கூடமாக அமைந்துள்ளது.

கவின்கலையழகு கொஞ்சிட....

கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பல்வேறு நூல்களும் பத்திரிகைகளும் நிரம்பிய அந்த அழகிய அறையில் தமிழகத்தின் அண்மைக்கால வரலாறு புன்னகைப் பூக்குகிறது. ஆம், அந்த அறையில் காட்சி அளிக்கும் முன்னுள் முதலமைச்சர்கள் அனை வரும், நம்மைக் கண்டு வாழ்த்து கூறுகின்றனர்.

1946 முதல் முதலமைச்சர் பொறுப்பில் வீற் றிருந்த திருவாளர்கள் பிரகாசம், ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, ராஜாஜி, காமராஜ், பக்தவத்சலம் ஆகியோரின் உருவப்படங்கள் அங்கே வரிசையாக அமைந்துள்ளன.

ஆளுநரின் அந்தரங்கச் செயலாளர் திரு. கே. வி. சுப்பிரமணியம் நம்மை அழைத்துச் செல்கிருர். கேப்டன் கே. கே. வி. சிங், திரு பெருமாள்சாமி ஆகிய இருவரும் ஆளுநரின் மெய்காப்பாளர் ஆவர். அவர்களும் உடன் வர, மாளிகையின் மற்ருெரு பெரிய கூடத்திற்கு நாம் செல்கிருேம். பழைய ஆங்கில பாணியில் கட்டப்பட்ட மாளிகை இது என்பதை மாளிகையின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு நினைவூட்டுகிறது.

அங்கே உள்ள அறைகள், கூடங்கள், மாடங்கள், சாளரங்கள், தூண்கள், படிகள், தோட்ட வெளிகள், திரைச் சீலைகள் முதலிய அனைத்திலும் ஓர் அலாதியான எழிலும் ஏற்றமும் கைக்கோர்த்து களிநடம் புரிவதைக் காண்கின்ருேம்.

கண்ணில் தோன்றும் காட்சி எல்லாம் கவின்கலை யழகு கொஞ்சும் காட்சிகளாக உள்ளன. நேரம் நீள் வதை மறந்து—திகைத்து நின்று அங்கே உள்ள சித்திரங்களையும் சிற்பங்களையும் கண்ணுக்கு விருந் தாக்கிக்கொண்டிருக்கிருேம்.

அப்பொழுது—

மேதகு ஆளுநர் அவர்கள் வெண்தாடி தவழும் முகத்தினராய், தமக்கே உரிய ஏறு நடையினராய்— பணிவு நிறைந்த இன்முகப் பொலிவுடன், ஒளி படைத்த கம்பீரத்தோடு வருகிறார்.

இன்சொலால்தான் இவ்வுலகம் மகிழும் என்பதற்கு இலக்கியமாய் நின்று, நமது நலன் விசாரிக்கிறார். பின்னர், அமைதியாக பண்புநிறைந்த சான்றாண்மை யோடு தமது கருத்துகளை நம்முடன் பரிமாறிக் கொள்கிறார்.

ஆளுநரின் பேச்சு ஒவ்வொன்றும் அவருக்கு வேளாண்மைத்தொழிலிலுள்ள ஈடுபாட்டை எடுத்து விளக்குகின்றது. ஆமாம். விவசாயத்தில் அவருக் குள்ள தனிப்பயிற்சியும் ஆர்வமும் அவருடைய கருத்துகளுக்கு உரமூட்டுவதை சிறிது நேரத்திலேயே உணருகிறோம்.

ஆளுநரின் கருத்துகளிலுள்ள சிந்தனைத் தெளிவும், செயல் திட்டமும் பயனுள்ள அறிவுரைகளும் நமக்குப் புத்துணர்ச்சியை அளிக்கின்றன. பேரு வுகையுடன் அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்பொழுது அங்கு வந்த ஆளுநரின் துணைவி யார், திருமதி சாந்த் சேவ் உஜ்ஜல்சிங் அவர் களும் நம்முடைய உரையாடலில் கலந்துகொள்கிறார்,

## தமிழகத்தின் தனிப்பெரும் சாதனை

ஆளுநர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்கிறார்:

“தமிழகத்தின் மின் வளர்ச்சியும் குழாய்க் கிணறுத் திட்டங்களும் பாராட்டுக்குரியனவாகும். இவை தமிழ கத்தின் தனிப்பெரும் சாதனையாகும். எல்லா மாநிலங்களைவிட தமிழகம் மின் வளர்ச்சியிலும் குழாய்க் கிணறுத் திட்டத்திலும் முன்னணியில் நிற்கிறது.”

மேலும் தொடர்ந்து பேசுகையில் நாட்டில் உள்ள மின் தொடர்பு கொடுப்பட்ட குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கையில், பாதிக்குமேல் தமிழ்நாட் டிலேயே உள்ளது பெருமைக்குரியதாகும்”.

நாமும் பூரிப்போடு கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் ஆளுநர் வேறொன்றையும் சுட்டிக் காட்டுகிறார்.

## கால்நடை வளர்ப்பில் கவனம்

தமிழகத்திலுள்ள கால்நடைகள் பெரும்பாலும் செழிப்புள்ளதாக இல்லை என்பதை எடுத்துரைக்கும் ஆளுநர், அதன் காரணத்தையும் விளக்கினார்.

“தமிழக உழவர்கள் கால்நடையில் போதிய கவனம் செலுத்துவதில்லை. தீவனங்களைச் சரிவர பயன்படுத்துவதில்லை என்றுகூட அஞ்சுகிறேன்” என்றார்.

“பஞ்சாபில் சிறுசிறு விவசாயிகள்கூடநான்கைந்து கறவை மாடுகள் வைத்திருக்கின்றனர். அவை களுக்கு நல்ல தரமான தீவனங்களை அளிக்க பெரும் முயற்சி எடுத்துக்கொள்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு நிறைய பால் கிடைக்கிறது. ஆனால் தமிழகத்தில் கால் நடைகளுக்குப் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆகவே பால் உற்பத்தியும் மனநிறைவு அளிப்பதாக இல்லை” என்கிறார் ஆளுநர்.

“அதிகம் பால் தரும் முர்ரா எருமை இனம்கூட, குறைவாகவே பால் தருவதாக கேள்விப்படுகிறேன். ஆகவே சத்துள்ள தீவனங்களை கால்நடைகளுக்கு அளிக்க தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் முன்வரவேண்டும்” என்ற ஆளுநரின் அறிவுரை ஆக்கப் பணிக்கு நம்மைத் தூண்டுகிறது.

இந்தச் சமயத்தில் ஆளுநர் அவர்களின் துணைவி யார் அவர்கள் தமது அனுபவத்தைக் குறிப்பிட்டார்,

“திருமதி ஜெயம்மாள் என்ற ஒருவர் இல்லத் திற்குச் சென்றிருந்தபொழுது, அவர் வைத்திருந்த பசுக்கள் நிறைய பால் கொடுப்பதைக் கண்டேன். கால் நடைகளுக்குத் தரமான தீவனம் கொடுத்து தக்கவகையில் பேணிக் காப்பாற்றுவதே நல்ல அளவு பால் கிடைக்க வகை செய்யும்,

“பொதுவாக தமிழ் மக்கள் அனைவரும் கால் நடைகளுக்கு நல்ல தீவனம் அளிப்பதில்லை என்று குறைபாடாக கருதவேண்டியதில்லை. தனிப்பட்ட வர்கள் சிலர் நல்ல முறையில் கால்நடைகளைப் பேணுகிறார்கள். தாய்மார்கள், இதில் நன்கு கவனம் செலுத்தலாம்.”

சர்தாரிணியின் இக்கருத்தை தமிழகத்தாய்க்குலம் வரவேற்று செயல்திட்பத்துடன் நிறைவேற்றும் என்று நம்புவோம்.

ஓராண்டுத் திட்டம்—

உள்ளாட்சி அமைச்சரின் காணிக்கை

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாளன்று உள்ளாட்சித் துறை காணிக்கையாக அறிவித்த ஓராண்டுச் சாதனையாக உருவாக்கிய திட்டங்களின் விவரங்களை, மேதகு ஆளுநரிடம், கிராம நல உள்ளாட்சித்துறைச் செயலாளர் திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். எடுத்துரைக்கிறார். அகமும் முகமும் மலர, ஆளுநர் அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சிறு சிறு விவசாயிகள் பெறவிருக்கும் நன்மைகளை நம் கண்முன்னே ஆளுநரே கொண்டு வந்து நிறுத்துகிறார். “இதுபோன்ற திட்டங்களால் சமு தாயம் முழுவதற்கும் பெரிய நன்மையை உரு வாக்க வேண்டும்” என்கிறார்.

[37-ம் பக்கம் பார்க்க.]

# கிராம நூலகம்

திரு அ. திருமலை முத்துசுவாமி, சென்னை பல்கலைக் கழகம்.

[“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்” என்பது தமிழ் முதுரை. கிராமங்கள் நிறைந்த நமது நாட்டில் படிப்பறியாத கிராம மக்களுக்கு கல்விச் செல்வத்தை அளிக்கும் பணி, சமூகப் பணிகளில் எல்லாம் மகுடம் போன்றதாகும். “கிராமத்திற்கு இது இல்லை—அது இல்லை என்றில்லாமல்—இல்லாதது எதுவும் இல்லை என்று சொல்லத்தக்க அளவில் நகரத்தில் உள்ள வசதிகளை யெல்லாம் கிராமங்களுக்குச் செய்ய வேண்டும்” என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் வேண்டுகோள். கிராம மக்களின் அறிவு விளக்கைத் தூண்டி, ஏற்றம் காணுகின்ற திருப்பணியைச் செய்யக்கூடியவை கிராம நூலகங்கள்—இந்தக் கருத்தினை தெள்ளு தமிழில் எடுத்து விளக்குகிறது இக் கட்டுரை—ஆசிரியர்.]

கிராம மக்களது சீரிய வாழ்விற்கு, சிறந்த நிலைக்கு, வாழ்வாங்கு வாழும் நெறிக்கு, வாழ்க்கை வளத்திற்கு வழிவகுப்பன கிராம நூலகங்கள் என்பதை அனைவரும் அறிவோம். எனவே, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நூலகம் அமைக்க வேண்டியது, நமது தலையாயக் கடமைகளில் ஒன்றாகும்.

### தவறான கருத்து

கிராம மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக உள்ளனர். ஒரு சிலர் ஓரளவு கல்வி அறிவுடையவர்களாக விளங்குகின்றனர். மற்றுஞ் சிலர் கல்வி கற்க இப்பொழுது தொடங்கியுள்ளனர். இந்நிலைகளில் இருக்கும் கிராம மக்கள், எவ்வாறு நூல்களைப் படிக்க இயலும் என்று ஒரு சிலர் எண்ணலாம். அவ்வாறே நூலகங்கள் கற்றவர்களுக்காகத்தான் இயங்கி வருகின்றன என்று நம்மில் பலர் நினைக்கலாம். அது தவறான முடிவாகும். கல்வி அறிவில்லாத காரணத்தால் கலங்கித் தவிக்கும் மக்களுக்கு அக் கல்வி அறிவினை அள்ளி அள்ளி வழங்கும் தகுதியினை நூலகங்களே கொண்டுள்ளன. கல்வி அறிவில்லாத மக்களுக்கு அதனை வழங்கி, அவர்களைக் கலையுணர்வுடையவர்களாக, கற்றறிந்தவர்களாக ஆக்கவேண்டிய பொறுப்பு இன்று நூலகங்களைச் சார்ந்ததாகும். அது இன்றையச் சூழ் நிலையில் நூலகங்களின் தலையாய பணிகளில் ஒன்றாகக் கூட விளங்குகின்றது என்று கூறினும் மிகையாகாது. பொதுமக்களிடையே, கல்வி அறிவை பரப்புவதற்குரிய சிறந்த சாதனமாக இன்று நூலகம் கருதப்படுகின்றது. சிறப்பாக, கிராமங்களில் வாழும் மக்களை மாண்புடைய மக்களாக ஆக்கும் கல்வி அறிவைப் பரப்புவதற்குரிய சிறந்த சாதனமாக இன்று நூலகம் கருதப்படுகிறது. சிறப்பாக, கிராமங்களில் வாழும் மக்களை மாண்புடைய மக்களாக ஆக்கும் கல்வி நெறியை வளர்ப்பதற்கு கிராம நூலகங்கள் பெரிதும் துணை செய்யும்.

### இரண்டு முடிவுகள் :

இன்று நம் நாட்டில் பல கிராம நூலகங்கள் ஏற்கெனவே அறிவுப் பணியில் ஈடுபட்டுள்ளன. இன்னும் பல நூலகங்களை நாம் அமைக்க இருக்கின்றோம். கிராம நூலகங்களை மக்கள் நன்கு பயன்படுத்தி, நன்மைகள் பலவற்றைப் பெறவேண்டும் எனின், பின்வரும் இரண்டு பொருட்களைப் பற்றி நாம் நன்கு சிந்தித்து நல்லதொரு முடிவிற்கு வரவேண்டும். ஒன்று, கிராம நூலகங்களுக்கு வாங்கவேண்டிய நூல்கள் எத்தகையனவாக இருக்கவேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருதல் ஆகும். மற்றொன்று, கிராம நூலகங்களை மக்களுக்குப் பயனுள்ளவையாக ஆக்கும் பணியில் ஈடுபடக்கூடிய ஆற்றலும், அறிவும் அனுபவமும் உடைய, அதாவது தக்காரை நூலகர்களாக அந்நூலகங்களுக்கு நியமிப்பது பற்றி ஒரு முடிவினை எடுத்தல் ஆகும்.

கிராம மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக விளங்குகின்றனர் என்பதை நாம் முன்னர் கண்டோம். எனவே அவர்களுக்காக திறக்கப்படும் கிராம நூலகங்களில் எளிய நடையில் எழுதப்பெற்றதும், விளக்கப் படங்களுடன் கூடியதும், தடித்த எழுத்துக்களில் அச்சிடப் பெற்றதும் ஆகிய நூல்களே முதலிடம் பெறுதல் வேண்டும். படவிளக்கங்கள், அவர்களது கண்ணையும், கருத்தையும் ஈர்ப்பனவாக இருத்தல் வேண்டும். நூலில் அச்சிடப் பெற்றிருக்கும் எழுத்துக்கள் பெரியவையாக, அதாவது தடித்தவையாக விளங்கின், அவர்கள் சிரமம் எதுவும் இன்றி எளிதாக நூலைப் படிக்க இயலும். அடுத்து அவர்களுக்கு விருப்பமான பொருள்கள், அவர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பொருள்கள், அவர்களது வாழ்க்கை வளத்திற்கு, நல்வாழ்விற்கு வழிகாட்டும் பொருள்கள் ஆகியவை பற்றிய நல்ல நூல்களைச் சேகரிப்பதில் கிராம நூலகங்களை அமைப்பவர்கள் கண்ணும் கருத்துமாக

இருக்கவேண்டும். அத்தகைய நூல்களைத்தான் அவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்; மேலும் அந்நூல்கள் தாம் அவர்களது படிக்கும் ஆர்வத்தினைத் தூண்டிக்கொண்டே இருக்கும்.




கிராம மக்களுக்கு அன்றாடச் செய்திகளை அறிவதில், நாட்டு நடப்புக்களைப் புரிந்து கொள்வதில் உலகத்தில் நடப்பவற்றைத் தெரிந்து கொள்வதில் விருப்பம் இருக்கலாம். அத்தகையவர்களுக்கும், ஏனைய மக்களுக்கும் செய்திகளை அறிவிக்கும் செய்திப் பலகையினை ஒவ்வொரு நூலகமும் கொண்டிருக்கவேண்டும். முக்கிய செய்திகளை அன்றாடம் நல்ல, நல்ல தாளில் கண்ணைக் கவரும் வண்ணம் எழுதி, அதனை மக்கள் கண்களில் படும்படி செய்தி அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைக்கவேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தீட்டப் பெறுகின்ற திட்டங்களைப் பற்றி, கிராம மக்கள் நன்கு அறிந்து கொள்ளுதற்பொருட்டு, அத்திட்டங்களின் இயல்பையும் சிறப்பையும், அவை வெற்றி பெற்றால் நாம் அடையும் நன்மைகளையும், அவற்றால் நாட்டிற்குக் கிட்டும் பயன்களையும் விளக்குகின்ற காட்சிப் படங்களை அழகுற கிராம நூலகங்கள் தயாரித்து வைக்கவேண்டும். மக்களுக்கு அவற்றைக் காட்டுவதோடு, அவை பற்றிய விளக்கங்கள் அனைத்தையும், நூலகர் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். விண்ணை முட்டி நிற்கும் மாமலைகள், நீர் வளம் சுரக்கும் பெரிய ஆறுகள், இயற்கை எழிலுடன் விளங்கும் காடுகள் ஆகியவை தரும் இயற்கைக் காட்சிகளை எழில் ஓவியங்களாகத் தீட்டி வைக்கலாம். அல்லது அவற்றைச் சித்தரிக்கும் ஒளி நிழற் படங்களை வாங்கி வைக்கலாம். இவற்றின் மூலம், மலை வளத்தை, ஆற்றின் சிறப்பை, இயற்கையின் எழில் கோலத்தை அவர்கள் நன்கு தெரிந்து கொள்ள முடிகின்றது. விஞ்ஞான கண்டு பிடிப்புக்களையும் இவ்வாறு அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம். அணைக்கட்டு, மின்சார நிலையம், போன்றவற்றின் ஒளி நிழற் படங்களையும் மக்கள் பார்வைக்கு வைக்கலாம். விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் வண்ணப் படங்களும் நூலகங்களில் அவசியம் இடம் பெறுதல் வேண்டும். இவற்றோடு கிராம, மாவட்ட, மாநில நாட்டு வரைப் படங்களையும் கிராம நூலகங்கள் வாங்கி வைக்கவேண்டும். அவை பற்றி அடிக்கடி நூலகத்தார் மக்களுக்குக் கூறவும் வேண்டும். சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிகளைச் சித்தரிக்கும் படக்காட்சிகளை கிராம நூலகங்கள் அடிக்கடி மக்களுக்குக் காட்டி உதவலாம். அவ்வாறே விவசாய வளர்ச்சி, விவசாய நுணுக்கங்கள், ஆகியவைப் பற்றி செய்தி படக் காட்சிகளையும் காட்டுவதற்கு அவை ஏற்பாடு செய்யலாம். ஆரோக்கிய வாழ்வு, உடல்நலம் பேணும் வகை ஆகியவை பற்றி மக்கள் நன்கு அறிந்து கொள்ளுதற்பொருட்டு அவை சம்பந்தமாக படக்காட்சிகளுக்கும் நூலகங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

**வானொலிப் பெட்டியும் தேவை**

வானொலிப் பெட்டி ஒன்றும், ஒவ்வொரு நூலகத்தில் இருப்பது மிகவும் நல்லது. வானொலியில் ஒலிபரப்பாகும் இசை, நாடகம், சொற்பொழிவு, செய்தி முதலியவற்றை மக்கள் கேட்டு மகிழ்வதற்கு இது சிறந்த வாய்ப்பினை அளிக்கும். மாலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஒலிபரப்பாகும் கிராம நிகழ்ச்சியைப் போன்று பல நிகழ்ச்சிகளை கிராம மக்களுக்காகத் தயாரித்து அவ்வப்பொழுது ஒலிபரப்புவதற்கு அகில இந்திய வானொலி நிலையத்தினர் ஏற்பாடு செய்யவேண்டும். கிராம நூலகங்கள் இந் நிகழ்ச்சிகளை எல்லாம் முன்கூட்டியே தெரிந்துகொண்டு, அவற்றைப் பற்றி உரிய காலத்தில் கிராம மக்களுக்கு அறிவித்து, அவர்கள் அவற்றைக் கேட்டு மகிழும்படிச் செய்யவேண்டும். அவைபற்றிய அறிக்கைகளை அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும்.

கிராம நூலகம், கிராம ஊராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த அல்லது பள்ளிக்கூடத்திற்குரிய விசாலமான அறை ஒன்றில் அமைக்கப்படலாம். விசாலமான அறையில் நூலகம் இருந்தால்தான் மக்கள் எவ்விதச் சிரமமும் இன்றி அங்கு வந்து போக இயலும். மேலும் படக்காட்சிகள் நடத்துவதற்கும், சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வதற்கும் அவ்வறை மிக வசதியாக இருக்கும். மேலும் அவ்வறையில் இயற்கை வெளிச்சமும் காற்று வசதியும் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லையெனில், செயற்கை வெளிச்சத்திற்கும் காற்றிற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

**பயிற்சி பெற்ற நூலகர்கள்**

கிராம நூலகங்கள் மக்களால் நன்கு பயன்படுத்தப் பட வேண்டுமெனில், அவ்வாறே மக்கள் அவற்றால் நல்ல பலன்களைப் பெற வேண்டுமெனில், கிராம நூலகங்கள் பயிற்சி பெற்ற நூலகர்களுடைய மேற்பார்வையில் நடைபெற வேண்டும். பயிற்சி பெற்ற நூலகர்களே அவற்றை நன்றாக நடத்த இயலும். எனவே "யாரை யாவது நியமித்து எப்படியாவது நடத்தலாம்" என்ற

எண்ணத்தை நாம இனியாவது அறவே விடுத்து, அதற்கென பயிற்சி பெற்றோரே, அவற்றைத் திறமையாக நடத்த முடியும் என்று எண்ணவேண்டும். நூலகப் பயிற்சி பெற்றோரையே கிராம நூலகங்களில் நூலகர்களாக நியமிக்கவேண்டும். இதற்கு மக்களும் அரசும் பெரும் ஆதரவு தரவேண்டும்.

**பக்குவமான மனப்பாங்கு படைத்தவர்கள்**

பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் வெற்றிபெற்று, குறுகிய கால நூலகப் பயிற்சியினையும் முடித்தவர்களையே நூலகர்களாக நியமிக்கவேண்டும். அவர்களுக்கு உயர் நிலை எழுத்தர்களுக்குரிய ஊதியம் அளிக்கவேண்டும். இதற்குப் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லையெனில், பள்ளி ஆசிரியர் ஒருவரது பொறுப்பில் நூலகத்தை விட்டுவிடலாம். அவருக்கு இதற்காக மேற்கொண்டு சிறிய ஊதியத்தைக் கொடுக்கலாம். ஊதியம் இல்லாது இருப்பின் அப்பணியை ஒருவரும் ஏற்க முன்வரமாட்டார்கள். அந்த ஆசிரியர்கள், நாளடைவில் நூலகப்பயிற்சி பெற்றால் நல்ல பயனுள்ள நூலகப் பணிகளைச் செய்ய இயலும் என்பது பலரது கருத்து ஆகும். பொதுக் கல்வி அறிவு, நூலகவியல் அறிவு ஆகியவற்றோடு இப்பணியில் ஈடுபடுவோருக்கு, கிராமத்தின் அருமை பெருமைகள், நாட்டின் வளர்ச்சிக்கு கிராமத்தின் பங்கு முதலியவை பற்றிய தெளிந்த அறிவும் இருத்தல் அவசியமானதாகும். மேலும் அவர்கள் பண்புடையவர்களாகவும், நமது நாட்டின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றுகின்ற புனித எண்ணத்தை உடையவர்களாகவும் இருக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக, கிராம மக்களது விருப்பு, வெறுப்புக்களை எல்லாம் நன்கு அறிந்து அவரறிற்கேற்ப பக்குவமாக அவர்களை நூலக உணர்வு உடையவர்களாக ஆக்குகின்ற திறனையும் உடையவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். தொழில் திறமை, பணி செய்யும் ஆர்வம், மனிதாபிமானம், மலர்ந்த முகத்துடன் பொறுமையாக நூலகத்திற்கு வருகின்ற மக்களை வரவேற்று, கனிவாகப் பேசி அவர்களுக்கு உதவுகின்ற இயல்பு, முதலியவை இப்பணியில் ஈடுபடுவோருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள் ஆகும்.

மேலே கூறியவற்றோடு பரந்த நூலறிவு, உயர்ந்த நோக்கம் பிறரைப் புரிந்துகொள்ளக்கூடிய திறன், பிறருக்கு வழிகாட்டுவதற்குரிய தன்னம்பிக்கை, வருங்காலத்தை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய திறமை, அதற்கேற்ப கிராம மக்களை வழி நடத்துகின்ற ஆற்றல், விட்டுக்கொடுக்கின்ற இயல்பு, உலகியலுக்கு ஏற்ப தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளுகின்ற பண்பு, பரிவு, சுறுசுறுப்பு, பணியில் ஆர்வம், அக்கறை, மகிழ்ச்சி, உண்மையான உழைப்பு, பிறரைத் தன்வயப்படுத்தல், நன்னடத்தை, நல்ல பழக்க வழக்கங்கள், பிறரோடு ஒத்துழைக்கும் தன்மை, மேலதிகாரிகளுடைய நல்லெண்ணத்தைப் பெறுகின்ற வண்ணம் பணி செய்தல், முதலியனவும் அவர்களிடம் காணப்படுமாயின் அவர்கள் சுடச்சுடச் ஒளிவிடும் பொன்போல் விளங்கி, பேரும் புகழும் பெறுவர். இவற்றிற்கெல்லாம் மேலாக பிறரது கண்டன உரைகளைப் பொறுக்கின்ற பொறையுடைமையும் அவர்களுக்கு இருக்கவேண்டும். இத்துடன் கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரையும் தனித் தனியாகச் சந்தித்து, அவர்களது எண்ணத்தை அறிந்து, அதற்கேற்ப நூலகர் வழிகாட்டுவாராயின், அது அவருக்குச் சிறந்த வெற்றியைத் தேடித்தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.




**பயன்படும் நூல்களும் பயிற்சி பெற்ற நூலகர்களும்**

கிராம நூலகங்களை மேற்பார்க்கும் பணியில் ஈடுபடுவோருக்கு பரந்து விரிந்த அறிவு இருத்தல் நல்லது. நூலகவியல் அறிவோடு, அரசியல்கட்சிகள், அமைப்புக்கள், ஆட்சிமுறை, கிராமச் சமூக இயல், சமூக பொருளாதாரம், பிறப்பு, நோய், முதலிய சமுதாய நிலைபற்றிய விவரங்கள் கிராமங்கள், ஊர்கள், நகர்கள், ஆகியவற்றிடையே காணப்படும் வேறுபாடுகள் ஆகியவை பற்றிய அறிவும் அவர்களுக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது. ஆதாரக் கல்வியின் சிறப்பு, அக்கல்விக்குரிய பாடத் திட்டம், நூல்கள், புதிதாகப் படிக்கத் தொடங்கி இருக்கும் மக்களுக்குரிய நூல்கள் ஆகியவை பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

இறுதியாக, நூலகங்களைத் திறம்பட நடத்துகின்ற திறனும், அன்றாட வேலைகளை நல்லமுறையில் முடிக்கின்ற அநுபவமும், அரியவற்றை, நல்லவற்றை, கேட்போர் மனங்கொள்ளும் வண்ணம் எடுத்துக் கூறுகின்ற சொல் வன்மையும் அவர்களுக்கு இருத்தல் வேண்டும். இதுவரை கூறியவற்றால், கிராம மக்களுக்குப் பயன்படும் நூல்களையே கிராம நூலகங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பயிற்சி பெற்ற நூலகர்களே கிராம நூலகங்களைச் செம்மையுடன் நடத்த முடியும் என்பதும் இனிது பெறப்படும்.

—o—

## " அன்பு வேண்டுகோள் "

விவசாயப் பெருங்குடி மக்களே! வர்த்தகப் பிரமுகர்களே!
அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த வணக்கம்

* * *

அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்வான் பிராண்டு
கலப்பு உரங்களை வாங்கி, நெல், கரும்பு, வாழை,
குச்சிக்கிழங்கு மற்றும் எல்லா பயிர்களுக்கும்
உபயோகித்து அதிக இலாபம் அடையுமாறு
வேண்டுகிறோம்.

* * *

ஏஜெண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.
விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

* * *

போன் : 3992 & 4758 தந்தி : MANURE

தயாரிப்பாளர்

பெவிக் சயின்டிபிக் பெர்டிலைசர்ஸ்,
அம்மாப்பேட்டை.
சேலம்-3.



நமது நாடு விவசாயத் துறையில் வெற்றி பெற வேண்டுமானால்
விளைச்சல் பெருகவேண்டும்

**விவசாயிகளே!**

**உற்பத்தியைப் பெருக்கி அதிக லாபம் அடைய**
**உங்கள் பயிர்களுக்கு எங்களது 'ஸ்ரீ பாலமுருகன்'**
**இரசாயன கலவை உரங்களையே உபயோகியுங்கள்**

**ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு இன்றே விண்ணப்பிக்கவும்.**

**"ஸ்ரீ பாலமுருகன் பெர்டிலைசர்ஸ்"**
**2/1097: சந்நியாசிக் குண்டு ரோடு,**
**கிச்சிப்பாளையம், சேலம்-1.**

**போன் : 4102 & 5103.** **தபால் பெட்டி எண் : 39.**

[32-ம் பக்கத் தொடர்ச்சி]

விவசாயத்துறையில் நவீன முறைகளை பின்பற்ற வேண்டும் என்பதை ஆளுநர் ஆதாரங்கள் பல வற்றைச் சுட்டிக்காட்டி, எடுத்துரைக்கிறார்.

"இயந்திரக் கலப்பைதான் இலாபம் தரும்; டிராக்டர்கள் கொண்டு உழுவதினால் சிக்கனம் ஏற்படுகிறது; காலமும் விரயமாவதில்லை. இரு எருதுகள் ஒரு நாள் முழுவதும் ஒழுங்காக உழுதால் கூட, சிறு அளவு வயலைத்தான் உழமுடியும், ஆனால் டிராக்டர்களைக் கொண்டு ஆழ உழுது மிகு விளைச் சலைப் பெறமுடியும்"

விவசாயக் கருவிகளில் ஏற்படும் பழுதுகளை, அந்தந்த வட்டாரங்களிலே செப்பனிட்டுக்கொள்ள சிறு தொழிற்சாலை அமைவது அவசியம் என்று ஆளுநர் வலியுறுத்துகிறார்.

வேளாண்மைத் துறையில் வல்லுநரான அவரைத் தவிர, வேறு யார் இப்படிப் பொருத்தமாக ஆலோசனை கூற இயலும்?

பஞ்சாப் மாநிலத்தில் நிலத்தைத் தரிசாகப் போடக் கூடாது. அவ்வாறு செய்தால் அரசே அந்நிலத்தை எடுத்துக்கொண்டு பிறருக்கு குத்தகைக்கு கொடுக் கும். இதன் வாயிலாக உற்பத்தி பெருகுகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

* * *

மொத்தத்தில் நாம் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் பெரும்பாலும் விவசாயத்தைப் பற்றியே ஆளுநர் அதிகம் பேசுகிறார், ஏழை, எளிய விவசாயிகள் நலனைப் பற்றி அவர் எடுத்துரைக்கும் கருத்துக்கள் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பதை அடிக்கடி உணர்த்துகின்றன.

ஆளுநரின் அலுவலக அறையில் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் இருப்பது, நம் கண்ணுக்கு 'பளிச்' என்று தெரிகிறது. குறிப் புணர்ந்த ஆளுநர் அவர்கள், நாள்தோறும் சில குறள்களைப் படித்துவருவதாகக் கூறினார்.

* * *

மேதகு ஆளுநருடன் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, உரையாடலில் இடை இடையே கலந்து கொள்ளும் திருமதி சாந்த் சேவ் உஜ்ஜல்சிங் அவர்களுடைய கருத்துக்களும் நம்மை கவர் கின்றன.

அம்மையார் அவர்கள் தமக்கு மிகவும் பிடித்தமான பாடல் ஒன்றின் கருத்தை எடுத்துரைத்தார்கள். அது இதுதான்.

"துன்புற்றோரின் துன்பம் தீர்க்க
உதவிசெய்வதே
மனித சமுதாயத்திற்கு ஒருவர்
செய்யும் பணியாகும்.
இந்தப் பணிக்கேற்ற உள்ளக்கனிவோ
அல்லது அதற்குத்
தேவையான அவகாசமோ, ஆற்றலோ
பெற்றிருக்கும்
வாய்ப்பு அனைவருக்கும் கிட்டாது."

ஆனால், அம்மையார் அத்தகைய நல் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார், அதன் விளைவு? "எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற தமிழ்நாட்டுச் சான்றோர் மொழிக்கு விளக்கமாக இருக்கிறார், மேதகு ஆளுநரின் துணைவியார்.

சர்தாரிணியின் தொண்டுள்ளம் பல்வேறு சமூக பணிகளில் அவரை முக்கியப் பொறுப்பேற்கச் செய்துள்ளது. சேவைக்குழு [Guild of Service] செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) முதலிய வற்றின் தலைவியாக இருக்கிறார்.

### மகளிர் மழலைகள் நலனுக்காக ஏடுகளில் தனி இடம்

செஞ்சிலுவைச் சங்க பணிகளுக்கு புதிய ஊக்கம் தரும் வகையில் சிறப்பாக உருவாகியுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்களை இவர் விளக்கினார்.

குறிப்பாக, சென்னை மாநகரின் சிந்தாதிரிப் பேட்டைப் பகுதியில் நடைபெறும் குடும்ப நலத் திட்டப் பணிகளை விவரித்தார். ஊனமடைந்த மக்களின் நல்வாழ்வில் நாட்டங்கொண்டு நற்பணி யாற்ற, டாக்டர் எம். நடராஜன் போன்ற பல நிபுணர்களின் உதவியுடன் தக்க பணிமனைகளை உருவாக்கவிருப்பதை ஆர்வத்துடன் எடுத்துரைக் கிறார். இப்பணிகளுக்காக மற்ற மாநிலங்களில் உள்ள நிலைகள், தமது மேனாட்டு அனுபவங்கள் முதலியவைகளை தமிழகச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைக்கவிருப்பதாகவும் கூறினார்.

குழந்தைகளிடம் இவருக்குள்ள தனி அன்பு, தாய்க் குலத்திற்கே உரிய தனி பண்பல்லவா? அதில் வியப்புக்கு இடமேது? ஆனால் சர்தாரிணி அவர் களின் தாயன்பில், தனிச்சிறப்பு ஒளிவிடுகிறது. அதை ஆலோசனையாக எடுத்துரைத்தார். வேண்டுகோளாகவும் விடுத்தார்.

"குழந்தைகள் நலனுக்கானப் பணிகளில் எல்லா பொது நல அமைப்புகளும், பத்திரிகைகளும்கூட, உள்ளன்போடு பணியாற்ற வேண்டும்" என்று வேண்டுகோள்விடுத்தார் அவர். "ஏடுகளில் குழந்தை கள் நலனுக்காக தனியிடமும், பக்கங்களும் ஒதுக்க வேண்டும்" என்கிறார். திருமதி உஜ்ஜல்சிங் நிறைய புத்தகங்கள் படிக்கும் பழக்கம் உடையவர். அதுமட்டு மல்ல; புத்தகங்களை விலைக்கு வாங்கிப் பாது காப்பதையும் கடமையாகக் கொண்டவர்.

"குழந்தைகள் நலமும், மாதர் நலமும் ஒருங்கிணைந்து நாடு எங்கும் நற்பணிகள் பரவ வேண்டும்" என்று தமது தாய் உள்ளத்தை, தமக்கே உரிய பாணியில்

அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். (இந்த அம்மையாருக்கு மூன்று புதல்வியரும், ஒன்பது பேரக் குழந்தைகளும் உள்ளனர்).

• • •

ஆளுநர் மாளிகையிலே ஆட்சிப் பொறுப்பு அலுவல்களை கவனிக்கவும், மாளிகைக்கு வரும் விருந்தினர்களை உபசரித்தல் முதலிய பொறுப்புகளை கவனிக்கவும், ஆளுநரின் அந்தரங்கச் செயலாளர் மெய்க்காப்பாளர் ஆகியோருக்கு உதவியாக வேண்டிய அலுவலாளர்கள் உள்ளனர்.

ஆளுநர் மாளிகையில், மருத்துவப் பணிகளை டாக்டர் சி. என். பாண்டுரங்கம் ஏற்றுள்ளார்.

நம்முடைய ஆளுநர் அவர்களுக்குத் தோட்டக் கலையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. மாளிகையிலே உள்ள அலுவலாளர்களிடம் உற்சாகமான குறிப்புகளை அளித்து தோட்டக்கலை பணிகளை செம்மையுற கவனித்து வருகிறார்.

• • •

இனிக்கும் இன்னொரு சேதி—

சர்தாரிணி தமிழ் மொழியைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். தக்க ஆசிரியை ஒருவரிடம் தமிழ்க் கற்று வருவதாக அகமகிழ்வுடன் தெரிவிக்கிறார்; அதுமட்டுமல்ல, தமிழிலேயே மேடையில் சொற்பெருக்காற்று மளவுக்குப் பயிற்சி பெறப் போவதாகவும், இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறியிருப்பதாகவும், தெரிவித்தார்.

அவருடைய உறுதியும், ஆர்வமும் நம்மை பெருமிதம் கொள்ளச் செய்யும் அதே நேரத்தில் ஆளுநர் இன்னொன்றையும் எடுத்துரைக்கிறார்:

"அதோ அந்தக் கோப்புகளில் (Files) முக்கியமான பத்திரிகை குறிப்புகளை எல்லாம் நானே வெட்டி யெடுத்து அவற்றை மாவட்டவாரியாகப் பிரித்து வைத்திருக்கிறேன். இதை நானே செய்து கொள்கிறேன். என் பணிகளை நானே செய்தால்தான் மகிழ்ச்சி" என்கிறார்.

அவருடைய பேச்சு, நம் நெஞ்சில் நீங்கா இடம் பெறுகிறது.

முடிவாக, மேதகு ஆளுநரிடமும், திருமதி சாந்த் சேவ் உஜ்ஜல்சிங்கிடமும் விடைபெறுகிறோம்.

அப்பொழுது

ஆளுநர் மேஜை மீதுள்ள "பகவத் கீதை" நூல் நம் கண்ணில் படுகிறது.

"என்னால் செய்யத்தக்கதுவும்,
என்பால் இலதும், உலகினிலே
என்னால் அடையத் தக்கதுவும்,
இல்லை; வினைகள் செய்கின்றேன்"

பகவத்கீதையின் அந்த வாசகங்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன. நம்மைப் பலவாறாகச் சிந்திக்கத் தூண்டுகின்றன. உயர்ந்த நிலையில் இருப்பவர், ஒழுங்காகச் செயல் புரிவதில் உள்ள உண்மை விளங்குகிறது.

"உண்டால் அம்ம, இவ்வுலகம்" என்ற தமிழ்ப் பாடல்—புறநானூற்றுச் செய்யுள்—நம் கருத்தை அள்ளுகிறது. அந்த உயர்ந்த நினைவுகளில் நம் இதயம் கனிந்து நெகிழ்கிறது.

ஏறத்தாழ 73 வயதை எட்டிவிட்ட நேரத்திலும், கடமையை உணர்ந்து பணியாற்றும் அவரது தொண்டுள்ளம், நம்மை உணர்ச்சிக்கோளமாக்குகிறது.

* • *

நன்றியுணர்வோடு மாளிகையைத் திரும்பி பார்க்கிறோம்.

"உயர்வே உள்ளுக! கடமையைத் தொடர்ந்து செய்க" என்ற கருத்தலைகள், நம் மனத் திரையில் எதிரொலிக்கின்றன.

சுற்றிலுமுள்ள பசுமைக் காட்சிகள், மனதின் நிறைவுக்கேற்ப, கண்ணுக்கும் நிறைவைத் தருகின்றன.

'இன்சொலால் ஈத்தளிக்கவல்லார்க்கு' இவ்வுலகு, தன் புகழை அள்ளித் தருவதுபோல், ஜனநாயகத்துக்கு பெருமைத் தேடித்தரும் வகையில் பணியாற்றும் ஆளுநர் பணிகள், நம் சிந்தையிலே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன.

"ஆம். முறை செய்து காப்பாற்றும் இறைமாட்சியின் மாண்பு மறக்கக்கூடியதா?"

ஆசிரியர்

---

முதல் அட்டைப் படம்:

மேதகு ஆளுநரும், அவருடைய மனைவியாரும், இவ்விதழ் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறார்கள்.

# ஊருக்கு நல்லவர்

**ஒரு சிறிய கிராமம்; அதற்கொரு சிறிய ஊராட்சி மன்றம்; அம் மன்றத்திற்கொரு கல்விக் கழகம்; அதன் செயலாளர், திரு. பாடீல் அவர்கள் அவருடன், 'பஞ்சாயத்து ராஜ்' என்ற ஆங்கில திங்கள் இதழ் ஆசிரியர் நடத்திய பேட்டியினை சுருக்கமாக கூறுகிறது இக் கட்டுரை.**

நான் அவரை ஊராட்சிக் கூட்டத்தில் சந்தித்தேன். திடகாத்திரமான அவர், புன்னகையுடன் என்னை நோக்கினார்.

ஊராட்சித் தலைவர் என்னை அவருக்கு அறிமுகம் செய்ய விரும்பினார். "எங்கள் ஊர் தீவிர விவசாயி திரு தத்தாத்ரே பாடீல் இவர்தாம்" என்று அவரை எனக்கு அறிமுகம் செய்தார்.

இரு கரங்களையும் குவித்து, அன்பான குரலில் "வணக்கம்" என்றார் திரு. பாடீல்.

**மனங்கவரும் ஆற்றல்......**

முதல் சந்திப்பிலேயே அவர் என்னை பெரிதும் கவர்ந்தார்.

"எங்கள் கல்விக் கழகத்தின் செயலாளரும் இவர்தான்" என்றார் ஊராட்சித் தலைவர்.

"எதுவரை தாங்கள் படித்திருக்கிறீர்கள்?" நான் கேட்டேன்.

"நான்காவது வகுப்புவரைதான்" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

"என்னுடைய சிறுவயதில் நான் பள்ளி செல்லவில்லை; என் தந்தைக்கு உதவியாக இருந்தே காலத்தைக் கடத்தி விட்டேன்; அந்த தவறை இன்று நன்கு உணர்கிறேன். எனவேதான், எங்கள் ஊரில் எந்தக் குழந்தையும் பள்ளி செல்லாது இருக்கக்கூடாது என்ற குறிக்கோளுடன் பணியாற்றுகிறேன்" என்று மேலும் கூறினார்.

மாலை வெயிலில் அவரது முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது.

"தங்களது எண்ணம் விரைவிலே ஈடேறும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது" என்றேன்.

"எல்லாம் அவன் செயல்" என்று அவர், ஆகாயத்தை நோக்கி கரம் குவித்தார்; ஆம். அவர் தெய்வ நம்பிக்கையில் மிகுந்த பற்றுள்ளவர்.

"தங்களது வேளாண்மை எவ்வாறிருக்கிறது?" என்றேன் நான்.

"மக்காச் சோளம், பருத்தி ஆகிய இரண்டையும் பயிர் செய்கிறேன். என்னிடம் இருபத்தைந்து ஏக்கர் நிலமிருக்கிறது. அதில் பதினெட்டு ஏக்கருக்கு நல்ல பாசன வசதியிருக்கிறது: ஓர் ஏக்கரில் 15 குவிண்டால் சோளம் விளைவித்திருக்கிறேன். வீரிய ஒட்டுச் சோள ரகத்தை பயிர் செய்ததில் எனக்கு ஏக்கருக்கு 21 குவிண்டால் மகசூல் கிடைத்திருக்கிறது. என்றார் திரு. பாடீல்.

"வீரிய ஒட்டுச் சோளத்தை மட்டுமே ஏன் பயிரிடக்கூடாது?"

"அடுத்த ஆண்டு அவ்வாறே செய்வதற்கு திட்டமிட்டுள்ளேன்"

"எங்கள் வட்டாரம் முழுவதிலும் வீரிய ஒட்டுச் சோளம் பயிரிடப் போகிறோம் அதற்கு திரு. பாடீல் போன்ற தீவிர விவசாயிகள் முன் வந்து, குறிக்கோளை நிறைவேற்றித் தர வேண்டும்" என்றார் வட்டார அலுவலர்.

"என்னிடம் ஒரு டிராக்டர் இருக்கிறது" என்றார் திரு. பாடீல் மெதுவாக.

"அப்படியா இன்னும் வேறு எவரிடமும் டிராக்டர் இருக்கிறதா?" என்றேன் ஆவல் மிகுதியில்.

"இவர் ஒருவரிடம் தாம் டிராக்டர் இருக்கிறது; அதை மற்றவர்களுக்கு வாடகைக்குத் தருகிறார், மற்றவருக்கு உதவும் மனப்போக்குள்ளவர் திரு. பாடீல் அவர்கள். வேளாண்மையில் சக உழவர்களுக்கு இவர் ஒரு வழிகாட்டியாக இருந்து, அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதில் பெரும் துணை நிற்கிறார் திரு. பாடீல்" என்று அவரது, சேவையை விளக்குகிறார், ஊராட்சித் தலைவர்.

**நெஞ்சில் நிறைந்தவர்......**

திரு. பாடீல், வெட்கத்தால் தலை குனிந்து தரையை கிளறிக் கொண்டிருந்தார்.

தாதாலா கிராமத்தை விட்டு வெளியேறிய பிறகும்கூட வெகு நாட்கள் வரை திரு. பாடீல் என் நினைவிலேயே நின்று செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

அவரைப் போன்ற செயல் வீரர்கள் தீவிர உழவர்களால் தாம், நம்நாடு உணவுத்துறையில் தன் தேவையை நிறைவாக்கிக் கொள்ள முடியும்.

# நல்வாழ்வுப் பணிகள்

நந்தூர் ஒரு சாதாரண கிராமம். இது மேற்கு வங்காளத்திலுள்ள பர்த்துவான் மாவட்டத்திலுள்ளது. இதன் மக்கள் தொகை 1,160 மட்டுமே.

இக்கிராமத்திற்குப் போதிய போக்குவரத்து சாலே வசதிகள் உள்ளன. அஞ்சல் நிலேயம், ஆரம்பப்பள்ளி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை இருக்கின்றன.

இக்கிராம மக்களில் 80 சதவீதத்தினர் வேளாண்மையையும், எஞ்சியுள்ளவர்கள் மட்பாண்டம் செய்தல், தச்சு வேலேகளேச் சார்ந்தும் வாழ்கின்றனர். 640 ஏக்கர் பரப்பளவுள்ள இக்கிராமத்தில் 512 ஏக்கர் நிலங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் 80 சதவீத நிலங்கள் தாமோதர நதி அணைக்கட்டினுல் பாசன வசதியை பெறுகிறது. இக்கிராமத்தில் பயிரிடப்படுபவைகளில் முக்கியமானவை நெல், மழைக்கால காய்கறிகள், உருளைக்கிழங்கு, கோதுமை முதலியவை ஆகும்.

## நகருடன் ஒன்றிய வாழ்க்கை

இக்கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளியும், பக்கத்து கிராமத்தில் உள்ள உயர் நிலேப் பள்ளியும், இக்கிராமத்தில் படித்தவர்களின் எண்ணிக்கையை மிகுதியாக்கியுள்ளன. முதியோர் கல்வி நிலேயம் சில காலம் பணியாற்றியது. நிதி வசதியின்மையால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லே. கல்லூரிப் படிப்பை ஆறு மைல் தூரமே உள்ள பர்த்துவான் நகருக்குச் சென்று பெறலாம். சுலபமான போக்குவரத்து வசதியிருப்பதால் நகரத்தோடு இக்கிராமம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இக்கிராம மக்கள் பயன்படுத்தும் ஆடை அணிகள், பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட பொருள்கள், நல்ல ஆசனங்கள், வானெலிகள் ஆகியவற்றை காணுகையில், இவர்கள் நகர வாழ்க்கையோடு ஒன்றிவிட்டார்கள் என்பது தெளிவாகிறது.

## மாறுத தன்மை

இங்குள்ள பெரிய வீடுகள் சுமாரான வீடுகள் மற்றும் இங்கு தருவிக்கப்படும் செய்தித் தாள்கள் கிராம மக்களின் வாழ்க்கை முறையை முற்றிலும் மாற்றிவிட்டன. ஆனுலும் கிராம வாழ்க்கைக்கு அடிப்படையான முறைகளும், அங்கு பழக்கத்தில் உள்ள முறைகளும் என்றும்போல் மாறுமல் ஒரே தன்மையுடையதாக இருக்கிறது.

## இளேஞர் சங்கங்களின் தோற்றம்

நந்தூர் கிராமத்தின் பக்கத்தில் உள்ள ஜோடேராம் கிராமம் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள ஒரு கிராமம். முன்னேற்ற திட்டங்களில் பெரும்பான்மையானவற்றை இக்கிராமம் மேற்கொண்டுள்ளது. இங்கு இளேஞர் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்த கிராமத்தின் திட்டங்களே நிறைவேற்றும் பொறுப்பு பர்த்துவான் நகரத்திற்கு இருப்பதால் பத்து இளேஞர்சங்கங்கள் ஏற்படுத்தவேண்டிய குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், திறமைமிக்க அநேக நந்தூர் இளேஞர்கள் ஆர்வமாக இருப்பது, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. கிராமத்து இளேஞர் தலேவர்களுக்கும், அலுவலர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டதனுல் இளேஞர் சங்கம் ஏற்பட உதவியாக இருந்தது. கிராமத்து முதியவர்களும் இளேஞர் சங்கத்திற்கென தற்காலிகமான ஓர் இட வசதி ஏற்படுத்தி கொடுத்து ஒத்துழைத்தார்கள். இந்தச் சங்கம் 1964-ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 8-ம் தேதி ஏற்பட்டதிலிருந்து, இரண்டு திங்களுக்கு எவ்வித செயல்களேயும் மேற்கொள்ளவில்லே. இதன்பின் அதிக மனிதசக்தி தேவையுள்ள, பணச்செலவு அதிகமாகும் வேலேகளே மேற்கொள்ளாமல் பணியாற்றி வந்தது.

## மூன்று செயல் திட்டங்கள்

1964–65-ம் ஆண்டில் இச் சங்கம் 3 வகை செயல் திட்டங்களே மேற்கொண்டது. அடுத்த ஆண்டில், மூன்று தலேப்பின்கீழ் ஏழு அம்ச செயல் திட்டம் ஒன்றை மேற்கொண்டது. அவையாவன (1) பொருளாதாரம் (2) பொழுதுபோக்கு (3) சமுதாய நலப்பணிகள். இந்திய அரசின் வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் தெரிவித்த செயல்முறைப்படி இளேஞர் சங்கம், கூட்டாகவும் தனித் தனியாகவும் பொருளாதார திட்டங்களே மேற்கொண்டன. இதன் முன்னேடித் திட்டமாக 1965-ஆம் ஆண்டு தரிசாக உள்ள நிலங்களில் கூட்டாக நெல் சாகுபடி தொடங்கப்பட்டது. இந்த நிலங்களே ஊராட்சிகள் ஒதுக்கிக்கொடுத்தன. இந்த நிலம் தாமோதர பள்ளத்தாக்கு கார்பரேஷன் நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் உள்ளன. 1965-ஆம் ஆண்டில் நிலத்தை சீர்திருத்தும் பணி தொடங்கி வைக்கபபட்டது. இதற்கு அடுத்த ஆண்டு, சங்க உறுப்பினர்களின் உதவியோடு நிலச் சீர்திருத்த வேலே ஆரம்பிக்கப்பட்டது. உறுப்பினர்கள் நாற்றங்காலே எழுப்புவதற்குத் தேவையான நெல்விதைகளே இலவசமாக கொடுத்து உதவினர்கள். சங்க உறுப்பினர்களில் 15 பேர்களின் உடல் உழைப்பும், மற்றவர்களின் தொழில் நுட்ப உதவியும் மற்றும் தேவையான உதவிகளும் இத்திட்டத்திற்கு கிடைத்தன. இந்த நிலத்தில் ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்யப்பட்டு, அங்குள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்கப்பட்டது.

—42-ம் பக்கம் பார்க்க.

# பிற மாநிலங்களில்..

துன்பங்களும் துயரங்களும் தனித்து வருவதில்லை அத்துடன் பல சோதனைகளும் வருவதுண்டு என்பதற்கேற்ப, ஓரிசா மாநிலத்திலுள்ள முருடா என்ற கிராம மக்கள் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தனர். அவர்களின் துன்பங்கள் கண்ணீர் வடிக்கத் தக்கவை.

சென்ற ஆண்டு பெய்த மழையினாலும், புயற் காற்றாலும் அதிக வெள்ளம் ஏற்பட்டு, அவர்களுடைய நெல்வயல்கள், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. இந்த வெள்ளப் பெருக்கத்திற்குப் பின் தோன்றிய அல்லல்களில், தங்களுக்கு மறு வாழ்வு இருக்கிறதா என்ற நம்பிக்கையையே அவர்கள் இழந்துவிட்டனர். எங்கும் ஓரே துன்ப நிகழ்ச்சிகளே காணப்பட்டன..

## இடரை எதிர்த்து..

முருடா கிராமத்து மக்களால் இவ்வளவு பெரிய இயற்கை சீற்றத்தை சமாளிப்பதென்பது மிகவும் துயர் நிறைந்த செயல்தான். எனினும் இயற்கையின் கோபத்திற்கு அவர்கள் பலி ஆடுகள்போன்று மௌனமாக இருக்க முடியாது என்பதை தெளிவாக அறிந்திருந்தனர். எல்லாம் விதியின் செயல் என்று இருக்காமல், இடரை எதிர்த்து போராடுவதற்குத் தங்களை, செயல்வீரர்களாக்கிக் கொண்டனர். இவர்களுக்குக் கிடைத்த உதவியையும் ஒத்துழைப்பையும் கொண்டு, இக் கிராம மக்கள் தங்களின் வருங்காலத்தைச் செம்மைப்படுத்திக்கொள்ளவும், தங்களின் வருங்காலச் சந்ததியினரின் நல்வாழ்விற்காக கடினமாக உழைக்கத் தொடங்கினர். இவர்களின் மறு வாழ்விற்கு வேண்டிய ஒத்துழைப்பு

களை இவ்வூராட்சியின் வளர்ச்சி அதிகாரியும் பிறரும் அளித்தனர். மாவட்ட நீதிபதி திரு என். சி. பெருரியா என்பவரும் இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடும் முருடா மக்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைப்பதற்கு தனிக் கவனம் செலுத்தினர்.

**உழைப்பும் உறுதியும் உருவாக்கிய பாசன வசதி**

இக் கிராமத்திற்கு அண்மையிலேயே இருந்த சில நீரோடைகளுக்கு கரைகள் கட்டி, அந்த நீரானது வயல்களின் பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டது. இதனுல் இப் பகுதியிலுள்ள வயல்கள் எல்லாம் பசுமையாகக் காட்சியளிக்கத் தொடங்கின. இக் காட்சி, பக்கத்து கிராம மக்களின் கவனத்தை இதன்பால் ஈர்த்தது. தங்கள் கிராமத்திலுள்ள குளத்திலிருந்தும், இவ்வாறு ஒரு கரை கட்டினுல், தாங்களும் நீரை கொண்டு சென்று பாசனம் செய்யலாமே என்ற நம்பிக்கை அவர்களுக்கும் ஏற்பட்டது. இவ்வாருன கரை கட்டுவதற்கு ரூபாய் 600 தேவைப்பட்டது. இதை ஒருவழியாகச் சமாளித்தபின், தங்களின் உடல் உழைப்பாலும், உறுதியாலும் கரை கட்டி முடிக்கப் பெற்றது.

பல நூறு ஆண்டுகளாக இங்குள்ள நீரை பயன்படுத்தாமல் இருந்ததை தங்களது காலத்திலாவது கரைகட்டி நீரை பாசனத்திற்குத் திருப்பி விட்டதைப் பற்றி இக் கிராம மக்கள் பெருமை கொண்டனர். கங்கை நதிக்கு அளிக்கும் ஒரு புனிதத் தன்மை இக்குளத்து நீருக்கும் உண்டு என்று அவர்கள் கருதினர்.

**ஒவ்வொரு சிற்றூரிலும்**

குளத்திற்குக் கரை அமைத்துப் பாசன வசதியை ஏற்படுத்த முடியும் என்பதை அறிந்த அப்பகுதி மக்கள் அனைவரும், தங்கள் தங்கள் ஊரில் கிடைக்கும் நீரை பாசனத்திற்கு உபயோகிக்கத் தொடங்கினர். இவ்வாறு அஜானு என்ற கிராம மக்களும் தங்கள் கிராமத்திற்கு அண்மையில் ஓடும் நீரோடைக்கு கரைகள் கட்டி 250 ஏக்கர் நிலத்தைப் பாசன வசதி உள்ளதாக மாற்றி அமைத்தனர்.

இவ்வாறு இந்தியாவின் கிராமப் புறங்கள், எந்தவித விளம்பரமும் இல்லாமல், வெளியுலக தொடர்பும் இன்றி பல அரும்பெரும் சாதனைகளைச் செய்துகொண்டிருக்கின்றன. ஒரிசாவைச் சேர்ந்த இந்த மக்கள் தங்களது கடின உழைப்பாலும் தீரத்தாலும், 550 ஏக்கர் நிலங்களை வரட்சிக் கொடுமையிலிருந்து செழிப்பானதாக மாற்றியிருக்கிருர்கள்.

முதலில் பயிரிடப்பட்டுள்ள நெல்லின் அறுவடைக்குபின், அதே வயலில் கோதுமை, உயர் விளைச்சல் ரக நெல், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிட விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். தற்போது ஏற்படுத்தியிருக்கும் கரைகளை கன மழையும், வெள்ளமும் சேதப்படுத்தாமல் காப்பதுதாம் இவர்களுடைய பிரச்னையாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைச் சமாளிப்பதற்கு பணம் தேவைப்படுகிறது. இந்தக் கரைகளை இக்கிராம மக்கள் 'ஜகன்நாத்' கோயிலைப்போல புனிதமானதாகக் கருதுவதால், எப்பாடுபட்டேனும், இக்கரைகளைப் பாதுகாப்போம் என்று உறுதி கூறுகின்றனர். அவர்கள் மேலும், "நமது ராணுவ வீரர்கள் இமயமலை அடிவாரத்தில் நின்று நாட்டின் எல்லைகளை இமை கொட்டாது காப்பதுபோல், நாங்களும் இக்கரைகளைக் கண்காணித்து வருகிரோம்" என்று உறுதியுடன் கூறுகின்றனர்.

---

நல் வாழ்வுப் பணிகள்—40-ம் பக்கத் தொடர்ச்சி.

இந்த சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கோழிப்பண்ணை, வாத்துப் பண்ணை, வீட்டுக்காய்கறித் தோட்டம் போன்ற பொருளாதார வளர்ச்சி திட்டங்களை தனித்தனியாக ஆரம்பித்து நடத்தினர்கள். வீட்டுக் காய்கறித் தோட்டத்தை 10 உறுப்பினர்கள் மேற்கொண்டனர். உறுப்பினர்களுக்கு விதைகளும் நாற்றுகளும் மற்றும் விவசாய வழிமுறைகளும் இலவசமாக கிடைத்தன.

**சத்துள்ள உணவு உற்பத்தியில் சங்கங்கள்.**

இளைஞர் சங்க உறுப்பினர்கள் கோழிப் பண்ணைகளை தனித்தனியே தொடங்குவதற்கு உதவியாக ஒவ்வொருவருக்கும் நான்கு கோழிக் குஞ்சுகள் அளிக்கப்பட்டன. இப் பண்ணைகளை, உறுப்பினர்கள் மிகவும் ஆர்வத்துடன் நடத்தி வந்தனர். ஆனுல் ஒரு வாரத்தில் குஞ்சுகள் இறந்துவிட்டன. சிறு குஞ்சுகளை எப்படி வளர்ப்பது என்ற அனுபவமும் பழக்கமும் இல்லாமையே குஞ்சுகள் இறப்பதற்கு காரணமாக இருந்தன. சங்க உறுப்பினர்களில் ஒருவர், வாத்து பண்ணை ஆரம்பிக்க முன்வந்ததால், அவருக்கு உயர்வகையைச் சேர்ந்த ஆறு குஞ்சுகள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. வாத்துக் குஞ்சுகளை வளர்ப்பது பற்றிய போதிய அனுபவம் இல்லாமை இவருக்கு சற்று சிரமமாகவே இருந்தது. அதனுல் இவர் இத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்.

**சந்ததியின் நல்வாழ்விற்காக**

இந்தச் சங்கம் 1964-ல் ஊராட்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமுதாய வேலைத் திட்டங்களில் பங்கு கொண்டு பணியாற்றத் தீர்மானித்தது. ஓர் ஆரம்ப பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு தாங்களே முன்வந்து, உடல் உழைப்பைக் கொடுப்பதற்கு சங்க உறுப்பினர்கள் முன் வந்தனர். இந்தக் கிராமத்திற்கு மிகவும் தேவையாக இருந்த சாலை ஒன்றைப் பழுது பார்ப்பதற்கும் இவர்கள் உடல் உழைப்பு தருவதற்கு முன்வந்தனர். மேலும் இவர்கள் உரக் குழி ஒன்றைத் தோண்டி, அதில் கழிவுப் பொருட்களை நிரப்பி அதை நெல் சாகுபடிக்கு பயன்படுத்தினர்.

தேசிய நெடுஞ்சாலையில் பஸ்ஸிலிருந்து இறங்கி, இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள நந்தூர் கிராமத்திற்கு வந்தால், இங்கு வாழும் குறைந்த அளவுள்ள மக்கள் தங்களின் வருங்காலச் சந்ததியினரின் நல் வாழ்வுக்காக இந்தக் கிராமத்தை சிறந்த முறையில் உருவாக்குவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட நல் வாழ்வுப் பணிகளை நாம் தெளிவாக நேரில் அறிந்துகொள்ளமுடியும்.

## இதோ ஒரு யோசனை !

# மி
# கு
# வி
# ளை
# ச்
# ச
# லு
# க்
# கு

மிகு விளைச்சலை அடைவதற்கு நல்ல தரமான விதைகளைப் பயன்படுத்துவதுதான் ஒரே சிறந்த வழி. நல்ல விதைகளைக்கொண்டு, சிறந்த சாகுபடி முறைகளையும் மேற்கொண்டால், எவ்விதப் பயிரும், அமோக விளைச்சலைக் கொடுப்பது திண்ணம். அறுவடையிலிருந்து நமக்குக் கிடைக்கும் விதைகளில், வைக்கோல், கற்கள், தூசுகள், மண், நோயால் பீடிக்கப்பட்ட விதைகள், நன்கு பக்குவமடைந்து முதிராத விதைகள் ஆகியவை கலந்துள்ளன. சில விதைகளை விதைத்தவுடன் முளைவிடாததற்கு காரணம், அவை நோயால் பாதிக்கப்பட்டதாகவும், உடைந்ததாகவும் இருப்பதே. இப்படிப்பட்ட விதைகளை நாம் விரும்பி விதைக்க மாட்டோம் என்பது திண்ணம். ஆகவே, நாம் நல்ல பொருக்கு விதைகளையே தேர்ந்தெடுத்து விதைக்க வேண்டும்.

## பொருக்கு விதைகளால் விளைச்சல் சிறக்கும்....

பொருக்கு விதைகளை தயாரித்துக் கொடுப்பவர்கள், நமக்கு சிறந்த விதைகளையும், நன்கு முளைவிடக்கூடிய விதைகளை மட்டுமே வினியோகிக்கிறார்கள். இவர்கள் விதைகளில் கலந்திருக்கும் வைக்கோல். சிறு கற்கள் மண், பாதிக்கப்பட்ட விதை, பக்குவமடையாத, உடைந்த விதை ஆகியவற்றை நீக்கிவிட்டு, நல்ல விதைகளையே விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். மேலும் விதைக்கு ஏற்றவாறு, அவற்றை உலரவைத்து பக்குவப்படுத்துகிறார்கள். இவை போன்ற பொருக்கு விதைகளை நாம் சாகுபடிக்கு பயன்படுத்தினால், விதைகள் கழிவு இல்லாமல், எல்லாவிதைகளும் முளைவிடும் என்பதில் ஐயமில்லை. சிலர் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு, விதைகளை ஒரு வாளித் தண்ணீரில் போட்டு, அதில் மூழ்கும் விதைகள் நல்ல விதைகள் என்று நினைக்கிறார்கள். இந்த முறையினால் தண்ணீரில் மூழ்கும் விதைகள், பக்குவமடைந்து முதிர்ந்த விதைகள் என்பதை மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும். ஆகையால், பொருக்கு விதைகளை சாகுபடி செய்து ரசாயன உரங்கள் வீணாகாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பொருக்கு விதைகளில் ரசாயன கலவைகள் சேர்ந்திருப்பதால், இவை விதைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் விதைகள் முளைவிடுவதைத் தடுக்கும் கிருமிகளை அழித்து செடிகள் நன்கு வளர்வதற்குத் துணை செய்கின்றன. இவ்வாறு பொருக்கு விதைகளை விதைப்பதால், விதைத்த விதைகள் அனைத்தும் முளைத்து, அவை செழிப்புடன் வளர்வதற்கு நாம் உறுதி செய்தவர்களாவோம்.

அடுத்து வரும் சாகுபடிகளில், நாம் பொருக்கு விதைகளையே பயன்படுத்தி, அதிலுள்ள நன்மைகள் அனைத்தையுமே அடைய முயற்சிக்க வேண்டும்.

வீட்டுக்கும்

நாட்டுக்கும்

மட்டுமல்ல,

உலகுக்கே

ந
ல்
வ
ழி
கா
ட்
டு
ம்

மக்கள் தொகைப் பெருக்கத்தால்—வாழ்க்கைத் தரத்தில் குறைவு ஏற்படுவதுடன், போதுமான அளவு உணவும் கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைப்பினும் சத்துள்ள உணவைப் பெறுவது எளிதன்று.

மக்கள் தொகைப் பெருக்கத்தால்—சுகாதாரத்திற்கு கேடு;

சுற்றுப்புறத் துப்புரவிற்கும் கேடு.

மக்கள் தொகைப் பெருக்கத்தால்-

போதுமான மருத்துவ வசதி இல்லை; வீட்டு வசதி இல்லை;

இன்னும் எவ்வளவோ! இதற்கு ஒரே வழி, அதுவும் முதல் வழி..

நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றியும், நமது மக்களின் சராசரி உணவு 12·8 அவுன்சிலிருந்து 12·4 அவுன்சாகக் குறைந்துள்ளது. உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்தும், மக்கள் பெருக்கத்தின் காரணமாக ஒவ்வொருவரின் சராசரி உணவுத் தேவையும் போதுமானதாக இல்லை. முன்னேற்றமடைந்துள்ள மேல்நாடுகளுடன் நமது மக்களின் சராசரி உணவை ஒப்பிடுகையில் நமது உணவின் அளவு குறைந்திருப்பதோடன்றி, அதனுடைய தரமும் சத்துள்ளதாக இல்லை என்பது கண்கூடு. எல்லா விலையும் அதிகரித்து இருக்கும் தற்போதைய நிலையில், சாதாரண ஏழை மக்கள், சத்துள்ள உணவுகளான பழங்கள், பால், நெய், முட்டை, மீன், மாமிசம் போன்றவற்றை வாங்கி, அவற்றை தங்களது உணவுகளில் சேர்த்துக்கொள்ள முடியாது.

# ஒரேவழி, முதல்வழி

சத்துள்ள உணவுகளை உட்கொள்ள முடியாததால் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். தரங்குறைந்த, போதுமான சத்தில்லா உணவுகளை வெகுநாட்கள் சாப்பிட்டு வருவதால், உடலின் எடை குறைந்து, நோய்களை எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடலுறுப்புக்கள் இழந்துவிடுகின்றன. இதனால் உடலுருக்கி நோய், பெரிபெரி, ஸ்கர்வி, ரிக்கட்ஸ் மற்றும் பல நோய்கள் ஏற்படுகின்றன. அதனால் குழந்தைகள் எப்போதும் சுறுசுறுப்பற்று, சோம்பலாகவே இருப்பதோடு, அவர்களின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு, உடலின் எடையும் குறைகிறது.

**சுகாதார கேடுகளுக்கு ஆளாக வேண்டிய நிலை....**

பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, உற்பத்தியின் அளவு பெருகாததால் போதுமான ஆடைகள் கிடைப்பதில்லை. ஆடைகள் தயாரிப்பில் உற்பத்தியைப் அதிகப்படுத்தினாலும், அதிகமாகிக்கொண்டிருக்கும் மக்கள் தொகை, ஆடைகளின் அதிக உற்பத்தியை ஈடுசெய்து விடுகிறது. பெரும்பான்மையானவர்களுக்கு போதுமான ஆடைகள் இல்லாமல், இவர்கள் குளிரைத் தாங்க முடியாமல், பல சுகாதாரக் கேடுகளுக்கு உள்ளாகிறார்கள். ஆண்டு ஒன்றிற்கு அமெரிக்க நாட்டினர் தலைக்கு 131 மீட்டர் துணியை அணிகிறார்கள். ஆனால் நமது நாட்டினர் தலைக்கு ஆண்டுக்கு 19 மீட்டர் துணியைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

மனிதனின் உடல் நலத்திற்கு, போதுமான சுகாதார வசதியுள்ள வீடும், துப்புரவான சுற்றுப்புறமும் தேவை. சுகாதாரமற்ற வீடும், சூழ்நிலையுந்தான் குழந்தைகள் அடிக்கடி நோயால் அவதியுறுவதற்குக் காரணங்கள் ஆகும். சிறிய வீடுகளில் அதிகமானவர்கள் நெருக்கமாக வாழ்ந்து வருவதால், அவர்கள் இளம் வயதிலேயே எலும்புருக்கி நோய், நிமோனியா, மற்றும் இன்புளுயன்சா ஆகிய நோய்களால் தாக்கப்படுகின்றனர். வீட்டு வசதிப் பிரச்சினை ஏற்கெனவே, மிகவும் கடுமையாக இருக்கிறது. இத்துடன் ஆண்டு ஒன்றுக்கு அதிகரித்துவரும் 120 லட்சம் மக்கள் பெருக்கம், மேலும் வீட்டுத் தொகையைக் கூடுதல் ஆக்குகிறது. போதுமான சுகாதார வசதியற்ற நகரங்களிலும், குடிசைகளிலும், மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வருவதால், இவர்களை நோய்கள் மிகவும் விரைவிலேயே பற்றிக்கொள்கின்றன.

**மருத்துவ தேவையிலும் நெருக்கடி....**

நாட்டின் வருவாய் குறைவாக இருப்பதால், ஒருவருடைய ஆண்டு வருவாய் ரூ. 350 ஆக இருக்கிறது. போதுமான சுகாதார வசதிகள் நாடு முழுவதும் ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றன. பயிற்சி பெற்ற மருத்துவர்கள் போதுமான அளவில் இல்லாததால் குறைந்த அளவு மருத்துவத் தேவையைக் கூட நிறைவேற்ற இயலவில்லை.

மருத்துவர்களில் 67 சதவீதத்தினர் நகரங்களிலும், எஞ்சியுள்ளவர்கள் கிராமங்களிலும் பணிபுரிகின்றனர். கிராமங்களில் பணிபுரிகிறவர்கள் நாட்டின் மூலை முடுக்குகளுக்கு இன்னும் செல்லாமல் மாவட்ட தலைமை இடங்களிலே இருந்து விடுகின்றனர். தேவையான கவனிப்பும், மருத்துவ வசதியும் இல்லாமல், அதிக அளவில் தாய், சேய் மரணங்கள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் போதிய நிதி வசதியில்லாமை, பயிற்சி பெற்ற மருத்துவர்களின் பற்றுக்குறை, சுகாதாரமற்ற வீட்டு வசதி, சரியான உணவின்மை, பயிற்சிபெற்ற தாதிகள் இன்மை ஆகியவையேதாம்.

மக்கள் பெருக்கத்திற்குத் தாய்மார்கள் காரணமாக இருப்பதோடு, திட்டமற்ற மகப்பேற்றால், அவர்களின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது

**மகப்பேறு அதிகம், மரணத்திற்கு வழி....**

ஐந்து அல்லது ஆறு குழந்தைகள் பெற்ற தாய்மார்களுக்கு, பின்பு குழந்தை பெறுவதில் ஆபத்து இல்லை என்ற ஒரு தவறான நம்பிக்கை இருந்து வருகிறது. உண்மை என்னவெனில், நான்கு குழந்தை பெற்ற பின்புதான் குழந்தைப் பேற்றில் இரு மடங்கு சிக்கல் இருக்கிறது. முதல் குழந்தை பெற்றதைக் காட்டிலும் ஐந்து மடங்கு ஆபத்து ஆறு குழந்தைக்குப் பின்பு ஏற்படும் பிரசவத்தால் ஏற்படுகிறதென்று கூறுகிறார்கள். ஆகவே மூன்று குழந்தைகளுக்குப்பின் மகப்பேறு இல்லாமல் கட்டுப்படுத்துவது நாட்டிற்கு நன்மை பயப்பதோடு, தாய்மார்களின் மரணத்தையும் குறைக்கிறது.

போதுமான பொருளாதார வசதியின்மை, தரமான உணவின்மை, அதிக மக்கள் பெருக்கம், தேவையான மருத்துவ, சுகாதார வசதிகள் இன்மை ஆகியவைதாம், நமது பிரச்னையாக இருக்கிறது. நாம் மகிழ்ச்சியாக இருக்க நமது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான் முதல் வழியும் ஒரே வழியுமாகும். எனவே அனைவரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஆர்வம் காட்டி செயல்படுவோமாக.

---

**"பஞ்சாயத்து ராஜ்", "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" "குருக்ஷேத்ரா" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை : பக்கங்கள் : 1, 39 முதல் 45 வரை.**

**Articles reproduced from 'Panchayati Raj' on pages : 39 to 42, 44 and 45, from "Intensive Agriculture"** on page 43 and from "Kurushetra" on page 1.

*With the best compliments of :*

## DALMIA CEMENT (BHARAT) Ltd.

DALMIAPURAM

H.O. : 4, SCINDIA HOUSE, NEW DELHI.

A DALMIA ENTERPRISE

*Manufacturers of :*

PORTLAND CEMENT
PORTLAND POZZOLANA CEMENT
REFRACTORIES

## K. C. A. D. Chidambara Nadar & Co.,

SATHUR

*Agents :*

Shaw Wallace & Company Limited, Madras
Standard Paper Industries, Madras
Esso Standard Easten Inc., Madras

*Branches :*

Sivakasi, Rajapalayam, Sankarankoil, Madras & Cochin

*Dealers in :*

Gelatine, Crocodile Brand Glue Flakes, Star Brand Fertilisers
Star Brand Animal Feeds, Water Proof Packing Paper Rolls
AND
Esso Match Wax, Esso Paraffin Wax
AND
Esso Industrial Lubricants, Etc.

சிறு சேமிப்பின் அவசியம் பற்றி எளிய தமிழில், இரத்தினச் சுருக்கமாக விளக்குகிறது, இக்கட்டுரை. அனைவரும், குறிப்பாக மகளிர் படித்துப் பயன் பெறவேண்டியது இது. 'கிராம நலத்'தில் இதழ் தோறும் மகளிர்-குழந்தைகளுக்காக அவர்களுக்குப் பயன்படும் விஷயங்கள்-இரண்டு பக்கங்கள் வெளியிடலாம்'' என்று அண்மையில் கருத்துத் தெரிவித்தார், தமிழக ஆளுநரின் மனைவியார் சர்தாரிணி உஜ்ஜல் சிங். (பக்கம் 37) அவர்களுடைய வேண்டுகோளை இந்த இதழிலேயே ''கிராமநலம்'' நிறைவேற்ற முன்வந்துள்ளது. தொடர்ந்துவரும் இதழ்களிலும் 'மகளிர்-குழந்தைகள் பகுதிக்கு' என்று, இரண்டு பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.]

# ஒரு கல்லில் இரு மாங்காய்

[திருமதி என். புஷ்பவல்லி, சென்னை-24.]

அப்போது எனக்குத் திருமணமான புதிது. குடும்ப நிர்வாகத்தில் நான் ஒரு கற்றுக்குட்டி. கணவர் தரும் பணத்தை அப்படியே செல வழித்துவிட்டு நிற்பேன். அப்போதெல்லாம் பக்கத்து வீட்டுக் கல்யாணி அம்மாள் திடீரென்று 2 தங்க வளையல்களைக் கொண்டுவந்து காட்டி ''இது எப்படி இருக்கு புஷ்பா'' என்று கேட்பார். இன்னொருநாள் ஒரு காஞ்சீபுரம் பட்டுப் புடவையைக் கொண்டுவந்து விமர்சிப்பார். அந்த அம்மாளுக்கு ஏது இவ்வளவு பணம்? எப்படி இவைஎல்லாம் வாங்குகிறார் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கும். எனக்குப் பணம் சேமிக்கவேண்டும் என்ற ஆசைதான். ஆனால் எப்படி சேமிப்பது என்பதுதான் தெரியாமலிருந்தேன்.

ஒருநாள் அந்த அம்மாளிடம் கேட்டதற்கு "நீ ஒரு பைத்தியக்காரி. உன் கணவன் கொடுக்கிற பணத்தையெல்லாம் தீர்த்து விடுகிறாய். நான் அப்படி செய்வதில்லை. என் கணவர் வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் கொஞ்சம் கொஞ்சம் மீதம் பிடிக்கிறேன், அதிலிருந்து மாதாமாதம் சீட்டுக் கட்டுகிறேன்', என்று விளக்கினார்.

## தவறான பாதை

என் கணவருக்கு இந்த சீட்டுக் கட்டும் வேலை கடுகத்தனையும் பிடிக்காது. சீட்டு பிடிப்பது மோசடி என்று அடிக்கடி சொல்லுவார். எனவே, வேறு எப்படிச் சேமிப்பது என்ற கேள்வி எனக்குள் பிறந்தது. தங்க வளையல் ஆசை என்னை விட்டால்தானே? மீண்டும் அந்த அம்மாளை அணுகினேன். 'அப்படியா நீ ஒருத்தி' இதற்குப்போய் உன் கணவரின் சம்மதத்தை எதிர்பார்க்கிறாயா? அவருக்குத் தெரியாமல் கட்டு, என்று விஷயத்தைப் போட்டு உடைத்தார். நானும் அந்த அம்மாளின் யோசனையைப் பின்பற்றினேன்.

திடீர் என்று ஒருநாள் பக்கத்து வீட்டில் ஒரே கூச்சல். நான் எட்டிப் பார்த்தேன்.

''அவன் நல்லா இருப்பானா? என் வயத்திலே அடிச்சிட்டானே!'' என்று பதைபதைத்துக் கொண்டிருந்தார் கல்யாணி அம்மாள். விஷயம் இதுதான். கல்யாணி அம்மாள் இரண்டுமூன்று இடங்களில் சீட்டுக் கட்டுவது உண்டு. ஓரிடத்தில் 500 ரூபாய் சீட்டுக் கட்டிவந்தார். அதில் சுமார் 300 ரூபாய்வரை கட்டி முடித்துவிட்டார். இதற்கிடையில் சீட்டு பிடித்தவன், பணத்தோடு ஓடிவிட்டான். பாவம் கல்யாணி அம்மாள் வீட்டுச் செலவுகளைச் சுருக்கி, சிறுகச் சிறுக மிச்சம் பிடித்த பணம் இப்படி அடியோடு போய்விட்டால் எப்படி இருக்கும்?

நல்லவேளை, நான் சீட்டுக் கட்டுவது வேறு இடத்தில். இருந்தாலும் அன்றுமுதல் எனக்கு நிம்மதியான தூக்கமேகிடையாது. இது தவிர, திருச்சியில் சீட்டுக் கம்பெனி மோசடி, சென்னையில் மோசடி என்று அடிக்கடி பத்திரிகை செய்திகள் வந்து என் நிம்மதியைக் கெடுத்த வண்ணமாய் இருந்தன. என் கணவரிடமும் சொல்ல முடியாமல், ரகசியமாகவும் வைத்துக்கொள்ள முடியாமல் நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும்.

## புதிய பாதை

புது வருடப்பிறப்பன்று என் கணவர் எனக்கு ஒரு பரிசு கொண்டு வந்தார். சேலையோ, நகையோ அல்ல அது; பாஸ் புக்—தபாலாபீஸ் சேமிப்புக் கணக்குப் புத்தகம். இருப்பினும் அதுஅன்று எனக்கு தந்த மகிழ்ச்சி நான் வேறு எப்போதும் அடைந்ததில்லை. முதல் வேலையாக சீட்டுப் பணத்தைத் திரும்பப்பெற்று பாஸ் புத்தகத்தில்போட்டேன்.

**மகளிர்—குழந்தைகள் பகுதி**

**சிறு சேமிப்புக் கட்டுரை**

இது நடந்து ஐந்தாறு ஆண்டுகளாகிவிட்டன. அஞ்சலகத்தில் பணம் போடப்போட, பணம் சேரச்சேர ஆசையும் வளர்ந்தது. அது இயற்கை. நீங்களும் பணம் சேர்க்கத் தொடங்கினால் அந்த அனுபவம் புரியும். தொடர்ந்து நான் எங்கள் குழந்தைகள் பேரிலும் வளரும் மாத சேமிப்புத் திட்டத்தில் பணம் போட ஆரம்பித்தேன். இப்போது எங்கள் வீட்டில் சிறுசேமிப்புக் கணக்கு இல்லாதவர்கள் யாருமே கிடையாது அப்போதைக்கப்போது பணம் சேர்த்து, திரும்ப பெற்றதும் வீட்டுத் தேவைகளான ரேடியோ, பீரோ இப்படி ஏதாவது வாங்கி வருகிறேன். அது மட்டுமல்ல. என் மூத்த குழந்தையின் கல்லூரிப் படிப்புக்கென்று இப்போதே பணம் கட்டி வருகிறேன்.

இதை நான் உங்களிடம் கூறவேண்டிய காரணம், நான் சேமிக்கத் தெரியாமலிருந்த காலத்தில், தவறான முறையில் சேமித்தபோது அனுபவித்த சிரமங்களையும் ஒழுங்காக சிறுசேமிப்பில் பணம் போட ஆரம்பித்தபின் ஏற்படும் நிம்மதியையும் பூரிப்பையும், ஒப்பிட்டுப்பார்த்தபின் அதை என்போன்ற ஆயிரக்கணக்கான சகோதரிகள், அதுவும் குறிப்பாக கிராமப்புற மாதர்கள் தெரிந்து கொண்டு பின்பற்ற வேண்டும் என்ற என் தணியாத ஆவல்தான்.

## ஒரே கல்லில் இரு மாங்காய்

நம் சுயநலமதில் பொதுநலமும் கலந்திருக்கிறது. நாம் அஞ்சலகத்தில் போடும் ஒவ்வொரு ரூபாயும், பத்திரமாக வட்டியோடு திரும்பக் கிடைப்பதோடு, நாட்



டின் திட்டங்களை நிறைவேற்றவும் பயன்படுகிறது. ஒரே கல்லில் இரு மாங்காய் விழவைப்பது இச் சிறுசேமிப்புத் திட்டம். எனவேதான் இதை மக்கள் இயக்கமாக மாற்றவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்திப் பேசி வருகிறார், நமது மக்கள் திலகமும் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள். அதே காரணத்தால்தான் தமிழகம் இந்தியாவில் சிறுசேமிப்பில் முதலிடம் வகிக்க வேண்டும் என்கிறார், மதிப்புக்குரிய நமது மாண்புமிகு முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள்.

ஆமாம்! மிகவும் சுலபமாகச் சொல்லி விட்டார்கள்! இந்த விலைவாசி உயர்வு காலத்தில் எப்படி முடியும் என்று நீங்கள் கேட்கலாம்.

மனம் உண்டானால் மார்க்கம் உண்டு. நம் கணவன்மார்கள் சம்பாதிக்கிறார்கள். ஆயினும் குடும்பச் செலவுக்கான பணம் நம் கையில்தான் புழங்குகிறது. அதிலும் கிராமப்புறங்களில் வரவு செலவு அதிகம். அதாவது தோட்டத்தில் விளையும் பயிர் வகைகள் காய்கறிகள் ஆகியவை விற்ற பணம் தாய்மார்கள் கையில் வர வழியுண்டு. அவ்வப்போது நியாயமான செலவுகள் போக மீதிப் பணத்தை தபாலாபீஸில் போட்டு வைக்கலாம்.

## சில வழிகள்

சேமிப்புக்கான வழிகள் இதோ சில. சிக்கனம்தான் சேமிப்பின் முதற் படி. கண்ட கண்ட பொருள்கள் வாங்குவதையும் பொருள்களை வீண் விரயம் செய்வதையும் தடுத்து மிச்சப்படுத்துவது அடுத்த படி. மூன்றாவதாக ஒரு ஒழுங்குமுறை, கட்டுப்பாட்டை வகுத்துக் கொள்வது. எப்படியும் மாதம் இவ்வளவு பணத்தை மீதப்படுத்துவது என்று கொண்டால் நீங்கள் சேமிப்புக் கணக்கைத் தொடங்கவேண்டியதுதான். பணம் தானாக சேர ஆரம்பிக்கும். அடுத்து சேமிப்பதற்கு ஒரு குறிக்கோள், ஒரு லட்சியம் அவசியம். கிராமங்களில் எடுத்துக்கொண்டால் கிணற்றிற்கும் 'பம்பு செட்' வாங்குவதற்கு என்றும் வளரும் சேமிப்புத் திட்டத்தில் பணம் போட்டு வரலாம். மாடு வாங்குவதற்கு என்று பணம் சேர்க்கலாம். வசதி உள்ள விவசாயிகள் டிராக்டர்கள் வாங்குவதற்குக்கூட பணம் சேமித்து வரலாம்.

தாய்மார்களாகிய உங்களின் தேவையைப்பற்றிக் குறிப்பிடவில்லையே என்று கோபப்படாதீர்கள். உங்கள் மக்களின் நல்வாழ்வுதானே உங்கள் குறிக்கோளாக இருக்க முடியும். எனவே, நீங்கள் மகனின் மேற்படிப்புக்கென்றோ, மகளின் திருமணத்திற்கென்றோ, ஒரு குறிப்பிட்ட லட்சியத்துடன் அஞ்சலகத்தில் பணம் போட்டு வாருங்கள். பணம் சேரச்சேர நீங்கள் அதை சேமிப்பதற்காக எடுத்துக்கொள்ளும் சிறு சிரமங்கள் காற்றாய் பறந்துவிடும். தன்னை அறியாமல் பெருமிதம் அடைவீர்கள்.

சேர்ந்த பணத்தை அஞ்சலகத்தில் கணக்குத் துவக்க சிரமம் இல்லை. அதற்கு வசதியாக அரசினர் ஏறத்தாழ எல்லா அஞ்சலகங்களிலும் இந்த சேமிப்பு வங்கி வசதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள அஞ்சலகங்களில்கூட இந்த வசதி உண்டு. சமீபத்தில்தான் மத்திய அரசினர் சுமார் பத்தாயிரம் அஞ்சலகங்களில் இந்த திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளனர். இத் திட்டம் மத்திய அரசினரது எனினும், அதன் முதலீடுகளில் பெரும் பகுதி, மாநில அரசின் உபயோகத்திற்குத்தான் தரப்படுகிறது.

எனவே, சிறுசேமிப்பை ஒவ்வொருவரும் குடும்பத் திட்டமாகக் கொள்ளவேண்டும். மக்கள்மீது வரிப்பளுவைச் சுமத்தாமல், நல்ல நல்ல திட்டங்களை உருவாக்கித் தரவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட அரசுக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு இதுதான்.

கிராம நலம்
பகுதி-2
GRAMANALAM
PART-2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## அகவிலைப்படி—அகவிலைப்படி விகிதங்களில் மாற்றம்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## ALLOWANCES—Dearness Allowance—Revised rates and pay limits for eligibility—Orders issued.

தமிழக அரசு ஊழியர்களின் அகவிலைப்படி விகிதங்களை 1—6—1968 முதல் (அதாவது 1—7—1968 அன்று கிடைக்கக் கூடிய, 1968-ம் ஆண்டு ஜூன் திங்களுக்குரிய ஊதியத்திலிருந்து) கீழ்க்கண்டவாறு மாற்றியமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

| ஊதிய வரம்பு. (1) | அகவிலைப்படி விகிதம். (2) |
|---|---|
| | ரூ. பை. |
| ரூ. 90-க்கு கீழே .. | 65 00 |
| ரூ. 90-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 150-க்கு கீழே. | 91 00 |
| ரூ. 150-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 210-க்கு கீழே. | 114 00 |
| ரூ. 210-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 400-க்கு கீழே. | 137 00 |
| ரூ. 400-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 450-க்கு கீழே. | 150 00 |
| ரூ. 450-ம் அதற்கு மேலும், ஆனால் ரூ. 500-க்கு அதிகமில்லாமல். | 153 00 |
| ரூ. 500-க்கு அதிகமாக, ஆனால் ரூ. 532-க்கு அதிகமில்லாமல். | ஊதியம் ரூ. 653-க்கு எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுத் தொகை. |

உயர்மட்ட அளவில் ஊதியம் பெறுவோருக்கு அகவிலைப்படி விகிதங்களில் மாற்றம் எதுமிருக்காது.

2. அகவிலைப்படி விகிதங்களை கணக்கிடுகையில் சிறப்பு ஊதியத்தையும் கணக்கில் கொள்ளவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

3. உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் நீங்கலாக உள்ள ஏனைய ஊழியர்களுக்கு, இதே போன்று கூடுதல் அகவிலைப் படியைப் பற்றிய ஆணைகள், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையிலிருந்து தனியே பிறப்பிக்கப்படும். உள்ளாட்சி நிறுவனங்களிலும், உதவிபெறும் பள்ளிகளிலும், பணியாற்றும் ஆசிரியர்களுக்குரிய அகவிலைப்படியைப் பற்றிய ஆணைகள் அரசின் கல்வித் துறையிலிருந்து பிறப்பிக்கப் படும்.

* * *

(நிதித்துறையின் 29-5-1968ன் அரசு ஆணை எண் 464 ன் சுருக்கம்)

## சத்துணவுத் திட்டம்—சத்துணவுத் திட்ட செயற்குழுவை மீண்டும் அமைத்தல்—ஆணையிடப் படுகிறது

## Applied Nutrition Programme—Working Committee on Applied Nutrition Programme Reconstitution—Ordered

சத்துணவு திட்ட செயற்குழுவானது கீழ்க்காணும் உறுப்பினர்களைக்கொண்டு மீண்டும் அமைக்கப்படவேண்டு, மென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1 | அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை. | தலைவர் |
| 2 | கிராம வளர்ச்சி இயக்குநர், சென்னை. | உறுப்பினர் |
| 3 | விவசாய இயக்குநர், சென்னை. | ,, |
| 4 | கால்நடை பராமரிப்பு இயக்குநர், சென்னை. | ,, |
| 5 | மீன்துறை இயக்குநர், சென்னை. | ,, |
| 6 | சுகாதாரப் பணிகள் குடும்பக் கட்டுபாடு இயக்குநர், சென்னை. | ,, |
| 7 | சுகாதாரப் பணிகள் குடும்பக் கட்டுப்பாடு இணை இயக்குநர், சென்னை. | ,, |
| 8 | மகளிர் நல இயக்குநர், சென்னை. | ,, |
| 9 | அரசு துணைச் செயலாளர், சுகாதார குடும்பக் கட்டுப்பாடு துறை. | உறுப்பினர் |
| 10 | அரசு துணைச் செயலாளர் (திட்டம்) நிதித் துறை. | ,, |
| 11 | கிராமவளர்ச்சி கூட்டுஇயக்குநர் (கல்வி) | ,, |
| 12 | தலைவர், மாநில சமுதாயநல ஆயம். | ,, |

கிராம வளர்ச்சி இயக்குநர் உறுப்பினராக இருப்பதோடு, குழுவின் செயலாளராகவும் இருப்பார்.

2. வேலைகளின் வளர்ச்சி பற்றி அறிவதற்கு, தேவை எழும்போதெல்லாம் குழுவின் கூட்டம் நடைபெறும் வேலையின் முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கு, அவசியமேற்படும்போது, குழு சுற்றுப்பயணம் மேற் கொள்ளலாம். குழுவின் தலைமையிடம் சென்னையில் இருக்கும்.

கிராமவளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25–3–1968 நாளிட்ட அரசு ஆணை எண் 591–ம் மற்றும் அதே துறையின் 20–4–1968 குறிப்பாணை எண் 49784/68–ன் சுருக்கம்

## புத்தகங்களும் வெளியீடுகளும்—கவிசுப்பிரமணிய பாரதியாரின் நூல்கள்—விற்பனைசம்பந்தமாக

## Books and Publications—Works of Kavi Subramania Bharathi—Availability—Regarding

கீழ்க்காணும் கவி சுப்பிரமணிய பாரதியாருடைய நூல்கள் தமிழக எழுதுபொருள், அச்சு இயக்குநரிடம் விலைக்குக் கிடைக்கும்.

| வரிசை எண் (1) | நூலின் பெயர் (2) | ஒரு நூலின் விலை (3) ரூ. | பை. | எழுதுபொருள் அச்சு இயக்குநரிடம் இருக்கும் மொத்த பிரதிகள் (4) |
|---|---|---|---|---|
| 1 | வேதாந்த பாடல்கள் | 0 | 35 | 571 |
| 2 | குயில் | 0 | 50 | 1391 |
| 3 | சுயசரிதையும் பரிபாடல்களும் | 0 | 81 | 357 |
| 4 | பதஞ்சலியோக வித்திரம் | 0 | 37 | 598 |
| 5 | வேதரிஷிகளின் கவிதை | 0 | 37 | 548 |
| 6 | பகவத் கீதை முன்னுரை | 0 | 37 | 411 |
| 7 | சந்திரிகையின் கதை | 0 | 87 | 143 |
| 8 | தராசு | 0 | 50 | 514 |
| 9 | கட்டுரைகள் | 1 | 25 | 916 |
| 10 | கட்டுரைகள் கலைகள் | 1 | 00 | 74 |
| 11 | சமூகம் | 1 | 75 | 280 |
| 12 | பாரதி கதை திரட்டு | 0 | 25 | 400 |
| 13 | பாரதி மணி மலர் | 0 | 85 | 813 |
| 14 | அக்கினி | 1 | 00 | 25 |
| 15 | பாரதியாரும் அவருடைய நூல்களும் | 0 | 25 | 15 |
| 16 | பாரதி விளக்கம் | 0 | 50 | 847 |
| 17 | பாரதி நூல்கள் கவிதை | 1 | 62 | 16 |
| 18 | பாரதி நூல்கள் புத்தகம் I | 5 | 00 | 826 |
| 19 | பாரதி நூல்கள் புத்தகம் II | 5 | 00 | 849 |
| 20 | பாரதி நூல்கள் புத்தகம் III | 5 | 00 | 810 |
| 21 | பாதி நூல்கள் புத்தகம் IV | 5 | 00 | 898 |

மேற்காணும் வெளியீடுகளை, ஊராட்சி ஒன்றிய பள்ளித் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, நிதி வசதிக் கேற்ப, இந்த நூல்களை தமிழக எழுதுபொருள், அச்சு இயக்குநரிடமிருந்து நேராகவே விலைக்கு வாங்குமாறு அவர்களுக்கு கூறும்படி, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கிராமவளர்ச்சி இயக்குநரின் 1968–ம் ஆண்டு மார்ச் 2–ம் நாளிட்ட சுற்றறிக்கை குறிப்பாணை எண் 80776/67–ன் சுருக்கம்

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு—ஊராட்சி ஒன்றிய வாரியான மக்கள் தொகைக் கணக்கு

## Census Figures, 1961—Panchayat Union-wise figures of population-Communicated

அலுவலக காரியங்கள் அனைத்திற்கும் (அரசு மானியங்கள் பெறுவது உட்பட) இந்த மக்கள் தொகைக் கணக்கே அதிகாரப்பூர்வமானதாக பின்பற்றப்படவேண்டும் என்பதற்காக, 1961-ம் ஆண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிலுள்ள மக்கள் தொகை கணக்குகள் (மக்கள் தொகை கணக்கெடுப்பு கண்காணிப்பாளரால் தரப்பட்டவாறு), மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட வருவாய் அதிகாரிகள், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த மக்சள் தொகை எண்ணிக்கைகளை வெளியிட்ட பிறகு, ஊராட்சி ஒன்றியங்களின் எல்லை வரம்புகளில், சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதால், மேற்கண்ட அரசு குறிப்பாணையில் கண்டுள்ள மக்கள் தொகைக் கணக்கிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் எல்லை வரம்புகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாறுதல்களைக் கருத்தில் கொண்டு 1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் சரியான மக்கள் தொகைக் கணக்கை, கிராம வளர்ச்சி இயக்குநர், தமது 9-1-1968 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு தற்போது அளித்துள்ளார்.

2. இந்தக் குறிப்பாணையின் இணைப்பில் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள மக்கள் தொகை எண்ணிக்கையையே அலுவலக காரியங்கள் அனைத்திற்கும், அதிகாரப்பூர்வமான எண்ணிக்கையாக பின்பற்றவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

### இணைப்பு

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை | வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | **வட ஆர்க்காடு (வடக்கு வேலூர்)** | | | **வடஆர்க்காடு (தெற்கு வேலூர்)** | |
| 1 | கே.வி. குப்பம் | 73,250 | 1 | துரிஞ்சாபுரம் | 62,529 |
| 2 | ஆர்க்காடு | 69 625 | 2 | கீழ்பெண்ணாத்தூர் | 72,617 |
| 3 | திருப்பத்தூர் | 159,472 | 3 | கலசப்பாக்கம் | 74,801 |
| 4 | சோளிங்கபுரம் | 92,189 | 4 | போளூர் | 110,655 |
| 5 | வாலாஜா | 46,274 | 5 | வெம்பாக்கம் | 75,921 |
| 6 | காவேரிப்பாக்கம் | 93.141 | 6 | பெரணமல்லூர் | 64,493 |
| 7 | காணியம்பாடி | 58,919 | 7 | சேத்துப்பட்டு | 70,561 |
| 8 | நெமிலி | 82,118 | 8 | ஆரணி | 61,581 |
| 9 | கந்திலி | 64,490 | 9 | செங்கம் | 81,838 |
| 10 | மாதனூர் | 50,298 | 10 | செய்யாறு | 75 647 |
| 11 | பேரணம்பட்டு | 109,593 | 11 | அனக்காவூர் | 58,288 |
| 12 | அரக்கோணம் | 47,607 | 12 | கஸ்தம்பாடி | 66,682 |
| 13 | திமிரி | 92,888 | 13 | வந்தவாசி | 82,642 |
| 14 | ஆலங்காயம் | 61,216 | 14 | தெள்ளார் | 74,162 |
| 15 | காட்பாடி | 65,656 | 15 | திருவண்ணாமலை | 77,285 |
| 16 | குடியாத்தம் | 86,345 | 16 | புதுப்பாளையம் | 55,726 |
| 17 | நாட்ருபள்ளி | 49 559 | 17 | தண்டராம்பட்டு | 85,139 |
| 18 | அணைக்கட்டு | 85,378 | | | |
| 19 | வேலூர் | 61,681 | | | |
| | | 1,449,699 | | | 1,250,567 |

**கிராம நலம்**

**ஆண்டு சந்தா ரூ. 2.**

**தனிப் பிரதி விற்பனைக்குக் கிடையாது.**

### தென் ஆர்க்காடு (வடக்கு கடலூர்)

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1 | மேல்மலையனூர் | 86,267 |
| 2 | உளுந்தூர்பேட்டை | 76,987 |
| 3 | செஞ்சி | 95,977 |
| 4 | திருநாவலூர் | 67,704 |
| 5 | கோலியனூர் | 78458 |
| 6 | மரக்காணம் | 93,079 |
| 7 | காணை | 75,478 |
| 8 | திருவெண்ணெய் நல்லூர் | 77,169 |
| 9 | ஒலக்கூர் | 59,090 |
| 10 | முகையூர் | 104,967 |
| 11 | வானூர் | 90,934 |
| 12 | திருக்கோயிலூர் | 73,284 |
| 13 | கண்டமங்கலம் | 80,517 |
| 14 | விக்ரவாண்டி | 78,663 |
| 15 | மயிலம் | 75,371 |
| 16 | வல்லம் | 72,199 |
| | | 1,286,144 |

### தென் ஆர்க்காடு (தெற்கு கடலூர்)

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1 | கீரப்பாளையம் (ஒரத்தூர்) | 75,102 |
| 2 | மேல்புவனகிரி | 70,049 |
| 3 | பண்ணுருட்டி | 97,888 |
| 4 | குறிஞ்சிப்பாடி | 110,850 |
| 5 | சின்னசேலம் | 80,566 |
| 6 | மங்களூர் | 89,443 |
| 7 | கள்ளக்குறிச்சி | 80,075 |
| 8 | தியாகதுருகம் | 60,332 |
| 9 | பரங்கிப்பேட்டை | 84,206 |
| 10 | நல்லூர் | 80,341 |
| 11 | கடலூர் | 97,774 |
| 12 | நெல்லிக்குப்பம் | 115,655 |
| 13 | குமராட்சி | 80,274 |
| 14 | கம்மாபுரம் | 90,031 |
| 15 | சங்கராபுரம் | 75 435 |
| 16 | ரிஷிவந்தியம் | 66,890 |
| 17 | கல்ராயன் குன்று | 20,180 |
| 18 | காட்டுமன்னார் கோயில் | 83,672 |
| 19 | விருத்தாசலம் | 87,057 |
| | | 1,545,820 |

—தொடரும்.

### எதிர் அட்டைப் பக்கம்—பட விளக்கம்:

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், கீழ்த்திசை நாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய, சென்னை வழியாக புறப்பட்டுச் சென்றபொழுது, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவரை வழியனுப்பி வைத்தார் (19-5-68).

## இந்த இதழில்...


| | பக்கம் |
|---|---|
| தலைவாயிலின் திறவுகோல் .. .. | 1 |
| மூன்று உண்மைகள் .. .. | 3 |
| பொன்னி வள நாட்டினரே புறப்படுவீர் .. | 5 |
| நகராட்சித் தலைவர்கள் ஆணையாளர்கள் கூட்டுமாநாடு | 7 |
| எழுத்தாளர் கார்த்தி-அகிலன் .. | 9 |
| கூட்டுறவு இயக்கம் எட்டுச் சுரைக்காயா? .. | 13 |
| ஆளுநர் மாளிகையிலே (சிறப்புக் கட்டுரை) .. | 29 |


## அடுத்த இதழில்...

முதல் அமைச்சர்கள் மாநாடு—படங்களுடன்

திருவள்ளுவர் (சிறப்புக் கட்டுரை)

—திரு மு. ரா. பெருமாள் முதலியார்

அனைத்துலகுக்கும் அதுவே பொதுமறை

திருவள்ளுவர் ஆண்டு—ஆராய்ச்சிக் கட்டுரை

விலங்கின வளர்ப்பு—நகராட்சிகளின் பொறுப்புகள்.


ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு . ஆர். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ்.
(பொறுப்பு)

ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
Wrapper printed at Vadapalani Press, Madras-26.




# வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை

(வரையறுக்கப்பட்டது)

வட புதுப்பட்டு அஞ்சல், ஜோலார்பேட்டை வழி

தமிழ்நாடு

| | | |
|---|---|---|
| அங்கிகாரம் பெற்ற பங்கு மூலதனம் | .. | ரூ. 1,00,00,000 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 79,82,000 |
| ஆலையில் கரும்பு அரைப்புத் திறன் | .. | 1250 மெ. டன்கள். |
| ஆலையின் விவகார எல்லை | .. | திருப்பத்தூர், வேலூர், குடியாத்தம், தாலூகாக்கள். (வட ஆர்க்காடு). |

அங்கத்தினர்கள், அலுவலர்கள், தொழிலாளர்கள் யாவரின் உழைப்பாலும் ஒத்துழைப்பாலும் ஆலையின் உற்பத்தி முதல் தரமாகவும், தரத்தில் உயர்ந்தும் ஓங்கி நிற்கிறது.

அங்கத்தினர்களின் நல்வாழ்வே எங்கள் குறிக்கோள்.

எச். எச். ஷாகீர்,
பொது மேலாளர்.

மு. பொ. வடிவேல்,
தலைவர்.

தந்தி : "SUGARS" (ஆம்பூர்)

தொலை பேசி : 264, 269 (ஆம்பூர்)

நிறுவனம் : 1942

தந்தி : சென்ட்ரல்ஸ்
தொலைபேசி எண் : 50

# தென்னார்க்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்,

**நெ. இ. 1487, கடலூர்-1.**

* * *

மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன உரங்கள், சங்கத்தின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. மற்றும் தரமான நெல், அரிசி, பருப்பு வகைகள், கோதுமை பண்டங்கள், சர்க்கரை, காப்பிக்கொட்டை, மற்றும் பல சரக்கு சாமான்கள் மொத்த விற்பனை செய்யப்படுகின்றன. குழந்தை உணவுகளும், அலங்கார சாமான்களும், சைக்கிள் டயர், டியூப்களும் விற்பனை செய்யப் படுகின்றன.

கூட்டுறவு மார்க் கலப்பு உரங்கள், நெல், கரும்பு, வேர்க்கடலை போன்ற பயிர்களுக்கு ஏற்றவாறு சங்கத்தில் தயாரிக்கப்படுகின்றன. எங்கள் கலப்பு உரங்கள் விவசாயிகளுக்கு நல்ல மாசூலை அளிக்கின்றன.

கடலூர் முதுநகர் பக்தவத்சலம் மார்க்கெட்டில் உள்ள சங்கத்தின் ஜவுளி விற்பனை நிலையத்தில், தற்கால நாகரீகத்திற்கேற்ற நவீன ரகங்களில் பல தரப்பட்ட மில்களின் வேஷ்டி, புடவைகளும், சர்ட்டிங், கோட்டிங் மற்றும் நைலான், சாட்டின், டெரிகாட்டன், டெர்லின், சில்க் வகையராக்களும், திருப்பூர் ''ஸ்டைலக்ஸ்'' பனியன்களும், நேர்த்தியான கைத்தறி துணிகளும் நயமான விலையில் கிடைக்கும்.

''சேவையே எங்கள் குறிக்கோள்''

மு. சுப்பையா, பி.காம் (ஹானர்ஸ்)
கூட்டுறவு துணைப் பதிவாளர்/செயலாளர்.

டி. டீ. முத்துக்குமாரசாமி நாயுடு,
தலைவர்.